

பிரசுரம்

EE/83

வீரகேசரி பிரசுரம்: 43

# கனவுகள்

# வாழ்கின்றன

‘‘[illegible]விதா’’

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160.
கொழும்பு.

# "Kanavugal Valkinrana"

by

Miss Indradevi Subramaniyam

*FIRST EDITION*

JUNE 1976

*COPY RIGHTS*

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM 43

PRICE Rs. 3/90

Published by

VIRAKESARI
P.O.Box 160, COLOMBO.

Sole Distributors:

EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஆசிரியர் உரை

'கனவுகள் வாழ்கின்றன' என்னும் என் கற்பனையில் மலர்ந்த முதல் நாவலைத் தங்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாவலை மனமுவந்து ஏற்று வீரகேசரி பிரசுர வரிசையில் வெளியிடும் வீரகேசரி புத்தக வெளியீட்டு இலாகாவினருக்கு என் மனப்பூர்வமான நன்றிகள் உரியன.



சிறுகதைகள் பலவற்றை நான் எழுதியுள்ள போதிலும் நாவலைப் பொறுத்தவரை இதுவே என் முதல் முயற்சியாயினும், இது வீரகேசரி பிரசுரங்களில் ஒன்றாக வெளிவரும் பேற்றைப் பெற்றிருப்பது குறித்து நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

எனது இம்முதல் முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து உற்சாகமூட்டிய வீரகேசரி வெளியீட்டு இலாகா நிர்வாக அதிபர் மதிப்புக்குரிய திரு. சி பாலச்சந்திரன் அவர்கட்கு என் இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கவிதா"

## அடுத்த வீரகேசரி பிரசுரம்:

ஒரு பெண் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று கவிஞர்கள் கனவு கண்டார்களோ அப்பண்புகளெல்லாம் கொண்ட ஒரு புதுமைப் பிறவி இந் நாவலின் கதாநாயகி.

**'புரட்சிபாலன்'** அளிக்கும்

## 'உமையாள்புரத்து உமா'

மறக்கமுடியாத சமூக நாவல்!

வீரகேசரி பிரசுரம்: — 44.

# பதிப்புரை

ஈழத்திலே நிச்சயமாக இலக்கிய விழிப்புத் தோன்றி விட்டதென்பதை நாம் அடித்துக்கூற முடியும். எண்ணிக் கையில் மட்டும் நாவல்கள் பல கடந்த இரு வருடங்களில் வெளிவந்துள்ளன என்பதால்மட்டும் இதைக் கூறவில்லை. இக் குறுகிய காலத்தில் எத்தனை புதிய எழுத்தாளர்கள் ஈழத்து இலக்கியப்பரப்பில் தோன்றியுள்ளார்கள். அவர் களின் ஆக்கங்கள் வாசகரிடையே பெற்றுள்ள வரவேற் பென்ன என்பதே நாம் சிந்திக்கவேண்டியது. இவ்வாறு நோக்கின் இவ் விழிப்புக்கு முக்கிய காரணம் ஈழத்து தமிழ் வாசகர்களே என்பது புலனாகின்றது. எழுத்தாளரின் கொள்கை என்ன? பூர்வீகம் என்ன? குலம், கோத்திரம் என்ன என்பதையிட்டு இந்நாட்டு வாசகர்களுக்கு அக் கறையில்லை. அவர்கள் எழுத்தாளர்களின் படைப்புகளை மட்டும் சீர்தூக்கிப் பார்க்கிறார்கள். திறந்த மனத்தோடு வரவேற்கிறார்கள். வாசகரிடையே காணப்படும் இந்தப் பரந்த சீரிய மனப்போக்கு, இந்நாட்டு இலக்கிய விமர்சக ரிடையும், இலக்கிய ஆய்வாளரிடத்தும் இருக்குமானால் எவ்வளவு நன்றாக இருக்குமென எண்ணத் தோன்றுகின் றது.

இந் நாவல்மூலம், ஈழத்து வாசகர்களுக்கு ஒரு புதிய பெண் எழுத்தாளரை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

பதிப்பாளர்.

# கேசரி -- மித்திரன்
# புத்தகக் களஞ்சியங்கள்

எமது வீரகேசரி, ஜனமித்திரன் வெளியீட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் கீழ்க்காணும் எமது கேசரி - மித்திரன் புத்தகக் களஞ்சிய விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:-

கொழும்பு:

- ராஜேஸ்வரி ஹோட்டல்,
  69, ஒல்கொட் மாவத்தை

புறக்கோட்டை

- வி. வடிவேல், மலர்விழி ஸ்டோர்ஸ்,
  25, செக்கு வீதி.
- லீலா ஸ்டோர்ஸ், 249, நொரிஸ் ரோட்

கொம்பனித் தெரு:

- ரத்னு ஸ்ரோர்ஸ், 130, மலேவீதி

பம்பலப்பிட்டி:

- கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்,
  3 ஏ, சிறபரி கார்டின்ஸ், காலிவீதி

வெள்ளவத்தை:

- விஜயலக்ஷ்மி புத்தகசாலை, 248, காலி வீதி
- ரிஸ்வீஸ், 114, காலி வீதி
- டானியல் புத்தக நிலையம்,
  248, காலி வீதி

முகத்துவாரம்:

- எஸ் கருப்பையா பிள்ளை,
  308, முகத்துவாரம் வீதி, கொழும்பு-15

தெமட்டகொடை:

- எம் கிருஷ்ண பிள்ளை, மொறயஸ் ஸ்ரோஸ்.
  580, தெமட்டகொடை ரோட்.

நீர்கொழும்பு:

- திருமதி எம். நடராஜா, ஸ்ரீகணேசன் கபே,
  180, பிரதானவீதி, நீர்கொழும்பு

களுத்துறை:

- வி. ரி. சிவசுப்பிரமணியம்,
  ரி. எஸ். கே. வி. பிரதர்ஸ், 606, பிரதானவீதி
  களுத்துறை தெற்கு.

யாழ்ப்பாணம்:

- வீரகேசரி கிளைக் காரியாலயம்.
  82/2, ஸ்ரேஷன் ரோட்,
- ராஜன் புத்தகசாலை, 12, பஸ் ஸ்டாண்ட்.
- ராஜன் புக் சென்ரர்,
  57/ஏ, மொடல் மார்க்கட்.
- ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
  234, கே.கே.எஸ்.ரோட்.
- எஸ். பொன்னம்பலம்,
  1, கஸ்தூரியார் ரோட்.
- பூபாலசிங்கம் புத்தகநிலையம்.
  4, பஸ் ஸ்டாண்ட்.
- புகையிரதநிலைய புத்தகசாலை.
  புகையிரதநிலையம்.

நல்லூர்:

- கே. கிருஷ்ணனந்தன்,
  ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்,
  254, பருத்தித்துறைவீதி.

பண்டத்தரிப்பு:

- கே.சுந்தரம்பிள்ளை, சைவா[illegible] ஷாப்

சாவகச்சேரி:

- கே.கே.ஐயாத்துரை,
  சரஸ்வதி புத்தக நிலையம்.

கைதடி:

- ஏ. கந்தையா,
  சிவசக்தி ஸ்ரோர்ஸ், கைதடி சந்தி.

பளை:

- ஆர். பத்மநாதன்,
  டியூரோ சொப், கண்டி வீதி.

மல்லாகம்:

- வி. குமாரசாமி, கோர்ட் ரோட்.

மாவிட்டபுரம்:

- திருமதி எம். செல்லையா,
  ராஜா ஸ்ரோர்ஸ்.

மானிப்பாய்:

- கே.ரி. நாயகம்,
  நாயக பாலன் ஸ்ரோர்ஸ்.

பருத்தித்துறை:

- எஸ். கண்ணன்.
  வட இலங்கை புத்தகசாலை.

நெல்லியடி:

- லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், காவெட்டி.

இருபாலை:

- ஆர். ராஜதுரை.
  லக்கி பான்ஸி ஹவுஸ்.

வல்வெட்டித்துறை:

- கே. அருட்சோதி,
  கலைச்சோலை புத்தக நிலையம்.

சுன்னாகம்:

- தனலக்ஷ்மி புத்தக நிலையம்,
  பிரதான வீதி.

கீழ்மாகாணம்:—
திருகோணமலை:

- வி. ஏ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்,
  43, பிரதான வீதி.

மூதூர்:

- ரீ. கோபாலசிங்கம்,
  நொக்ஸ் வீதி, மூதூர்.

மட்டக்களப்பு:

- சக்தி நூல்நிலையம், 53, திருகோணமலை வீதி.

கல்முனை:

- மணமகள் புத்தகசாலை, 29, பிரதானவீதி.

ஏறுவூர்:

- சிவநடராஜா ஸ்ரோர்ஸ், 105, பிரதானவீதி.

அக்கரைப்பற்று:

- கே. கந்தசாமி,
  பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், பாகாமம் றேட்.

களுவாஞ்சிக்குடி:

- வி. கந்தசாமி,
  ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

காத்தான்குடி:

- ஏ. கே. மொகமட்,
  டிவிஷன் இல: 6, 105, பிரதான வீதி.

வாழைச்சேனை:

- கே. முத்துராஜா,
  நேசம்ஸ், 540, பிரதான வீதி.

வவுனியா மாவட்டம்:
கிளிநொச்சி:

- குமரன் ஸ்ரோர்ஸ்,
  135, புகையிரதநிலைய வீதி.

வவுனியா:

- ஏ. செல்வரத்தினம்,
  கவிதா ஸ்ரோர்ஸ், 5, B பஸ் ஸ்ராண்ட்.

மன்னார்:

- ஏ. கதிரவேலு. கலாவதி கபே.

பரந்தன்:

- ஆறுமுகம் அன் சன்ஸ்,
  பிரதான வீதி.

மலையகம்:

இரத்தினபுரி:

- கே.வேலுப்பிள்ளை, 223, பிரதானவீதி.

பண்டாரவளை:

- ஆர்.கே.செல்வத்துரை,
  பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ்
  71, பிரதான வீதி.

பதுளை:

- மீனும்பிகா நியூஸ் ஏஜண்ட்.
  235, லோவர் வீதி.

நுவரெலியா:

- நியூ ஜோதி விலாஸ்,
  12, மொடல் சொப்.

ஹட்டன்:

- இம்பீரியல் பிரஸ், 96, பிரதான வீதி.

தலவாக்கொல்லை:

- பி.தங்கசாமி நாடார்.
  22, பிரதான வீதி.

நாவலப்பிட்டி:

- எஸ்.பொன்னம்பலம்,
  ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ், 1, கம்பளை ரோட்.

கம்பளை:

- ஏ.சுந்தரராஜா, 20, நுவரெலியா ரோட்.

மாத்தளை:

- எஸ்.எஸ்.அன்னலிங்கம்,
  ஸ்ரீகாந்தா ஸ்ரோர்ஸ்,
  73, திருகோணமலை வீதி.

கண்டி:

- கலைவாணி புத்தக நிலையம்,
  130, திருகோணமலை வீதி.
- வீரகேசரி கிளைக் காரியாலயம்,
  இன்சூரன்ஸ் பில்டிங், 23 1/8, தலதா வீதி.
- பொப்பியூலர் ஸ்ரோர்ஸ்,
  210, முதலாம் மாடி, மத்திய சந்தை.
- யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ்,
  51, யட்டிநுவர வீதி.
- லங்கா சென்ட்ரல் புத்தகசாலை,
  84, கொழும்பு வீதி.

ஆள்கரனேயா:

- எஸ்.ரெங்கசாமி ரெட்டியார்.
  ஸ்ரீ கிருஷ்ணு ஸ்ரோர்ஸ், 110, ருகலை பஸார்.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# இதயங்கள் அழுகின்றன

## 1.

சந்தடி அடங்கி இருள் மெல்லப்பரவத்தொடங்குகிறது.

மாநகர சபையின் தெரு விளக்குகள், இயற்கையின் மோன நிலைக்குச் சவால் விட்டு இருளை விரட்டும் பணியில் பளிச்சிடுகின்றன.

தாமோதரம் தெருமுனையில் நின்று கொண்டிருந்த மின்சாரக் கம்பத்திற்கு அருகில் வந்ததும், வேகமான தனது நடையைத் தளர்த்தி அந்த மின் விளக்கு உமிழ்ந்த மங்கிய ஒளியில் இடது கையில் கட்டியிருந்த பழங்கால 'ரோமர்' கைக்கடிகாரத்தை கண் அருகில் தூக்கிப் பார்த்தார்.

ஆறு இருபது.

இன்னும் பதினைந்து நிமிடம்!

இது வரை வலது கையின் விரல்களில் தொங்கி இழு பட்டுக் கொண்டிருந்த கனத்த பிரம்புக் கூடையை இடது கைக்கு மாற்றிக் கொண்டு நடையின் வேகத்தைத் துரிதப் படுத்தி கால்களை எட்டிப் போட்டார்.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் மூன்றும் வகுப்பிற்கான டிக்கட் கொடுக்குமிடத்தில் எதிர்பார்த்ததைப் போல கூட்டம் அவ்வளவாக இல்லை என்ற உண்மையை சந்தியால் திரும்பும் போதே நோட்டம் விட்டுக் கொண்டதன் விளைவாக மனதில் சிறிது நிம்மதி கொண்டவராக தாமோதரம் மீண்டும் நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டார்.

தவிர்க்கமுடியாத எத்தனையோ சுமைகளையும் அவலங்களையும் தாங்கித் தாங்கி அனுபவித்து காய்த்து மரத்துப் போன நிலையில் தாமோதரம் இப்போது இருந்த போதிலும் இடது கையில் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பிரம்புக் கூடையின் சிறிய கனத்தைத் தாங்கும் சக்தியை இழந்தவராக வலித்துக் கொண்டிருக்கும் இடது கைக்கு ஓய்வு கொடுத்து அந்தப் பிரம்புக்கூடையை மீண்டும் வலது கைக்கு மாற்றி இடதுகையை வாலாமணியின் சைட் பைக்குள் போட்டு கனத்து கல கலத்துக் கொண்டிருந்த சில்லறைகளை வெளியே எடுத்து டிக்கட் வாங்குவதற்குத் தன்னைத்தயார் படுத்திக் கொண்டார்.

புகையிரதநிலைய முன் விறுந்தையில் ஏறி மூன்றும் வகுப்பிற்குரிய கவுண்டரின் முன்னால் நின்று கொண்டிருந்த நாலு பேருக்குப்பின்னால் ஐந்தாவது ஆளாக நின்று கொண்டார்.

பிரம்புக்கூடையை கீழே காலுக்கருகில் வைத்துவிட்டு கைலேஞ்சியை வெளியே எடுத்து முகத்திலும் கழுத்திலும் துளிர்த்து வடிந்த வியர்வையை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

''கஜூ.........கஜூ............கஜூ..............''

தாள சுருதியோடு கூவிக் கொண்டு பையன் ஒருவன் அவருக்குப் பக்கத்தில் வந்து நின்று பொலித்தீன் பையில் அடங்கிய கஜூ பக்கட் ஒன்றை நீட்டினுன்.

''ஐயா! கஜூ வாங்கல்லியா? கஜூ பக்கட் ஒண்டம் பது.''

தாமோதரம் எதுவுமே பதில் சொல்லவில்லே. பக்கத்தில் நின்று கொண்டிருந்த அந்தப் பையனின் கவர்ச்சியான தோற்றத்தை அவருடைய கண்கள் மேய்ந்தன.

அவனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயது தான் இருக்கும். பெற்ருேரின் அன்பில் திளேத்து சிட்டுக் குருவி போல புத்தகங்களேக்காவிக்கொண்டு எந்தவித கவலேயுமில்லாமல் பாடசாலேக்குப் போய்ப் பாடங்களேப் படிக்க வேண்டிய பிஞ்சுவயது. இந்த வயதில் ரெயில்வே ஸ்டேசனில் கத்திக் கத்தி வியாபாரம் பண்ணுகிருன் என்ருல் அவனுடைய வீட்டில் என்னென்ன கஷ்டமோ?

இப்படி மனதில் நினைத்துக் கொண்டார் தாமோதரம் வேறு ஒரு சந்தர்ப்பமாயிருந்தால் அந்தப் பையனைக் கூப்பிட்டு அருகில் இருத்தி ஆறுதலாக அவனுடைய பூர்வீக வரலாற்றைக் கேட்டிருப்பார். ஆனுல், அதற்கு இது சரியான நேரம் இல்லே.

இன்று வழக்கத்திற்கு மாருக பிரயாணம் செய்வோர்களின் கூட்டம் குறைவாக இருக்கிறதினுல் பாவம் அவனுக்கு வியாபாரம் அவ்வளவாக போயிருக்காது என்ற எண்ணம் அவருள் முளேவிடத் தொடங்கியதும் பையனின் வியாபாரத்தில் அனுதாபம் கொண்டார்.

பையனுக்காக கஜூ ஒரு பக்கட்டை வாங்கலாமென்ருல் ஏற்கனவே நேற்று பஸ் ஸ்ராண்டுக்கு அருகில் நூறு இரண்டெழுபத்தைந்துக்கு வாங்கிப் போட்டிருந்த கஜூ கூடைக்குள் இடம் பிடித்துக் கொண்டிருப்பது நினைவுக்கு

வந்தது. அதற்கும் அதிகமாக வாங்கிப் போக வீட்டில் நாலைந்து பிள்ளைகள் இருந்தாலும் பரவாயில்லை. ஒரே ஒரு ஆத்மா — அவரின் மனைவி சிவகாமி தான் வீட்டில். பிறகேன் அதிகம்?

''கஜூ நூறு எவ்வளவு?''

தாமோதரத்திற்குப் பின்னால் அப்போது தான் அவசரமாக வந்து நின்றிருந்த ஒருவர் கேட்டார்.

''நூறு மூன்று ரூபா!''

''இரண்டம்பதுக்குத் தாரீயா?''

''இரண்டு தொண்ணூறுக்கும் இல்ல.''

பையன் கறாராகச் சொல்லிவிட்டு ஸ்டேசன் வாசலில் டக்ஸியில் வந்து இறங்கிய குடும்பம் ஒன்றை நோக்கி நழுவினான்.

''பொடியன்ர வாயப்பாரன்! அங்க டவுன்ல நூறு பருப்பு இரண்டரைக்கு விக்குது. இவனுகள் கொள்ளை அடிக்கப் பார்க்கிறானுகள்.''

நூறு பருப்பு இரண்டெழுவத்தைந்துக்கு வாங்க முடியாத ஆத்திரத்தில் பின்னால் நின்றவர் திட்டித் தீர்த்துவிட்டு கையிலிருந்த சுருட்டை வாயில் வைத்துப்புகையை உள்ளிழுக்கிறார்.

தாமோதரத்திற்குச் சிரிப்பு வந்தது.

'எவ்வளவு கெதியா அபிப்பிராயம் சொல்லிவிடுறாங்க. டவுன்ல கஜூ நூறு இரண்டரைக்கு விற்கிறாங்க எண்டு எவ்வளவு சத்தமாகச் சொல்றார்? இப்படிச் சொல்லிப் போட்டு பொடியனை தவிச்ச முயல் அடிக்கப் பார்க்கிறாங்களா? நானுந் தான் நேற்று முழுக்க முழுக்க டவுன், மார்க்கட், பஸ் ஸ்ராண்ட் எல்லா இடத்தையும் சுத்திச் சுத்தி களைச்சுப் போனன். நூறு கஜூ ரெண்டெழுவத்தைந்துக்குக் குறையத் தரமாட்டன் எண்டுட்டாங்க.

ஏழையா இருந்தா எல்லாருக்கும் இளப்பமா தெரியுது போல'.

முன் நின்றவர்கள் நகர்கிறார்கள். கவுண்டர் நெருங்க தாமோதரம் கூடையைக் கையில் தூக்கிக் கொண்டார்.

''தம்பலகமத்திற்கு ஒண்டு.''

கவுண்டரில் இருந்த கிளாக்கர் தூக்கிப் போட்ட டிக் கட்டையும் மீதிச் சில்லறையையும் வறுகி இழுத்தெடுத்த வாறு பிரம்புக் கூடையோடு பிளட்போமுக்குள் நுழைந் தார்.

பெருமூச்சு விட்டு புகையைக் கக்கிக் கொண்டிருந்த எஞ்சினோடு தொடுத்தவாறு இழுபட்டு ஓடுவதற்குத்தயா ராக நின்றிருந்த பெட்டிகளை ஒரு முறை நோட்டம் விட் டார். எந்தப் பெட்டியிலும் பிரயாணம் பண்ணலாம். ஆனால், இடையில் உபத்திரவம் இறங்கி ஏறவேண்டும். ஆனால், அதோ தொங்கலில் மாட்டப்பட்டிருக்கிறதே பழைய பெட்டி. அதில் ஏறிற்று இடையில ஒரு இடமும் இறங்கத் தேவையில்ல. அது தான் திருகோணமலைக்குப் போற பெட்டி.'

'பெட்டியில லைட் இருக்குதோ இல்லையோ தெரியாது. முந்தநாள் அப்படித்தான். 'மலை'யிலிருந்து வெளிக்கிடும் போதே 'லைட்' இருக்கவில்லை. இரவு முழுவதும் பெட்டிக் குள்ள 'கும்'மென்ற இருட்டுத் தான். வீட்டில சிவகாமி கட்டித் தந்த சோர்த்துப் பார்சல் என்றபடியால் அந்த இருட்டுக்குள்ளையும் பயமில்லாமல் அள்ளிச்சாப்பிட முடிந் தது. ஆனா...... இண்டைக்கு லைட் இல்லையெண்டா அதோ கதி தான். ஸ்டேசனுக்கு கிட்டவுள்ள ரெயினிங் கொலிஜ் ஜிக்கு முன்னால் இருக்கிற 'கண்ணகி பவானி'ல் இடியப் பம் பார்சலாக எடுத்துக் கொண்டு வந்திருக்கிறன். இடி யப்பம் திண்ட பாடுதான்.'

இப்படி எண்ணிக் கொண்டே தாமோதரம் அவசர மாக ஓடிப்போய் தொங்கலில் மாட்டப்பட்டிருந்த 'மலை'ப்

பெட்டிக்குள் ஏறினூர். அவருக்காகவே 'றிசேவ்' செய்தது போல வெறுமையாகிக் கிடந்த 'கோணர் சீற்' ஒன்றில் குந்திய பிறகு தான் அவருக்கு மூச்சு ஒன்று பெரிதாகப் புட்டுக் கொண்டு வந்தது.

''இனியென்ன? மலைக்குப் போகுமட்டும் கவலையில்லை'' என்று தனக்குத் தானே முணுமுணுத்துக்கொண்டார்.

கைகளை மேலே உயர்த்தி உடம்பை வில்லாக வளைத்து சோம்பல் முறித்துக்கொண்டார். வாலாமணியின் கைகளை முழங்கை வரை மடித்து விட்டு நெஞ்சுப் பொத்தான்களைத்திறந்து விட்டபோது வாய் பொச்சடித்தது. புகை ஒன்று அடித்தால் என்ன என்ற எண்ணம் திடீரென கிளைவிட்டது.

காலடியில் வைத்திருந்த அந்தப் பிரம்புக்கூடையைத் தூக்கி எடுத்து தானிருந்த கோணர் சீற்றில் தனது பிரதிநிதியாக வைத்து விட்டுப் பெட்டியின் கதவைத் திறந்து கொண்டு மீண்டும் பிளட்போமுக்குள் இறங்கினூர்.

வசதியான சீற் ஒன்றைப் பிடித்துக் கொண்ட பெருமிதத்தைச் சுகிக்கவும் கல்லடிப் பாலத்திலிருந்து ஸ்டேசன் வரை நடந்தே வந்து கிட்டத் தட்ட ஐந்து ரூபாய் ராக்ஸிக் காசை மிச்சமாக்கிக் கொண்ட தனது கெட்டித்தனத்தை மெச்சிக் கொள்ள்வும் இந்தத் தள்ளாத வயதில் இவ்வளவு தூரத்தை நடந்தே முடித்ததால் ஏற்பட்ட கால் உளைவைப் போக்கடிக்கவும் கூட்டு மொத்தமாக சுருட்டு ஒன்றை பக்கட்டுக்குள்ளிருந்து எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

ஒரு 'தம்' புகையை உள்ளிழுத்த போதுஏற்பட்ட மன நிரவலில் ஆறுதலடைந்தவராக தன்னைச் சுற்றி பிளட்போமில் பார்வையைச் செலுத்தினூர்.

"பிளட்போம் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. நேரத்துடன் வந்து வசதியான சீற்களைப் பிடித்

துக்கொண்டவர்களின் குதூகலச்சிரிப்பு, அவசர வேகத்தில் அங்கு வந்து சேர்ந்த கடைசி நேரப் பிரயாணிகள் சிலர் கொழும்புப் பெட்டியில் இடந்தேடிச் சலித்துக் கொண்டிருக்கும் பரிதவிப்பு, இவர்களை வழியனுப்ப வந்திருக்கும் உறவினர், நண்பர்களின் பாசப் புலம்பல்கள், பரிகாசக் கிண்டல்கள், ஒவ்வொரு பெட்டியாக ஏறி எதையோ அவசரமாகத் தேடுவது போல் பாவனை செய்து பின்னர் இறங்கி...... இப்படி ஒவ்வொன்றாக ஏறி இறங்கி பொழுதைக் கழிக்கும் இளைஞர்களின் பொறுப்பற்ற பேச்சுக்கள், ஊரை விட்டு மாற்றலாகிப் போகும் லிகிதர் ஒருவருக்காக நண்பர்கள் பாடிக் கொண்டிருக்கும் 'பைலா' பாடல்கள்.

இவையெல்லாம் ஒன்றோடொன்று கலந்து பிணைந்து எஞ்சினிலிருந்து கிளம்பிய பெரிய இரைச்சலையும் விழுங்கி ஸ்டேசனை அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தன.

மணி அடித்து விட்டது.

தாமோதரம் தனது பெட்டிக்குள் தாவி ஏறி கதவை அடித்து இறுக்கி மூடிக்கொண்டார். மூடிய கதவை அப்படியே திறக்காமல் வைத்திருக்க என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது புகையிரதம் மெல்ல நகரத் தொடங்கியது.

அந்த நேரத்தில்—

மின்னல் தெறிக்கும் வேகத்தில் ஓடி வந்து கொண்டிருந்த இளம் ஜோடி ஒன்று அவர் இருந்த பெட்டியின் கதவை இழுத்துத்திறந்து சடாரென்று ஏறிக் கொண்டது.

'நிம்மதியாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டுசெல்லலாம் என்று எண்ணியிருந்த தனது எண்ணத்தில் 'மண்' விழுந்து விட்டதே' என்ற நினைப்பு அவருள் கிளர்ந்தது.

'பொதுச் சொத்தை மையமாக வைத்து எழும் ஆசைகள் சில நேரங்களில் — ஏன் பெரும் பாலும் தகர்த்து எறியப்பட வேண்டியது தான்.'

தாமோதரம் தனது மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

புகையிரதம் இப்போது வேகமாக ஓடத் தொடங்கியது.

கொண்டு வந்திருந்த 'ஜேம்ஸ் பொன்ட்' பாணியிலான சூட்கேஸை அவன் — அந்த இளைஞன் மேலிருந்த தாங்கியில் தூக்கிப் போட்டான். அவள் அவனுடைய மனைவியாகத் தான் இருக்கவேண்டும். அவளுடைய கழுத்தில் அதற்குரிய அப்படியான அடையாளம் ஒன்றையும் காணவில்லை தான். அதற்காக...... இப்போது இதுதானே நாகரீகமாக கணிக்கப்படுகிறது.

இப்படி எண்ணிக் கொண்டிருந்த அந்தத் தாமோதரத்திற்கு எதிரே இருந்த 'சீற்'றில் பெண் அமர்ந்து ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தாள்.

கழுத்து வரை பூட்டப்பட்டிருந்த பொத்தான்களைக் கழட்டி விட்டவாறே அந்த இளைஞனும் அவளுக்கருகில் முட்டி மோதி 'தொப்' பென்று அமர்ந்து அவளுடைய காதில் எதையோ கூறிவிட்டு சிரித்தான். அவளும் கலகலவென்று சிரித்துக் கொண்டு தாமோதரத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

இரத்தச் சிவப்பேறிய அவளுடைய நிறத்திற்கும், சதைப் பிடிப்பான உடலுக்கும் அவள் அணிந்திருந்த சட்டை மிகப் பொருத்தமாகவே இருந்தது. கையில்லாததும் கழுத்து கீழிறங்கியதுமாக மிகவும் சிக்கனமாக அந்தச்சட்டை தைக்கப்பட்டிருந்தது. அள்ளித் தெளித்தாற் போல் எல்லா இடங்களிலும் இல்லாமல் குறிப்பிட்ட சில இடங்களில் வைத்துத் தைக்கப்பட்டிருந்த பெரிய பூக்கள் கருநீலச் சட்டைக்கு பல மடங்கு கவர்ச்சியை ஊட்டிக் கொண்டிருந்தன.

தனக்கு முன்னால் இருப்பவன் ஒரு கிழவன் என்பதினாலேயோ — அல்லது வயது சென்ற தலையில் வழுக்கை

விழுந்து உடல் தளர்ந்தாலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் உணர்வுகளும் விழித்துக்கொள்ளும் என்ற உண்மை புரியாததிஞலோ என்னவோ அவள் அவருக்கு முன்னுல் சீற்றில் அமர்ந்திருந்த கோலம்......

நடக்கும் போதே அடித்தொடை வரை ஏறி இறங்கும் அந்தக் கட்டைச் சட்டை காலே நீட்டி அவள் அமர்ந்திருந்த நளினத்தில் இன்னும் ஒருபடி மேலேறி.........

தாமோதரம் பார்வையை விலக்கி நிமிர்ந்து மேலே பார்த்தார்.

காற்ருடி இருந்த இடத்தில் அதற்குப் பதிலாக வயர்த்துண்டுகள் இரண்டு நீட்டிக் கொண்டிருந்தன. பொதுச் சொத்து என்றவுடன் எவ்வளவு விரைவாக கை வைக்கத் துணிந்து விடுகிருர்கள்.

மூவர் கொண்ட அந்தப்பெட்டியில் இளமைப் பூரிப்பின் விளிம்பில் நின்று—தளதளத்துக்கு கொண்டு இந்த உலகத்து இன்பங்களே எல்லாம் அள்ளிக்கொடுக்க—அள்ளி அனுபவிக்க விரும்பும் இளம் ஜோடியான அவர்களுக்கு வாழ்ந்து முடிந்து வற்றல் மரமாகக் காட்சியளிக்கும் நான் இடைஞ்சலாகத் தெரிகிறேஞே......?

இப்படி எண்ணியதும் தாமோதரத்திற்குச் சிரிப்பு வந்தது. ஆஞலும், வாய் விட்டுச்சிரிக்காமல் உள்ளேயே அடக்கிக் கொண்டார்.

சௌகரியமாக நீட்டி நிமிர்ந்து படுத்துப் போக இருந்த தனது பிரயாணத்திற்கு அந்த ஜோடி நந்தியாக வந்து விட்டதே என்று அவர் நினேத்துக் கொண்ட நிலேமாறி பிரயாணத்தின் போது பலவித சுகங்களேப் பங்கிட்டு அனுபவிக்க ஆயத்தமாக வந்த அந்த ஜோடிக்குதான் இடைஞ்சலாகப்போய்விட்டேன் போலிருக்கு என்ற புதிய நினேப்பு அவருள் கிளர்ந்தது.

சற்றுப் பின்ஞல் தலேயை நிமிர்த்தி முதுகுப் பக்கம் சாய்ந்து கொண்டு நித்திரை கொள்வதற்கான முயற்சியில்

தாமோதரம் இறங்கினுர். கண்களை மூடிக் கொண்டார். சிந்தனையைத் திசை திருப்பினுர்.

ஆனுல், காதுகளில் கேட்டுக்கொண்டிருந்த கலகலப்பு- இளம் ஜோடியின் குசுகுசுபேச்சுக்களின் மத்தியில் வெடித்துக் கிளம்பிய சிரிப்பு யாவுமே அவரின் முயற்சிக்குத்தடங்கலாகவே அமைந்தன. அது அவருக்கு வெறுப்பையோ, எரிச்சலையோ ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனம் புரியாத ஒரு மெல்லிய மனக் கிளர்ச்சியை அவருள் உருவாக்கியது.

வாழ்க்கை அனுபவங்களில் நீண்ட தூரத்தை—ஏறக்குறைய அறுபத்தைந்து ஆண்டுகளைக்கழித்து விட்டு அவர் இப்போது மரவேலைகளுக்கான கொன்ராக்ட் செய்யும் நிலையம் ஒன்றில் கணக்கு வழக்குகளை எழுதி, எழுதி வாழ்க்கை வண்டியை மெல்ல நகர்த்திக் கொண்டிருந்தார். அவருடைய கைகள் மாத்திரமல்ல மனமும் கூட மரத்துப் போன ஒரு நிலையில்......

தாமோதரம் திடீரென்று கண்களைத் திறந்தார். எதிரேயிருந்த அந்த இளம்ஜோடியும் சட்டென சற்று விலகிக் கொண்டு அவரை முறைத்துப் பார்த்து முணுமுணுத்துக் கதைப்பதை அவரது காதுகள் தெளிவாகக் கேட்கவில்லை; ஆயினும் அவரால் உணரமுடிந்தது.

அந்த ஜோடியின் அவஸ்தைகளை மேலும் சந்திக்க விரும்பாதவராய் பார்வையை முற்றுக வெளியே திருப்புவதற்காக திரும்பிய அவரின் கண்களுக்கு மூடியிருந்த ஜன்னல் கண்ணுடியில் பிரதிபலித்த அவருடைய தோற்றம் தான் துலாம்பரமாகத் தெரிந்தது. கண்ணுடியில் மங்கலாகத் தெரியும் அந்தத் தோற்றத்தை ஏறிட்டு உற்றுப் பார்த்தார்.

நாளாந்தம் ஒடி ஒடித் தேய்க்கப்பட்டதிஞல் பளிச்சிடும் தண்டவாளக் கம்பியாக காட்சியளித்தது முன் வழுக்கைத் தலை. அதன் கீழே எஞ்சினின் கண்ணுடி

உடைந்த முன் லைட் போல ஒளி குறைந்து உள் விழுந்த கண்கள், இவை இரண்டுக்கும் நடுவே வரி வரியாகக்கிடக்கும் சிலிப்பர் கட்டைகளை ஒத்த நெற்றிச் சுருக்கங்கள்.

'இப்படியான ஒரு கோலத்தில் காணப்படும் என்னைப் பார்த்தா இந்த ஜோடி கூச்சப்படுகிறது?'

தாமோதரத்தின் மனம் துணுக்குற்றது.

தான் பெற்று வளர்த்த சொந்தப் பிள்ளைகளுக்கே வேண்டாத தந்தையாக அமைந்து விட்ட ஒரு துர்ப்பாக்கியம் தன்னைச் சுற்றிப் படர்ந்திருக்கும் போது இந்த நிமிடம் வரை எந்த வித தொடர்பும் வைத்திராத இந்த இளம் ஜோடிக்கு நான் தடையாக இருப்பதாகக் கருதப்படும் ஒரு நிலை தவறானதல்லவே?

ஜோடியின் குதூகலத்தில் பார்வையை மோதிக் குழப்பத்தை ஏற்படுத்துவதை ஓரளவு தவிர்க்கும் முகமாகத் தாமோதரம் அந்த ஜன்னலின் கண்ணாடியை மெதுவாக இறக்கினார். அது படாரென்று கீழே இறங்கியது.

திறக்கப்பட்ட வழியாக பனியின் 'சில்'லென்ற காற்று உள்ளே புகுந்து ஆக்கிரமிக்கத்தொடங்கியது. தலையைமட்டும் வெளியே நீட்டி பார்வையை எறிந்தார்.

முன்னால் கவிழ்ந்து மண்டியிருந்த இருளைக் கிழித்துக் கொண்டு இரைந்து செல்லும் எஞ்சினின் வேகம் இப்போது கூடியிருந்தது.

''சா! எவ்வளவு வேகமாக ஓடுகிறது இந்தப் புகையிரதம்?'' வியப்போடு இந்தக்கேள்வி அவர் வாயிலிருந்து எழுந்த அதே வேளையில், ''எவ்வளவு வேகமாக ஓடினால் தான் என்ன? எங்கேயோ ஓரிடத்தில் எப்போதோ ஒரு நேரம் தன் வேகத்தைக் குறைத்து முடித்து நிறுத்திக் கொள்ள வேண்டியது தானே'' என்ற சலிப்பும் தோன்றியது.

கண்ணுக்கு அண்மையில் மிகப் பெரிதாகத் தெரிந்த மின்சாரக் கம்பங்கள் புகையிரதத்தின் ஓட்ட வேகத்தில்

குறுகிக் குறுகிச் சிறிதாகி புள்ளியாக மறைவதும், தூரத்தில் முன்னால் புள்ளியாகத் தெரிந்தவை வளர்ந்து பெரிதாகி பின்னால் ஓடி புள்ளியாகி மறைவதும்......

உலக வாழ்வின் தத்துவங்களை மிக உன்னதமாகவிளக்கிக்கொண்டிருந்த அந்தப் புகையிரதத்தின் வேகமும் மின்சாரக் கம்பங்களின் வரவும் மறைவும் தாமோதரத்தின் மனத்திரையில் மாண்டு போயிருந்த பல்வேறு சிந்தனைகளைக் கிளறத் தொடங்கின.

கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அந்தப்புகையிரதம், அதனோடு இணைக்கப்பட்டிருக்கும் திருகோணமலைக்குப் போவதற்கான பழங்கால மூன்றாம் வகுப்புப்பெட்டி, அதனுள்ளே சூழ்நிலையை முற்றாக மறந்த கோலத்தில் இன்பச் சேட்டைகளில் ஈடுபட்டிருக்கும்இளம் ஜோடி......

இவை அனைத்தும் சிறிது சிறிதாகக் குறுகி புள்ளியாக மறைய என்றோ நடந்து முடிந்த பல்வேறு சம்பவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருபுள்ளியாக பெரிதாகத்தோன்றி தாமோதரத்தை முற்றாக மறைத்தன.

## 2.

திருகோணமலையில் முகாமிட்டிருந்த பிரிட்டிஷாரின் கடற்படைத்தளத்தில் ஒரு லிகிதராக தாமோதரம் இயங்கிக் கொண்டிருந்த காலம் அது. ஆமாம்! அவர் அந்தத் தொழிலோடு எந்த விதத்திலும் ஒன்றிணைந்து போகாமல் வெறும் இயந்திரமாகத் தான் இயங்கிக் கொண்டிருந்தார்.

எத்தனையோ மைல்களுக்கப்பால் எங்கேயோ உள்ள இனந்தெரியாத அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற

கடிதங்களை 'டைப்' செய்வதும் அவற்றின் பிரதிகளை பைல்களில் கட்டி வைப்பதுமாக அவர் மனம் ஒருப்படாத நிலையில் மாரடித்துக் கொண்டிருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

உள்ளூரிலிருந்த கல்லூரிகளில் பெற்ற ஆகக்குறைந்த கல்விக்காக உடனடியாகக் கிடைத்த வேலையோடு திருப்திப்பட்டுக் கொண்டு வாராவாரம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் கிடைக்கும் கைநிறைந்த சம்பளத்தோடு தங்களின் இலட்சியம் முற்றுப்பெற்று விட்டது என்ற நினைப்பில் அந்தக் கடற்படைத் தளத்தில் வேலை செய்த ஆயிரக்கணக்கானவர்களில் அவரும் ஒருவர் தான். ஆயினும் தாமோதரம் அடிக்கடி மனம் சலனப் பட்டவராகவே காணப்பட்டார்.

எட்டாந்தரத்தோடு வேலை கிடைக்கும் வாய்ப்பைப் பயன் படுத்த வேண்டியதாக அவருடைய தகப்பனின் குறைந்த வருமானமும் குடும்பச்செலவும் உந்தித் தள்ளிய போது மேற்கொண்டு உயர் கல்வியைப் பெறவேண்டும் என்ற இலட்சியத்தைச் சுருட்டி மனதில் வைத்துக் கொண்டு வேறு வகையற்ற நிலையில் அந்தக் கடற்படைத் தளத்தில் வேலைக்குச் சேர்ந்தார் தாமோதரம்.

வேலைக்குச் சேர்ந்த ஒரு வருடத்துள் அவருடைய மனதுள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த 'ஏக்கம்' சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. மனதில் அவர் கொண்டிருந்த இலட்சியத்தை நிறைவேற்ற — அறிவுப் பசியைத் தணிக்க இரவு வேளைகளில் தனியாகக்கஷ்டப்பட்டுபடித்து எஸ். எஸ். ஸி. பரீட்சையை பாஸ் பண்ணி வைத்திருந்தார்.

கல்லூரிக் கல்வியை முடித்த பின் உயர் கல்வியைப் பெற எல்லா விதத்திலும் திறமையும் தகுதியும் கொண்ட இளைஞர்கள் திருக்கோணமலையில் ஏராளமாக இருந்தும் அந்தக் கடற்படைத் தளத்தில் கிடைக்கும் உடன் வேலையோடு திருப்திப்பட்டுக் கொண்டு தங்கள் திறமைகளை

மறக்கடித்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி தாமோதரத்திற்கு வேதனையாகவே இருந்தது.

இப்படியான இளைஞர்களைச் சந்திக்க நேரிடும் சமயங்களில் எல்லாம் அவர்களின் எதிர்காலத்தைப் பாழடித்து உயர்கல்வியைப் பெறுவதில் அவர்கள் ஊக்கம் கொள்ளுவதற்குத் தடையாக நிற்கும் ஒரு நந்தியாகவே அந்தக் கடற்படைத்தளத்தையும் அது வழங்கிய வேலை வாய்ப்பையும் கணித்து சபித்து மனதில் அடிக்கடி குமுறிக்கொண்டிருந்தார்.

இளைஞர்களோடு நேரடியாகப் பழகவேண்டும். அப்போதுதான் தனது மனக்குமுறல்களை வெளிக்காட்ட முடியும் என்பதை தாமோதரம் உணர்ந்து கொண்ட போது வெறும் பைல்கட்டுகளைக் கட்டிக் கொண்டு மாரடிக்கும் லிகிதர் வேலை அவருக்கு வெறுப்பு ஏற்பட்டதில் வியப்பேயில்லை.

''எனக்கு மட்டும் வாத்தியாராகச் சேவையாற்ற ஒரு சந்தர்ப்பங் கிடைக்குமென்டால்... நிச்சயமாக இங்குள்ள இளைஞர்களைச் சந்திக்கவும் அவர்களோடு நேரடியாகப் பழகவும் வாய்ப்புக் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி அவர்களுக்கு உயர்கல்வியின் அவசியத்தையும் அதைப் பெறுவதற்கு அவர்கள் கைக்கொள்ள வேண்டிய வழிவகைகளையும் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி இளைஞர்களின் எண்ணங்களை அந்த வழியில் திசை திருப்பி விடலாம்—திருப்பி விடுவேன்.''

தாமோதரம் தனக்குள் இப்படியொரு முடிவான தீர்மானத்தை வரித்துக்கொண்ட வேளையில் தான் ஆசிரியப் பணி அவரை அழைத்தது.

பாடசாலை முகாமையாளர் ஒருவருக்கு முன் எப்போதோ அனுப்பி வைத்திருந்த விண்ணப்பக் கடிதத்தின் சார்பாக அவர் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்குச் சம்மதமா என்று கேட்டு கடிதம் வந்தது.

திருகோணமலையிலிருந்த பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பதவி ஏற்ற போது தாமோதரத்தின் நெஞ்செல்லாம் பூரித்துப் போயிற்று.

பிரதேச உணர்வு பீறிட்டு எழ நல்ல பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்ற பரந்த நோக்கோடு அவருடைய சேவை செயல்படத் தொடங்கியது.

மனதில் எவ்வளவு சிந்தனைகளையும் எழுப்பலாம். அதனடிப்படையில் எவ்வளவு தீர்மானங்களையும் எடுக்கலாம். ஆனல், அவை யாவற்றையும் செயல்படுத்த முனையும் போது......

அதுஒரு ஆரம்பப்பாடசாலை. முதலாந்தரத்திலிருந்து ஐந்தாம் தரம் வரையிலான வகுப்புகள் மாத்திரமே இருந்தமையால் உயர்கல்வி பற்றிய உணர்வுகளைத் தூண்டக்கூடிய வாய்ப்பு தாமோதரத்திற்குக் கிட்டவில்லை. ஆனல், உயர் கல்விக்கான அத்திவாரத்தை முறையாக அளிப்பதற்கு அரும்பாடுபட்டார். கைநீட்டி வாங்கிய ஒவ்வொரு சதத்திற்கும் முழுமையாகச்சேவையாற்றினர்.

இந்த வேளையில் தான் 'தேசியமயம்' என்ற கோஷம் வலுவடையத் தொடங்கியது.

மிஷனரிமாரால் நடாத்தப்பட்டு வந்த கல்விக் கூடங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற குரல் மேலோங்கி தாமோதரம் கடமையாற்றிய பாடசாலையும் இதற்கு இலக்காகிய போது சலனமற்ற அவருடைய வாழ்க்கை பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது.

தேசியமயக்கொள்கையை அரசு அமுலாக்க முற்பட்ட போது வயதெல்லை காரணமாகத் தொடர்ந்துசேவையில் வைத்துக் கொள்ளமுடியாமல் வெளியேற்றப்பட இருந்தவர்களில் முதலிடம் தாமோதரத்திற்கே கிடைத்தது.

தொடர்ந்து சேவை செய்யும் வாய்ப்பு கிடைக்காமல் போகிறதே என்று தாமோதரம் கலங்கியதைவிட பிரதே

சப்பற்றுள்ள நல்லதொரு ஆசிரியரை இழக்க நேரிடுகிறதே என்று அந்தப் பாடசாலை நிர்வாகம் ஏங்கித்தவித்ததே பெரிதாக இருந்தது.

தலைமையாசிரியரிடமிருந்து இந்தச்செய்தியை அறிந்த அன்று, மாலை தாமோதரம் பாட்சாலையிலிருந்து வீட்டிற்கு வரும் போதே—எதிர்காலம் பற்றிய பல வித சிந்தனைகளின் தாக்கங்களைத் தாங்கிக் கொள்ள முடியாதவராக வந்ததும் வராததுமாக முன் விறுந்தையில் கிடந்த சாய்மனைக் கதிரையில் சோர்ந்து போய் சாய்ந்து கொண்டார்.

வீட்டிற்கு வந்ததும் சேர்ட்டைக் கழட்டி முன் சுவரில் அடிக்கப்பட்டிருக்கும் ஆணியில் கொழுவி விட்டு பின் விறுந்தைக் கொடியில் உடுப்புகளோடு தொங்கிக் கொண்டிருக்கும் சாரனைத் தேடி எடுத்து அதனுள் புகுந்து கொண்டு 'தேத்தண்ணீ போடவில்லையா?' என்று குரல் கொடுத்தவாறே குசினிக்குள் வந்து நுழையும் தன் கணவர், இவ்வளவு நேரம் போயும் இன்னும் காணவில்லையே என்று ஏங்கிக் கொண்டு வீட்டின் முன்பகுதிக்கு வந்த சிவகாமி திகைத்துப் போனுள்.

முன்விறுந்தையில் உடை எதையும் கழட்டாமல் சாய்மனைக் கதிரையில் சோர்ந்து போய் கிடக்கும் கணவனைக் கண்டதும் சிவகாமிக்கு என்னவோ போலிருந்தது.

அவருக்குப் பக்கத்தில் வந்து நின்று நெற்றியை ஆதரவாகத் தடவி விட்டாள்.

''என்ன செய்யுது உங்களுக்கு? எழும்புங்கோ, இந்தத் தேத்தண்ணியைக் குடியுங்கோ.''

என்று சொல்லி விட்டுச் சிவகாமி பின் விறுந்தை மேசையில் மூடிவைத்திருந்த தேநீர்க்கோப்பையையெடுத்து வந்து அவரிடம் நீட்டினுள்.

சிவகாமி நீட்டிய கோப்பையை கையில் வாங்கிக் கொண்ட அவர், இளஞ்சூட்டிலிருந்த அந்தக்கோப்பையை

நெற்றிப் பொட்டில் வைத்துச் சிறிது தேய்த்தார். அந்த இளஞ்சூடு தந்த இனியசுகத்தை அனுபவித்துக்கொண்டே மனைவியை நிமிர்ந்து பார்த்தார்.

மனதிலுள்ள எந்த விடயத்தையும் — அது நெஞ்சை நெகிழ்விக்கும் இனிய செய்தியாக இருந்தாலும்சரி, தாக்கத்தை ஏற்படுத்தும் துக்கச் செய்தியாக இருந்தாலும் சரி உடனுக்குடன் மற்றவர்களிடம் சொல்லும் பழக்கத்தைக் கொண்டிராதவர் அவர். எதற்கும் ஒரு சிறிது இடைவெளிவிட்ட பின்னர்தான் விடயத்தை விளக்கும்சுபாவம் கொண்டவர்.

'தனக்கு வேலை போய் விடும்' என்ற செய்தியை, இவள் இதயம் துணிவுடன் ஏற்றுக்கொள்ளுமா? என்ற கேள்வியை எழுப்பி தன்னுள் ஆராய முற்பட்டார். எதற்கும் இன்னும் சிறிது நேரத்தின் பின் விஷயத்தைச் சொல்வதே நல்லது என்ற திடமான முடிவுக்கு வந்தார்.

''ஒண்டுமில்ல சிவகாமி! பிறகு சொல்றன். இப்ப கொஞ்சம் அசதியா இருக்கு. இப்பிடிப்படுத்திருந்தா சரியாப் போயிடும்.''

தன்னையே நோக்கிக் கொண்டிருக்கும் மனைவிக்குச் சமாதானம் சொல்லி விட்டு கோப்பையிலிருந்த தேநீரை ஒரு மடக்கில் குடித்துவிட்டு வெறுமையான கோப்பையை அவளிடம் நீட்டினார் தாமோதரம்.

'ஒண்டுமில்ல' என்று அவர் சொன்ன பதிலில் சிவகாமி ஓரளவு திருப்திப்பட்டாலும், 'பிறகு சொல்றன்' என்று தொடர்ந்து சொன்ன சூசகமான வார்த்தையில் அடங்கி, வெளிவரவிருக்கும் ஏதோ ஒரு செய்தி கொண்டு வரப் போகும் பயங்கரத்தை நினைத்ததும் அவள் மனம் ஆடிப் போய்விட்டது. அந்தச் செய்தியை உடனடியாக அறிந்து விட வேண்டுமென்ற ஆவல் அவளுக்குள் ஏற்படாமல் இல்லை.

ஆனால், இது நாள் வரை ''பிறகு என்னத்தைச் சொல்றது? இப்ப சொல்லுங்க'' என்று கேட்டு சிவகாமி

கணவரை நச்சரித்ததும் கிடையாது, தாமோதரமும் உட னடியாக விஷயத்தைச் சொன்னதும் கிடையாது.

இன்னும் கொஞ்ச நேரத்தால் முழு விடயத்தையும் மிகத் தெளிவாக — விரிவாக அவரே சிவகாமியைக் கூப் பிட்டுச் சொல்லுவார் என்பது அவளுக்கு நன்ருகத் தெரி யும்.

கோப்பையைக் கையில் வாங்கிக் கொண்டு சிவகாமி குசினிக்குள் நுழைந்தாள். இரவுச் சமையலுக்கான வேலை களைத் தொடங்குவதற்கு அத்திவாரமாக அடுப்பை மூட் டத் தொடங்கினுள்.

சாய்மனைக் கதிரையில் சோர்ந்து போய்ப் படுத்துக் கிடந்த தாமோதரத்தின் கண்கள் மேலே வீட்டுக் கூரை யில் தொங்கிக் கொண்டிருந்த சிலந்திக் கூட்டில் நிலைத் திருந்தன.

பக்க வரும்படி எதுவுமேயில்லாமல் ஆசிரியப் பணி மூலம்கிடைக்கும் மாதச் சம்பளத்தையே நம்பியிருக்கின்ற அவருக்கு ‘வேலை இனிமேல் இல்லை’ அதனுல், அடுத்த மாதத்திலிருந்து சம்பளம் ஒன்றில்லை என்ற எண்ணத்தை நம்ப முடியாமலும் ஆனுல், நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலும் இருக்கும் ஒரு இக்கட்டைச்சுற்றியே தாமோதரத்தின் சிந்தனைகள் வளைய வந்து கொண்டிருந் தன.

இப்போது ஏதோ ஒரு வகையில் மூன்று நேரமும் ஒழுங்காக சாப்பிட முடிகிறது. ஆனுல்,. அடுத்த மாதத் திலிருந்து......

மூன்று நேரச் சாப்பாட்டை ஒரு நேரமாகக் குறைப்ப தற்கு அவர் தயார். சோற்றுக்குப்பதிலாக பாண்வாங்கித் தின்பதற்கு அவர் தயார். ஆனுல்............

பிள்ளைகளின் நிலை......... அதிலும் சென்னையில் தங்கி படித்துக் கொண்டிருக்கும் மூத்த மகன் கிருஷ்ணனுக்கு அனுப்புவதற்கு பணத்திற்கு எங்கே போவது? படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு வரச் சொல்வதா?

உயர் கல்வியின் அவசியத்தையும் அதைப் பெறுவதற்கு கைக்கொள்ள வேண்டிய வழிவகைகளையும் இளைஞர்களுக்கு உணர்த்தி அவர்களின் கல்வி அறிவை உயர்த்த வேண்டும் என்ற உத்வேகத்தோடு தான் தாமோதரம் ஆசிரியப் பணியைத்தொடங்கினார். ஆனால், நடைமுறைச் சூழ்நிலைகள் அதற்கு ஒத்துழைப்பனவாக அமையாதது குறித்து அவர் கவலைப்படாத நாளே இல்லை.

கடைசியில் தனது மகன் மூலமாவது தனது இலட்சியத்தை நிறைவேற்ற முனைந்து அதில் ஓரளவு ஆத்ம திருப்தியும் கொண்டிருந்தார். இப்போது அந்த இலட்சியமும் நிறைவேறாது போய்விடுமோ?

இதைப் பற்றிய எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியாமலும் மேற்கொண்டு வழிவகை எதுவும் செய்ய முடியாமலும் சங்கடப்பட்டு சிந்தனையுள் மூழ்கியிருந்தார்.

'கிறீச்'

வளவின் முன் தகரக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது.

தாமோதரம் நிமிர்ந்து பார்த்தார். கிராதி ஜன்னலுக்குள்ளால் நீண்ட பார்வையில் யாரோ கதவை திறந்து வருவது தெரிகிறது.

முருகன்—அவருடைய இளைய மகன் இப்போது தான் பள்ளிக்கூடத்தால் வருகிறான்.

''இன்றைக்கு பஸ் கிடைக்கவில்லைப் போல. பாவம். நடந்து தான் வருகிறான். இந்த வருஷத்துக்குள் அவனுக்கு சைக்கிள் ஒன்று வாங்கிக்கொடுக்க வேண்டும்என்று நினைத்திருந்தேன். இனி எப்படி சைக்கிள் வாங்குவது?''

தாமோதரம் மனதுள் வெதும்பினார், சுமைகள் ஒவ்வொன்றாக கூடிக்கொள்கின்றன.

முருகன் புத்தகக் கட்டை மேசையில் எறிந்து விட்டு உள்ளே போனான். குசினிக்குள் அம்மாவிடம் வாங்கிய தேநீரைக் குடித்துக் கொண்டே திரும்பவும் முன் விறாந்

தைக்கு வந்து அப்பா படுத்திருந்த சாய்மனைக் கதிரையின் விளிம்பைப் பிடித்தபடி நின்றான்.

"அப்பா எங்கட கொலிஜ்ஜை கவுன்மேண்டுக்குக் குடுக்க மாட்டாங்களாம். ஏ கிரேட் பள்ளிக்கூடம் எண்டபடியால் பிரைவேட்டாக நடத்த ஏலுமாம். அதால இனிமே பிரைவேட்டாத் தான் நடத்தப் போறாங்களாம்."

முருகன் சொன்ன செய்தியின் சாராம்சம் தாமோதரத்தின் நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் தூங்கிப் போன சோர்வை விரட்டியடித்து, துணிவைத் துளிர்விடச் செய்தது.

திருகோணமலைப் பட்டினத்தில் ஆண்களுக்கென இயங்கிக்கொண்டிருக்கும் இரண்டு பெரிய கல்லூரிகளில் ஒன்றான முருகன் படித்து வரும் கல்லூரி, கத்தோலிக்க மிஷனால் நடத்தப்பட்டு வந்தது.

இளையமகன் முருகன் படித்துக்கொண்டிருந்த கல்லூரி தனித்தியங்கப் போவதாக அறிந்ததும் அங்கு கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஒன்றினை உடன் எழுதி அனுப்பி வைத்தார் தாமோதரம்.

ஏற்கனவே பணிபுரிந்த பாடசாலையில் அவர் ஆற்றிய சேவை மதிப்பீட்டின் பிரதிபலிப்பாக அவருடைய விண்ணப்பம் ஏற்கப்பட்டு தனித்தியங்கிய அந்தக் கல்லூரியின் ஆசிரியர் குழாமில் ஒருவராகச் சேர்க்கப்பட்டார்.

கல்லூரி பழைய மாணவர்கள் அளித்த நன்கொடைகள், பெற்றோரின் அன்பளிப்பு என்பனவற்றைக் கொண்டு கல்லூரி நிர்வாகத்தின் பொருளாதாரம் இயக்கப்பட்டதால், சேவை மூப்படைந்திருந்த தாமோதரத்திற்கு வேதனம் குறைவாகவே கிடைத்தது. ஆயினும் ஆசிரியனாகப் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்ததே என்ற ஆத்ம திருப்தியில் அவர் நிறைவு பெற்றார்.

நேர்மையும் நியாயமும் ஒன்றிணைந்து அதன் பிரதி உருவமாகக் காட்சியளித்த தாமோதரத்தின் வாழ்க்கை

யில் பெரும்பகுதி கஷ்டமான சூழ்நிலையிலேயே அமைந்து விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவ்வாறே வாழ்ந்து பழக்கப்பட்ட காரணத்தினால் அவர் இன்ப துன்பம் ஆகிய இரண்டையும் சரிசமமாகப் பாவிக்கும் பக்குவத்தைப் பெற்றிருந்தார்.

"இன்னும் எவ்வளவு நாளைக்குத் தான் இந்தக் கஷ்டம் நீடிக்கப் போகிறது? இருக்கிறதோ இரண்டு பிள்ளைகள், அதுவும் ஆண் பிள்ளைகள். அவர்கள் வளர்ந்து படித்து தலையெடுத்து விட்டார்களானால் பிற்காலம் ஒளிமயமானதாக இருக்கும்" என்ற தளராத நம்பிக்கையோடு எதிர்ப்பட்ட கஷ்டங்களையெல்லாம் சமாளித்துக் கொண்டு வந்தார்.

தாமோதரத்திற்கு இரண்டேயிரண்டு ஆண் பிள்ளைகள் மாத்திரம் தான் என்பதில் அவருக்கு அதிக சுகம் இருந்ததோ இல்லையோ ஆனால், மற்றவர்களின் பார்வையில் "உனக்கென்னப்பா? ரெண்டும் ஆண் சிங்கங்கள். நீ குடுத்து வைச்சவன்" என்று பாராட்டப்பட்டவர்.

மூத்தவன் கிருஷ்ணன். இளையவன் முருகன். பெண் குழந்தை ஒன்றில்லையே என்ற கவலை அவருக்கு நீண்ட காலம் வரை இருந்தது. மனைவி சிவகாமி எத்தனையோ விரதங்களை எல்லாம் மேற்கொண்டிருந்தாள். இதுவரை அப்படியான ஒரு வாய்ப்பு அவருக்குக்கிட்டவேயில்லை.

சாதாரணமாக ஓடிக்கொண்டிருந்த அவருடைய வாழ்க்கையில் கஷ்ட துன்பங்கள் மாறி மாறி வரத் தவறவில்லையாயினும் பெற்ற குழந்தைகளுக்கு நல்ல கல்வியை ஊட்டிவிடவேண்டும் என்பதில் தீவிர கரிசனை காட்டினார்.

'குடும்பத்தில் மூத்தவனுக்குக் கொடுக்கும் நல்லகல்வி அவனுக்குப் பிறகு குடும்பம் முழுவதற்கும் பயன்படும்' என்று தனக்குள் வருவித்துக் கொண்ட ஒரு தத்துவத்திற்கிணங்க மூத்தவன் கிருஷ்ணனை சென்னைக்கு அனுப்பி பட்டதாரியாக்கும் வாய்ப்பினை அளித்தார்.

ஆரம்பத்தில் பிரிட்டிஷாரின் கடற்படைத்தளத்தில் வேலை செய்ததற்காக கிடைத்த கிராட்டியுட்டி பணத் தொகையின் பெரும் பகுதி கிருஷ்ணனைச் சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் கரைந்து விட்டது. நான்கு வருடங்கள் கிருஷ்ணனின் படிப்பிற்காக அதன் மூலம்—தலைதூக்கி நெருக்கி அடித்து அவரைப் பயமுறுத்திக் கொண்டிருந்த செலவுகளுக்காக தாமோதரம் சந்தித்த துன்பங்களுக்கு அளவேயில்லை.

கிருஷ்ணன் படிப்பு முடிந்து வந்து விட்டால் நிச்சயம் அவனுக்கு வேலை கிடைக்கும். அதற்குப் பிறகு வட்டியும் முதலுமாக ஒரு வருடத்தினுள் சிக்கல் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பான் என்ற அசையாத நம்பிக்கையில், தாமோதரம் என்னென்னவோ செய்து பணத்தைச் சேக ரித்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

நாலு வருடம் முடிந்தது.

கிருஷ்ணன் சென்னையிலிருந்து திரும்பி வந்தான். வரும்போது பீ. ஏ. என்ற பட்டத்தோடு மாத்திரம் வர வில்லை. இன்றைய வாலிபர்களைப் பிடித்தலைத்துக் கொண் டிருக்கிற நாகரிகத்தின் அப்பட்டமான பிரதிநிதியாகவும் வந்து சேர்ந்தான்.

உடம்போடு ஒட்டிப் பிடித்த உடைகள், உலர்ந்து காய்ந்து போன பரட்டைத் தலை, கழுத்தில் இரண்டு பற் களோடு கூடிய வெள்ளிச் சங்கிலி, கையில் தடித்த வெள் ளிக்காப்பு. இப்படியான ஒரு கோலத்தோடு இந்த நாட் டின் தலைவிதியை மாற்றியமைக்கும் புரட்சியாளனாக வந்து சேர்ந்தான்.

குரோட்டன் செடி போல் கூடையாக வளர்ந்து சிலிர்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணனின் தலைமயிரைப் பார்த்ததும் தாமோதரத்திற்கு வயிற்றைப் பற்றிக் கொண்டு வந்தது.

மூத்தவன் என்ற காரணத்தினால் தொடக்கத்திலிருந்தே அவனுக்கு வழங்கப்பட்ட 'செல்லம்' இப்போது முரட்டுப் பிடிவாதம் ஒன்றை அவனுள் வளர்த்திருந்ததை தாமோதரத்தால் அவதானிக்க முடிந்தது.

படிப்பு முடிந்து திரும்பிய ஒரு வருடத்தில் தங்கள் கஷ்டங்களுக்கெல்லாம் மகன் மூலம் தீர்வு காணலாம் என்று தாமோதரம் கொண்டிருந்த நம்பிக்கையில் நாள் செல்லச் செல்ல தளர்வு ஏற்படத் தொடங்கியது.

படிக்கும் காலத்தோடு முடியாமல் பட்டப் படிப்பு முடிந்த பிற்பாடும் தன்னுடைய மேற்போக்கான நாகரிக வாழ்க்கைச் செலவுகளுக்காக தாமோதரம் உழைத்துச் சேர்த்த சிறிய வரும்படியிலேயே கைவைக்க ஆரம்பித்தான் கிருஷ்ணன்.

ஏற்கனவே ஏறியிருந்த கடன் சுமையைக் குறைக்க கிருஷ்ணனின் மூலம் வழி எதிர்பார்த்திருந்த தாமோதரத்திற்கு மூத்தவனின் நடைமுறைகள் ஏமாற்றத்தை மாத்திரமல்ல பெருந்தாக்கத்தையும் ஏற்படுத்தின.

வீட்டில் தங்குவதைக் குறைத்துக் கொண்டு பெரும் பாலான நேரம் முழுவதையும் வெளியிலேயே கழித்து வரும் கிருஷ்ணனை இதே போக்கில் தொடர்ந்து விட்டு வைப்பது சிக்கலில் போய் முடியும் என்ற அச்சத்தால் தாமோதரம் மூத்தவனுக்கு ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொடுப்பதில் உடனடியாக ஈடுபட்டார்.

தாமோதரத்திடம் தற்போது இருந்த ஒரேயொரு சொத்து நாணயம் தான்! இதை ஈடாக வைத்து நகரத்திலிருந்த பெரிய மனிதர் ஒருவரின் சிபார்சின் பேரில் நிலாவெளி என்னுமிடத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்காக கட்டப்பட்ட டூரிஸ்ட் ஹோட்டல்களில் ஒன்றான 'ஹோட்டல் ஓசானிக்'கில் உதவி மனேஜராக கிருஷ்ணனை வேலையில் சேர்த்து விட்டார். அத்தோடு ஓரளவு குடும்பத்தில்

நிலவும் அந்தகார இருள் மறைந்து, விடிவு காலம் வந்து விடும் என்று ஆனந்தப்பட்டார் தாமோதரம்.

கிருஷ்ணன் அந்த ஹோட்டலில் வாங்கிய சம்பளம் அவனுடைய எடுப்பான உடைகளுக்கும், சிகரெட் செலவு களுக்குமே சரியாக இருந்தது. அப்படி இருக்க குடும்பச் செலவுக்குப் பணம் எப்படிக் கொடுக்க முடியும்?

பிரமாண்டமான அந்த டூரிஸ்ட் ஹோட்டலுக்கு வந்து போகும் பெரிய மனிதர்களுக்கு ஈடாக தானும் தோற்றமளிக்க வேண்டுமென்ற கிருஷ்ணனின் எண்ணத் திற்கு பீ. ஏ. பட்டமும் பின்னணியாக அமைந்து, பெற்ற சம்பளம் முழுவதும் இரையாகியது.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓய்வு பெற்று ஆறுதலடைகின்ற வயதிலும் தகப்பன் உழைத்துப் பெற்ற சிறிய வருமானத்தில் பங்கு போட கிருஷ்ணன் முனைந்த போது, அதுவரை அவனுடைய மேற்போக்கான நட வடிக்கைகள் பற்றி எதுவுமே பேசாதிருந்த தாயின் மனம் தாங்கொணு துயரத்தால் வெடித்துச் சிதறத் தொடங்கி யது.

கிருஷ்ணன் வீட்டிற்குத் தலைப்பிள்ளை என்ற காரணத் தினுல் ஆரம்பத்தில் கொஞ்சம் போஷாக்காக வளர்க்கப் பட்டவன். கவலைகளுக்கு சற்றும் இடந்தராது வளர்ந்து குளுகுளு என்ற சதைப் பிடிப்பான உடம்பு, மாநிறம், பொலிவு நிறைந்தவட்டமுகம், வாலிபத்துடிப்பு நிறைந்து வழியும் கண்கள், கம்பீரமான தொனி—கூட்டு மொத்த மாகச்சொல்லப்போனுல் காணுகின்ற எவரினதும்—குறிப் பாக இளம் பெண்களினது உள்ளத்தில் புகுந்து ஒரு குழப் பத்தை உண்டாக்கக் கூடிய கவர்ச்சிகரமான தோற்ற முள்ளவன்.

கிருஷ்ணனின் கவர்ச்சியான தோற்றமும் துடிப்பான நாகரிகப் போக்கும் அவனை ஒன்றுக்கு மேற்பட்ட காதல்

விவகாரங்களில்—அவன் விரும்பியோ விரும்பாமலோ சிக்கித் தவிக்க வைத்தன.

வெறும் துடிப்பான நடிப்பையும் எடுப்பான பேச்சையும் மட்டுமே வாழ்க்கையின் எல்லாக் கோணங்களுக்கும் பயன் படுத்தலாம் என்று ஒரு பொய்யான வரைவிலக்கணத்தை வகுத்துக் கொண்டு அவ்வாருன ஒரு தன்மையை மட்டும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இளம் கன்னியர் ஏராளமாக இருக்கும் வரை கிருஷ்ணன்போன்ருேருக்கு வேட்டை தானே! இவற்றிலே கைதேர்ந்தவனை கிருஷ்ணனின் பெரும் பொழுது, இளம் பெண்களின் இதயங்களைத் திருடும் வேலையில் கவனம் செலுத்தியதில் வியப்பிற்கு இடமேயில்லை.

இப்படி மூத்தவனே வீட்டின் முழுக் குழப்பங்களுக்கும் காரணமாக அமைந்து விட்ட ஒரு இக்கட்டான நிலையில், இளைய மகன் முருகனுக்கும் உயர்கல்வியை கொடுக்கும் வாய்ப்பு தாமோதரத்திற்குக் கிட்டவில்லை.

எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணியதோடு முருகனை படிப்பிற்கு முழுக்குப்போட வைத்து விட்டார். கப்பல் கொம்பனிகளில் 'டலி' கிளாக்காக அவனை வேலைக்குச் சேர்த்து அவன் மூலமாவது தளர்ச்சியைக் கண்டு கொண்டிருக்கும் தமது குடும்பத்தின் பண நிலையை மீண்டும் புதுப்பிக்க தாமோதரம் எண்ணினர்.

எண்ணத்தைச் செயலாக்க உடனடியாக செயல்பட்டார். அவருக்குத் தெரிந்த கப்பல் கொம்பனிகளில் முருகனுடைய பெயரையும் படிப்பையும் பதிய வைத்தார். கசெற்றிலும் பத்திரிகைகளிலும் காணப்பட்ட வேலை சம்பந்தமான விண்ணப்பங்களுக்கு அவனை விண்ணப்பிக்கும்படி தூண்டினர்.

இளையவன் முருகன் மூத்தவனின் குணத்திற்கு முற்றிலும் நேர்மாருன தன்மை கொண்டவன். வழக்கத்தி

லேயே சரியான பிடிவாதக்காரன். தேவையற்ற கல கலப்பையோ ஆடம்பரத்தையோ விரும்பாதவன். தானுண்டு தன் புத்தகங்களுண்டு என்று எப்போதுமே ஒதுங்கிக் கொள்ளுபவன். ஆனல், எதையும் தீர்க்கமாக ஆழமாகச் சிந்தித்து முடிவெடுக்கக் கூடியவன்.

அண்ணன் கிருஷ்ணனைப் போல தன்னாலும் பட்டதாரி யாகிற அளவிற்கு படிக்க முடியவில்லையே என்கிற ஒரு ஏக்கம் அவனுடைய மனதில் மிக வைராக்கியமாகப்பதிந் திருந்தது. ஆனாலும், நடைமுறையில் இப்போதிருக்கிற குடும்பத்தின் நெருக்கடிச்சூழ்நிலை, பொருளாதார மந்தம் அதற்கெல்லாம் ஈடுகொடுக்காது என்ற உண்மையை விளங்கிக் கொண்டு ஆசைப்படும் மனதைக் கட்டுப்படுத்தி சமாதானப்படுத்துவதில் இதுவரை ஓரளவு வெற்றி கண் டிருந்தான்.

தன்னையும் அண்ணனையும் தொடர்புபடுத்தி ஒப் பிட்டுப் பார்க்க நேரிடுகிற சில சந்தப்பங்களில் தந்தை யின் மீது முருகனுக்கு இனந்தெரியாத வெறுப்பு ஏற்படு வதும் உண்டு.

படிப்பு விஷயத்தில் தந்தையார் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டுள்ளார் என்ற எண்ணமே அந்த வெறுப் புக்கு மூல காரணமாகவும் தான் நினைக்கின்ற சாதாரண சிறிய ஆசைகளைக் கூட விரும்பி நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருக்கிற அதே வேளையில், தன் அண்ணன் தேவைக்கு மீறிய சௌகரியங்களை அனுபவித்து குடும்பம் படுகிற இக்கட்டான சூழ்நிலையைப் பற்றிய எந்தவித சிந் தனையுமின்றி ஊர் சுற்றி வருவது இன்னொரு காரணமாக வும் அமைந்திருந்தது!

# 3.

திருகோணமலையிலிருந்து மேற்கு வாயிலாக, கண்டி நகருக்குச் செல்லும் பிரதான வீதியில் இடதுபக்கமாக ஏறக்குறைய ஒரு மைல் உள்ளே, அடர்ந்த மரங்களுக்கிடையில் அமைந்திருந்த கத்தோலிக்க தேவாலயம் ஒன்றினை மையமாக வைத்து, பத்துப் பன்னிரண்டு குடும்பங்களோடு காடடர்ந்த பிரதேசமாக இருந்த பாலையூற்றுப் பகுதி, அண்மைக்காலத்தில் நடைபெற்ற அவசரகுடியேற்றங்களின் பலனாக, இன்று பொலிவு பெற்று பிரபல்யம் அடைந்த கிராமமாக உருவெடுத்திருக்கின்றது.

பாலையூற்றுக்கிராமத்தின் ஒருபகுதியைச் சரிபாதியாக பிளந்து ஊடறுத்துச் செல்லும் புகையிரதப் பாதையைச் சந்திக்கும் முதலாவது கிரவல் மண் தெரு இடது பக்கம் திரும்பி உள்நோக்கி, அன்புப்பாலை ஊற்றாக வழங்கிக் கொண்டிருந்த அன்னை லூர்துவின் கெபிக்குப் போய் முடிவடையும் இடத்துக்குச் சற்று முன்னதாகக் காணப்படும் வீடுகளில் ஒன்றுதான் தாமோதரத்தின் சொந்தவீடாகும்.

கால் ஏக்கர் பரப்பின் மத்தியில் இருந்த அவருடைய வீடு, அரைச் சுவரோடு கூடிய தகர வீடாகவே அன்றிலிருந்து இன்றுவரை காட்சியளித்துக் கொண்டிருந்தது. தற்போதைய நாகரீக வேலைப்பாடுகள் எதுவும் அவருடைய வீட்டின் அமைப்பில் காணப்படவில்லையாயினும், ஓங்கி வளர்ந்த இரண்டு மாமரங்களின் குடைகவிழ்ந்த இலைப் பரப்பின் கீழே பதுங்கியிருந்தமையால் கொதிக்கும் கோடை வெயிலில் கூட குளுமையான சுவாத்தியத்திற்கு வாய்ப்பானதாக அமைந்திருந்தது.

வீட்டின் முன் விறாந்தையில் தாமோதரம், தனது தளர்ந்து போன உடம்பைச் சாய்மனைக் கதிரைக்கும்,

சோர்ந்துபோன உள்ளத்தை நடைமுறைப் பிரச்சினைகளுக்குமாக பறி கொடுத்தவண்ணம், முகட்டுக் கூரையில் விலகியிருந்த இரண்டு ஓலைகளின் இடைவெளிக்கப்பால், நிர்மலமாகத் தெரிந்த வானத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரமாக முகட்டை உற்று நோக்கிக்கொண்டிருந்த அவருடைய சிந்தனையை மனைவி சிவகாமியின் குரல் கலைத்தது.

''இப்படியே கூரை முகட்டைப் பார்த்துக்கொண்டிருந்தா சரியா? ஆராவது தெரிந்த மேசன் மாரைக்கூட்டிக்கொணர்ந்து இந்த வீட்டை பழுது பார்க்கச்சொல்லுங்க. இப்பவே சின்ன தூத்தலுக்கு எல்லா இடமும் ஒழுகுது.''

கணவனின் பார்வை முகட்டைப் பழுது பார்ப்பதில் தான் சென்றுகொண்டிருக்கிறது என்ற ஒரு எண்ணத்தில் குறைப்பட்டுக்கொண்டுவந்த சிவகாமி, சாய்மனைக் கதிரையில் தன்னை மறந்து படுத்துக்கிடந்த கணவரின் முகத்தில் மூடியிருந்த கவலைபடர்ந்த நிலையைக் கண்டவுடன் மேற்கொண்டு எதையும் சொல்லத் துணிவுவராமல், பக்கத்திலிருந்த தூணைப்பிடித்துக்கொண்டு கீழே குந்திவிட்டாள்.

தாமோதரத்தோடு வாழ்க்கைப்பட்டு குடும்பப்பிணைப்பில் ஈடுபட்டிருந்த இந்த முப்பது வருட காலத்தில் கணவர் சில வேளைகளில் நெருக்கடி நிறைந்த நேரங்களில் இப்படி தன்னை மறந்து கூரை முகட்டைப் பார்த்தபடி, இருந்திருப்பதை அவள் கண்டிருக்கிறாள். ஆனால், இன்று அவருடைய முகத்தில் கப்பியிருந்த கவலை அவளுக்குப் புதியதாகவும் அதே நேரத்தில் புதிராகவும் இருந்தது.

விலகியிருந்த கிடுகுகளினூடாக வெட்ட வெளியில் நிலைப்படுத்தியிருந்த தன் பார்வையை விலக்கி மனைவியின் பக்கம் திருப்பினார் தாமோதரம்.

''சிவகாமீ! இதுவரை நான் கட்டிக்காத்துவந்த மானம் மரியாதை எல்லாத்திலேயும் இப்போ விழுந்திருக்கிற ஓட்டையை எப்பிடி நேராக்கிறது எண்டதை யோசிச்சு யோசிச்சு எண்ட மூளையே குழம்பிப் போயிட்டுது. நீஎன்னடா வெண்டா...இந்த வீட்டு முகட்டுல இருக்கிற ஓட்டையை என்னமோ பெரிசா சொல்ருய்...''

தாமோதரத்தின் பொடிவைத்த பேச்சை சிவகாமியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

''நீங்க என்னத்தச் சொல்றீங்க?''

கணவன்கூறியதன் அர்த்தத்தைக் கிரகித்துக்கொள்ள முடியாதவளாக திருப்பிக்கேட்டாள் சிவகாமி.

ஏறக்குறைய ஐம்பது வயதைக் கடந்திருந்த அந்தத் தாயிடம், வயதுக்கு மீறிய முதுமைத் தோற்றம் முகத்திலும் உடம்பிலும் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. ஒற்றை நாடியான அவளுடைய உடல் முழுவதும், ஓயாது உழைத்த உழைப்பினுல் களைத்துச் சோர்ந்து மடிப்பு மடிப்பாக காட்சியளித்தன.

இந்த முப்பது ஆண்டுகளில் ஏன் அதற்கு முன்னிருந்தே சிவகாமி உடலால் மட்டுமின்றி உள்ளத்தாலும் எந்தப் பிராணிக்கும் துன்பம் நினைக்காத ஓர் அப்பாவி... அண்மைக்காலத்தில் அந்தக் குடும்பத்தில்அடுத்தடுத்துஏற்பட்ட பலகஷ்டங்களுக்கு மத்தியிலும் சோர்ந்துபோகாது கணவனுக்கு ஆறுதல்கூறிஅவரின் கருத்துக்களோடு ஒத்துப் போகும் தன்மையுடையவள் சிவகாமி.

தாமோதரம் குனிந்து அவளை ஏறிட்டுப் பார்த்தார். மனைவியின் கண்களில் மிதந்து கொண்டிருந்த பாசச் சுமையைத் தாங்கும் சக்தியை இழந்தவராக மீண்டும் நிமிர்ந்து முகட்டைப் பாத்துக்கொண்டே கேட்டார்.

''சிவகாமீ! மூத்தவன் எங்காவது ஊர் சுற்றப் போயிருப்பான். அவனை விடு. இளையவன் முருகன் எங்க?''

''லைப்ரரிக்குப் போயிட்டு வாரன் எண்டு சொல்லிட்டு இப்பதான் வெளியே போனான். இப்ப வந்திடுவான். ஏன் கேட்டனீங்க?''

''ஒண்டுமில்ல. அவன் ஆறுதலாக வரட்டும்'' பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டே தாமோதரம் தொடர்ந்தார்.

''பிள்ளைகள் ஒருவரும் இப்போ வீட்டில இல்லாத இந்த நேரத்திலதான் உன்னட்ட சில விஷயங்கள் சொல்றது நல்லது''

சிவகாமி மௌனமாக அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''சிவகாமி, நீ வீட்ட விட்டு வெளிக்கிடுறது வலு குறைவு. அதாலவெளியில நடக்கிறசம்பவங்களில் பெரும் பகுதி உனக்குத் தெரியாமல் போயிருக்கும். நம்மச் சுத்தி வெளியில ஏற்படுற எத்தனையோ கவலைகளை உனக்குத் தெரியக்கூடாதெண்டு இதுவரை நான் மறைத்தது மெய் தான். ஆனால்......இனியும் அப்பிடியே இருந்திடலாம் எண்டு நான் நினைக்கல.'' ...

''நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்க எண்டு எனக்கு துண்டா விளங்கல்ல.''

'சிவகாமி! உனக்கு விளங்காது தான். எங்கட மூத்தவன்ல நீ வச்சிருக்கிற பிள்ளைப்பாசம் உன்ர கண்ணுக்கு மறைப்பு போட்டிருக்கு. ஆனா...காதுகளை எதக்கொண்டு அடைக்கப்போறியோ தெரியாது.'

ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு தாமோதரம் தொடர்ந்தார்.

''சுத்தி வளைக்காம உனக்கு விளங்கிற மாதிரி சொல்லி விடுறன். எங்கட மூத்தவன் கிருஷ்ணன் முந்தின மாதிரியில்ல. இப்ப கொஞ்சநாளா அவனப்பத்தி ஆக்கள் என்னவெல்லாமோ கதைக்கிறாங்க. நிலாவெளில இருக்கிற ஹோட்டல் ஓசானிக்ல அவனை வேலைக்குச் சேக்கிறதுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டன், எத்தனை பேரிட்ட

அலேஞ்சன் எண்டு உனக்கு நல்லாத் தெரியும். ஆனு...... அவன் இப்ப என்ன செய்திருக்கிருன் தெரியுமா? போன மாதம் முழுக்க வேலேக்கே போகல்லயாம். அதப்பத்தி இண்டுவரை ஒரு வார்த்தை என்னட்ட சொல்லல்ல.''

சிவகாமியின் முகத்தில் வியப்பு ரேகைகள் பளிச்சிடு கின்றன.

''உண்மையாகவா சொல்றீங்க. ஒரு மாதமாக வேலேக்குப் போகல்லே எண்டா, பின்ன வேற எங்க போனும்? ஒவ்வொரு நாளும் காலயில, நீங்க பள்ளிக்கு வெளிக்கிட்டு போன கொஞ்ச நேரத்தால் அவசர அவசர மாக அவன் திறமான காச்சட்ட சேட் போட்டுக் கொண்டு வடிவா ஸ்டைல் பண்ணிக்கொண்டு அவனும் வெளிக்கிட்டுத்தானே போருன்.''

''அதத்தான் நானும் சொல்லவாறன். கிளீனு உடுக் கிறதிலயும் டைம்க்கு வெளிக்கிடுறதிலயும் ஒண்டும் குறைச் சல் இல்ல. ஆனு இதுக்கெல்லாம் எங்கால காசு எண்டு தான் எனக்கு விளங்கல்ல. எப்பிடி காசு புரட்டுருன் என் றத எண்ணிப்பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கு சிவ காமீ! வீட்டுக்கு மூத்தவன். நல்லா படிச்சவன். அவனப் பத்தி நாலுபேர் நாலுமாதிரி கதைக்கிறத இந்தக்காதால கேக்கிறபோதுதான் என்னுல தாங்க முடியல்ல. அவன் இதுவரை உழைச்ச சம்பாத்தியத்தில எங்களுக்கு இன் னும் பங்கு கிடைக்கல்ல எண்டு நாம கவலேப் பட்டுக் கொண்டிருக்கிறும். ஆனு... அவன் சம்பாதித்துக்கொண் டிருக்கிற கெட்ட பேர்ல தாராளமாக நமக்கும் பங்கு கிடைக்கிறது சிவகாமீ. செய்யிற அட்டா துட்டித் தனங் களே எல்லாம் இன்னுர்ர மகன் கிருஷ்ணன் செய்யிருன் எண்டு சொல்லிக்காட்டுருங்களே ஒழிய அவனப்பத்தி தனியா பேசுருங்க இல்ல.''

உணர்ச்சிக்குமுறல் தொண்டையை அடைக்க தாமோ தரம் பேச்சை நிறுத்தி பெருமூச்சொன்றை நன்ருக இழுத்து விட்டுக்கொண்டார். அந்தப் பெருமூச்சின் வீச்

சில் சிவகாமி பயந்தே போனாள். ஆனாலும் சமாளித்துக் கொண்டு—

''சும்மா இதுக்காக எல்லாம் நீங்க வீணாகக் கவலைப் பட்டா எப்பிடி? குடும்பத்தில ரெண்டே ரெண்டு பிள்ளைகள். அதில மூத்தவன் நல்லா இருக்க வேணுமெண்டு, எங்கட நிலமைக்கு மேலால, என்னவோ செய்து படிக்க வச்சிருக்கிறோம். அவன் இப்பிடி கெட்டுப் போவான் எண்டு கண்டோமா? சும்மா விடுங்க. காலுக்குச் சரியில்ல எண்டா செருப்பக் கழட்டி எறியிறதில்லையா? பேசாம அவன்ர கதைய விட்டுடுங்க. படிச்சிருக்கான். அவனுக்கென்ன ஆம்பிளை. எப்பிடியாவது தன்ர வழியப் பாத்துக் கொள்ளட்டும்.''

அலுத்தவாறே சிவகாமி வாயைச் சப்புக் கொட்டினாள். எதையோ நினைத்தவள் போல மீண்டும்சொன்னாள்.

''நல்ல வேளை. இந்த மட்டோட போச்சு. கலியாணத்தச் செய்து வச்சு, ஒரு கால்கட்டையும் போட்டு, இன்னுமொரு அப்பாவிப் பொட்டைட வாழ்க்கையையும் நாசமாக்காம இருந்தோம். அந்தளவில நாம சந்தோஷப் பட்டுக்கொள்ள வேண்டியதுதான். அவன் எப்பிடியாவது துலையட்டும். எனக்கு இப்ப இருக்கிறகவலையெல்லாம், இவன் இளையவன் முருகனைப் பத்தித்தான். பாவீ மூத்தவன்ர பழக்கங்கள் இவனுக்கும் தொற்றிவிடக் கூடாது என்றதுதான்.''

உடைத்துக்கொண்டு புறப்படும் கண்ணீரை கணவன் பார்க்காதவாறு முந்தானைச் சேலையால் துடைத்துக் கொண்டாள் சிவகாமி.

அந்த நெருக்கடியான கட்டத்திலும் சிவகாமியின் பேச்சைக்கேட்டதும் தாமோதரத்திற்குச் சிரிப்புதான் வந்தது. ஆனால், சிரிக்கவில்லை.

''நீ சொல்ற மாதிரி அவனைத் துலையட்டும் எண்டு விட்டுவிடுகிறது லேசான காரியந்தான். ஆனா, அப்பிடிச்

செய்யிறது பெத்தவங்கள தங்கட கடமையிலிருந்து நழுவச் செய்யிறதுக்குத்தான் உதவும். பெத்த பிள்ளைகளுக்கு படிப்பு வசதிசெய்து குடுப்பதோ, நல்ல சாப்பாடு உடுதுணி குடுப்பதோ மாத்திரந்தான் பெத்தவங்கட கடமை எண்டு நீ நினைக்கிறாய். இல்லை அப்பிடியில்லை. பிள்ளைகள் தவறான வழிகளிற் செல்லாமல், நல்ல வழிகளைக் காட்டி விடுறதும் பெத்தவங்கட முக்கிய கடமை. பிழையான வழிகளில் பிள்ளைகள் செல்லும்போது, அவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவருவதுதான் உண்மையானகடமையாகும். இந்தக் கடனைச் சரிவரச் செய்யிற போதுதான் தனி மனிதன் என்கிற அவனும் சமூகத்திற்கு நல்ல பணிகளைச் செய்தவனாகிறான்.''

சிவகாமி இடை மறித்தாள்.

''நீங்க புத்தகங்களிலையும், பேப்பரிலையும் வாசிக்கிறதை என்னட்டச் சொல்றதால என்ன பிரயோசனம்? இவங்களுக்காக நீங்க எவ்வளவு கஷ்டப்படுகிறீங்க! அவ்வளவும் வீணாகிப் போயிட்டுதே என்ற ஆத்திரம்தாங்காம அப்பிடிச் சொல்லிப்போட்டன். சரி. இப்ப நீங்க என்ன செய்யப்போறீங்க? அவனால, இவன் இளையவனும் கெட்டுப்போகாம இருக்கவேணும்.''

இப்படிச் சொல்லிச் சலித்த சிவகாமி சுவரில் தொங்கிய சாமிப்படத்தைப் பார்த்து ''முருகா! இந்தக் கண்ராவிய எல்லாம் பார்க்கவைக்காம நேரகாலத்தோட என்னை எடுத்திடு'' என்று கையெடுத்துக் கும்பிட்டவாறு கண்ணீர் விட்டாள்.

''சிவகாமீ! இப்பிடி சாகிற எண்ணத்த விட்டுட்டு நான் சொல்றதைக் கவனமாகக் கேள். இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதத்தில நான் வேலையிலிருந்து விலக வேண்டிய சங்கடம் ஒன்று இப்போது உருவாகியிருக்கிறது. என்ன அப்பிடிப் பார்க்கிறாய்? நான் இப்ப படிப்பிக்கிற கல்லூரி தனிப்பட்ட முறையில் மிஷனரி பாதர்மாரால் நடத்தப்படுகிறது உனக்குத் தெரியும் தானே!

அங்க படிப்பிக்கிற எங்களுக்கு மாசாமாசம் சம்பளம் தாரதுக்காக அவங்க படுகிற கஷ்டம் உனக்கு விளங் காது.''

''தனிப்பட நடத்துகிறேம் எண்ட வரட்டுக் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக, டொனேஷன் எண்ட பெயரில் ஒவ்வொரு பெற்ருேரிடமும் மடிப் பிச்சை எடுத் துக்கொண்டு சமாளிக்கிருங்க. ஆனு, இப்ப கொஞ்சமாத மாக கல்லூரியை நடத்த முடியாம, அதை அரசாங்கத் திட கையில கொடுக்கிறதுக்கான வேலையில முழு மூச்சா இறங்கியிருக்கிருங்க.''

''அது கெதில நடக்கும் எண்டு எதிர்பாக்கிருங்க. ஆகவே, எனக்கும் கெதில நோட்டிஸ் தருவாங்க. நிற் பாட்டப்படுற மத்தவங்களைப் போல பென்ஷன் கிடைக் கிற நிலைமையையும் நான் எப்பவோ இழந்து போட் டன்.''

''அவன் வெள்ளைக்காரன்ட நேவில வேலை செய் துட்டு விலகின போதெண்டாலும் கொஞ்சம் காசு கிடைச்சுது. 'கிராட்டியுட்டி'யாகக் கிடைத்த அந்தக் காசும் இவன் மூத்தவன்ர படிப்புல முடிஞ்சு போச்சு. ஆகவே காசு எண்டு ஒண்டும் கிடைக்காது.''

''முந்தி ஒருக்காக ரிட்டயராக வந்தபோது, இந்தக் கல்லூரில வேலை கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கையாவது இருந்திச்சி. ஆனு இந்த முறை ரிடையராகிவந்துவிட்டா.. அடுத்த நாள் சீவியத்துக்கு எங்காவது வேலை தேடித் தானுக வேண்டும்.''

''இந்த வயதில என்னுல இனி என்ன வேலதான் செய்ய முடியும்? இவ்வளவு நாளும் தமிழின் பெருமை யையும் சங்க இலக்கியங்களின் தணியாத சுவையையும் அக்கு வேறு ஆணிவேருக பிரிச்சுப் பிரிச்சு விளங்கச் சொல்லிப் பழகிப்போன என்னுல இனிமேல் என்ன செய்ய முடியும்?''

''முந்தின மாதிரி டியுஷன் ஏதாவது சொல்லிக்குடுக்கலாம் எண்டால் அதுவும் சரிவராது. ஒவ்வொரு தெருவிலும் மூலைக்கு மூலை 'சயன்ஸ்' எண்டும் 'மற்ஸ்' எண்டும் டியுஷன் கிளாஸ்களை நடத்திக்கொண்டிருக்கும் இளந்தாரிப் பொடியன்களோட போட்டி போடுவதற்குரிய சக்தியும் எனக்கு இல்லை.''

''இனி ஒரு புதுவேலையைப் பழகிக்கொள்றதும் இந்த வயதில ஏலாத காரியம். எல்லா வழிகளும் அடைச்சுக்கிடக்கு. சொந்தம் எண்டு இருக்கிற இந்த ஓட்டை வீட்டைத்தவிர சொத்து எதுவும் வேற இல்ல என்கிறதும் உனக்குத் தெரியும்.''

''இப்பிடி எல்லாப்பக்கத்திலயும் நெருக்கடி நிறைஞ்ச ஒரு இக்கட்டான நிலையில் எங்களுக்கு இருக்கிற ஒரே ஒரு நம்பிக்கை எங்கட பிள்ளைகள்தான் சிவகாமி! அவங்களை சரியான வழியில் போகச் செய்து நல்ல வாழ்க்கை ஒண்டைச் செய்திட்டோம் எண்டால், நாங்க பெத்த கடனைச் சரியாச் செய்தவங்களாவோம். அது சரியா வரும் வரைக்கும் நாங்க பொறுமையோடு அவங்களுக்கு வழிகாட்டித்தான் ஆகவேண்டும்.''

இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிக் கிடைக்காது என்ற எண்ணத்தாலோ என்னவோ தாமோதரம் தனது உள்ளக் கிடக்கை முழுவதையும் கொட்டிமுடித்தார்.

முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துவாயால் துடைத்துவிட்டவாறு சாய்மனைக் கதிரையை விட்டு எழுந்து விருந்தையின் வாசல்வரை சென்றார். இடுப்பளவு கட்டப்பட்டிருந்த அந்தச் சுவரில் சாய்ந்தபடியே கிராதி இடைகளுக்குள்ளால் முன்பக்கம் பார்த்தார். குடை விரித்து விசாலித்து நின்ற மாமரம் கண்ணில் பட்டது. துளிர்நிறைந்து பசுமையாகத் தெரிந்த அந்தக் காட்சியில், அவருடைய மனது சற்று ஆறுதலடைந்தது.

சிறிதுநேரம் அப்படி நின்றுவிட்டு திரும்பிவந்து கதிரையில் சாய்ந்தார்.

அழுது சிவந்த கண்களால் தன்னையே நோக்கிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தார். வெளியில் சென்றிருந்த பிள்ளைகள் இருவரும் இன்னும் திரும்பவில்லை.

அவர்கள் இல்லாத இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள தாமோதரத்தின் மனம் விழைந்தது. மீண்டும் தொடர்ந்தார்.

''சிவகாமி! என் திட்டத்தைக் கவனமாகக்கேள்...... நல்ல பெண்ணாக, நல்ல குடும்பத்தில் பிறந்தவளாக, நல்ல குணமுள்ளவளாக, ஒருத்தியைத் தேடிப் பிடிக்க வேணும். அவள் பணவிஷயத்தில வசதி குறைந்திருந்தாலும் பரவாயில்லை. மூத்தவனுக்குகலியாணத்தைச்செய்துவைக்கவேண்டும். வாரவள் எங்கட பொறுப்புக்களைப்பங்கிட்டு எடுத்துக் கொள்வாள். அதனால் உனக்கும் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கவழிபிறக்கும்...

அதுக்குப் பிறகு இளையவனுக்கும் ஒரு நல்ல வேலையாகத் தேடிக் குடுக்கவேண்டும். இந்த இரண்டும், நான் நினைக்கிறபடி நல்ல மாதிரி முடிஞ்சாத்தான் எங்கட வாழ்க்கையில நிம்மதிக்கு நிரந்தரமான வழிபிறக்கும்''

கணவர் சொன்னதையெல்லாம் இதுவரை மௌனமாகக்கிரகித்துக்கொண்டிருந்த சிவகாமி மெல்லப்பேச்சை ஆரம்பித்தாள்.

''நீங்க சொல்றதெல்லாம், கேக்க நல்லாத்தான் இருக்கு. ஆனா... மூத்தவன் போற போக்கப் பாக்கக்குள்ள, நீங்க நினைச்சிருக்கிற முதல் திட்டம் நடக்குமெண்டு நான் நினைக்கல்ல. அந்த பைத்தியக்காரனை நம்பி பொம்பிளையக் குடுக்க ஆர் துணியப் போறாங்க? போதாக்குறைக்கு கிடைச்ச வேலையையும் விட்டுட்டான் என்கிறீங்க''.

சிவகாமியின் குரலில் விரக்தி தொனித்தது.

''சிவகாமி, பெத்த தாய் நீயே அவனைப் பகிடி பண்ணினால்...''

''உள்ளதைத்தானே சொன்னன்''

''உண்மையை மறைச்சு, எங்கட பிள்ளை ஏதோ பெரிய குணசாலி எண்டு பறை அடிப்பது எனக்கும் ஒத்துக்கொள்ளாத விஷயந்தான். ஆனா, நாங்களே அவனைப் பற்றிக் குறைவாகக் கூறுவது இப்போதைக்கு சரியில்லை எண்டு நினைக்கிறன்.

நான் சொல்றதக் கேள். என்னோட படிப்பிக்கிற யாழ்ப்பாணத்து மாஸ்ரர் ஒருவர் உதவி செய்யிறன் எண்டு சொல்லியிருக்கிறார். மூத்தவனைப் பற்றிய எல்லா விஷயங்களையும் ஒண்டும் விடாமல் அவருக்குக் கூறியிருக்கிறன். அவருக்குத் தெரிந்த ஒருவர்ர மகளை இவனுக்கு ஒழுங்கு பண்ணித் தாரன் எண்டு பொறுப்பெடுத்திருக்கிறார். அதோட பீ. ஏ. பட்டம் பெற்றிருக்கிற இவனுக்கும் நல்ல வேலை ஒண்டையும் தேடிக்குடுக்க முடியும் எண்டு சொல்லியிருக்கிறார். அநேகமாக வார கிழமைக்க கிருஷ்ணனைப் பார்க்க வருவாங்க எண்டு எண்ணுறன். அதனால ஒண்டும் பேசாம இரு. நாங்களே அவனைக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறதில ஒரு பலனுமில்ல...''

தொடர்ந்து இன்னும் என்னவோ சொல்ல வாய் உன்னிய தாமோதரத்தை வெளியிலிருந்து ஒலித்த மணிச் சத்தம் தடை செய்தது. எழுந்து நின்று எட்டிப் பார்த்தார்.

வெளியிலிருந்த தகரக் கதவுக்கு மேலால் காக்கி நிறத் தொப்பி ஒன்று தெரிந்தது.

தபாற்காரன்!

சாய்மனைக் கதிரையை விட்டு எழுந்துபோய், ஆடு மாடுகள் வராமலிருப்பதற்காக உட்புறத்தில் கொழுவி

யிருந்த கொழுக்கியை அப்புறப்படுத்தி விட்டு தகரக் கத வைத் திறந்தார்.

தபாற்காரன் நீட்டிய கடிதத்தை வாங்கினூர். உறை யின் மேற்பகுதியில் காணப்பட்ட முத்திரையின் மேலி ருந்த சீலில் கண்கள் மேய, கைவிரல்கள் உறையின் ஒரு பகுதியைக் கிழிக்க, கால்கள் உள்ளே திரும்பி நடக்க, மீண்டும் அதே சாய்மனைக் கதிரையில் சாய்ந்துகொண்டு கடிதத்தை மனதுள் மௌனமாக வாசிக்கத் தொடங்கி னூர்.

ஒரு முறைக்கு இருமுறை வாசித்தார்.

அனுபவிக்கவென எதிர்பார்த்த துன்பங்களில் ஒரு பகுதி எங்கேயோ ஒரு கணம் ஓடி மறைந்துவிட்டது போன்ற மகிழ்ச்சி அவருடைய முகத்தில் பொங்கி வழிந் தது.

''சிவகாமீ! எங்கட கஷ்ட காலத்திற்கு விடிவு வந்து விட்டது. இந்தக் கடிதத்தைப் படித்துப்பார். முருகனை வேலைக்கு வரச் சொல்லி இருக்கிறுங்க'' என்று அவர் சத் தம் போட்டார்.

கணவன் சொன்ன மகிழ்ச்சிகரமான அந்தச் செய்தி யில் சிவகாமியின் முகம் மாறுதல் அடைந்ததாகத் தெரிய வில்லை.

அவளின் சிந்தனை முழுவதையும் மூத்தவனுல் கிளறப் பட்ட பிரச்சினைகளே நிறைத்துக்கொண்டிருந்தன.

நீண்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டில் மகிழ்ச்சி என்ற ஒன்றை கொண்டு வந்த அந்தக் கடிதத்தை உறை யினுள் நுழைத்துவிட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். எழுந்து, சுவரில் கொழுவியிருந்த முருகன் படத்திற்குப் பின்னுல் கடிதத்தைச் சொருகிவிட்டு, கண்களை மூடிய நிலையில் மௌனமாக நின்று விட்டார்.

முருகனுக்கு வேலை கிடைத்துவிட்டது போல் அவரு டைய உள்ளம் ஆனந்த எக்களிப்பில் நிறைந்திருந்தது.

# 4.

ஒரு வாரம் ஓடிப்போய்விட்டது.

அன்று தாமோதரத்தின் மனம் நிலைகொள்ளாது குதூகல சூழ்நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தது. இப்போதையைப் பொறுத்தவரை அவருக்கிருந்த இரண்டு பிரதான கடமைகளில் ஒன்ருன இளையவன் முருகனின் வேலைக்கு அத்திவாரமிட்டாகி விட்டது. இரண்டாவது, மூத்தவன் கிருஷ்ணனுக்கு 'கால்' கட்டுப்போட்டு அவனை மடக்கி வைப்பது.

அதற்கான அத்திவாரம் இன்று இடப்படப்போகிறது. இதுவும் அவர் நினைத்தபடி சரியாக முடிந்துவிட்டால்......

தூரத்தில் இயந்திரம் ஒன்றின் இரைச்சல் ஒலி அவரை உஷார்ப்படுத்தியது.

அவருடைய வளவுத் தகரக் கதவடியில் டக்ஸி ஒன்று வந்து நின்றது. உற்சாகம் கரை புரள வெளியே காலடி எடுத்து வைத்த தாமோதரத்தின் நெற்றியை வாசல் நிலைப்படி 'நொங்' கென்று பதம் பார்த்தது.

ஒரு விஞடி நிலை கலங்கிப் போஞர்.

மறு விஞடி சமாளித்துக் கொண்டார்.

டக்ஸியிலிருந்து இறங்கிய சாமிநாதனை, முகமெல்லாம் பல்லாக, பூரித்து நின்று சிரிப்போடு கைகூப்பி வரவேற்று வளவினுள் அழைத்துச் சென்ருர் தாமோதரம்.

அமைதி நிறைந்த அந்தப் பகுதியில் டக்ஸிவந்து நின்ற சத்தத்தின் குறிப்பறிந்து, இளையவன் முருகன் விருந்தை மூலையிலிருந்த இரண்டு கதிரைகளை ஒன்ருக இழுத்து நடுவில் போட்டுவிட்டு அவற்றின் அருகில் டீபோயை எடுத்து வைத்தான். அதன் மேல் வெற்றிலை, பாக்கு, பழம் அடங்கிய தட்டு இருந்தது.

குசினிப்பக்கத்திலிருந்து வந்த காற்றில் கலந்துவந்த மணம், சிவகாமி கோப்பி தயாரித்து முடித்துவிட்டாள் என்பதைப் பறைசாற்றியது.

விறுந்தையில் அடி எடுத்து வைத்த சாமிநாதன், தாமோதரம் காட்டிய கதிரைகளில் ஒன்றில் அமர்ந்து கொண்டு தோளில் தொங்கித் துவண்டு கொண்டிருந்த சால்வையை மடிப்புக் கலையாமல் பக்குவமாய் எடுத்து கதிரையின் பின் பக்கத்தில் கொழுவி விட்டார்.

சாமிநாதன் நிமிர்ந்து விறுந்தையைச் சுற்றி பார்வையைச் சுழல விட்டார்.

வீடு சிறியதாக இருந்தாலும், புழக்கத்தில் அதை வைத்திருந்த எளிமையான ஆனால், அழகான தோற்றத்தை அவர் கண்ணால் அனுபவித்து உணர்ந்து மனதுக்குள்ளே பாராட்டி அதன் பிரதிபலிப்பாக புன் சிரிப்பொன்றை நெளிய விட்டார்.

தாமோதரத்தின் முகம் மாத்திரமன்றி அந்தப் பழமையான வீடும் 'களை' பொருந்தி இருப்பதாக சாமிநாதனுக்குத் தோன்றியது. தாமோதரத்தின் இனிய தோற்றமே, அவருக்கு அந்த வீட்டின் மேல் ஒருவித பிடிப்பை வலுப்படுத்துவதாக இருந்தது.

''இரவு கோச்சில வந்தனீங்க போல''

வரவேற்றதோடு சம்பிரதாய பூர்வமாகக் கதையை ஆரம்பித்தார் தாமோதரம்.

''ஓமோம்! நைற் மெயில்ல வெளிக்கிட்டனான். மலையில சின்னக்கடைக்குள்ள எனக்குத் தெரிஞ்ச கடைக்காரர் ஒருவர்ர வீட்டுக்குப் போயிட்டு வாரன்''

''அப்படியா? பிரயாணம் எப்படி வசதியா இருந்துதா?''

''ஓ... சும்மா தெரியாதா? இப்பத்தப் பிரயாணங்களைப் பற்றி...''

என்று கூறிய சாமிநாதன் திடீரென்று-

''இவர்தான் உங்கட மூத்த பொடியனா?'' என்று ஆர்வத்தோடு கேட்டார்.

சாமிநாதனுடைய பார்வை விழுந்த திசையை நோக்கித் திரும்பினர் தாமோதரம். அங்கே! ஆவி பறக்கும் கோப்பிக் கோப்பைகள் இரண்டைத் தட்டில் வைத்த வண்ணம் வந்து கொண்டிருந்தான் முருகன்.

''இல்லையில்லை இவன் என்னுடைய இளையபொடியன். பெயர் முருகன். இப்பதான் வேலையில சேர இருக்கிறன். மூத்தவன் கிருஷ்ணனுக்கு ஒரு சடங்கைச் செய்து வச்சிட்டா, பிறகு இவனுக்கும் பார்க்கலாம். மூத்தவன்ர விஷயம் முடிஞ்சிட்டாலே பெரிய நிம்மதி எங்களுக்கு''

தாமோதரத்தின் வார்த்தைகளில் கனிந்திருந்த தடுமாற்றத்தையும், சலிப்பையும் சாமிநாதன் கவனிக்கத் தவறவில்லை.

நடுவில் இழுத்துப் போட்டிருந்த டீபோய்க்கு மேலிருந்த தட்டை ஒருபக்கம் நகர்த்தி வைத்துவிட்டு, கையில் கொண்டுவந்த கோப்பிக் கோப்பைகளைப் பக்குவமாக கீழே இறக்கி வைத்தான் முருகன்.

தாமோதரம் எடுத்து நீட்டிய கோப்பையை வாங்கி ஒரு மிடறைக் குடித்து சுவைத்துவிட்டு சாமிநாதன் கேட்டார்.

''அப்பிடியெண்டா மூத்தவன் எங்க?''

இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து வந்ததே அவனைப் பார்ப்பதற்காகத் தானே. அதனல் சாமிநாதன் கேட்ட கேள்வி நியாயமானது தான்.

உடனடியாக அவருக்குச் சொல்லுவதற்கேற்ற பதிலொன்றும் தாமோதரத்திற்கு வரவில்லையாயினும் சொன்னர்.

''ஓமோம்! இப்ப இங்க நிண்டவன், ஆரோ சிநேகிதனைப் பார்க்க அவசரமாகப் போயிருக்கிறன் வந்திடுவான்.''

எதையோ வாயில் வந்ததைக் கூறிச் சமாளித்துவிட்டுச், சுவரோரத்தில் நின்று கொண்டிருந்த முருகனைச்

சைகை மூலம் கூப்பிட்டார். பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவராய் முருகன் வருவதற்குள் தானே எழுந்து அவன் அருகில் சென்று விருந்தைக்கு வெளியே முற்றம் வரை கூட்டிக் கொண்டு வந்தார்.

தான் கதைக்கப் போவது எதுவும், உள்ளே இருக்கும் சாமிநாதனின் காதுகளுக்கு எட்டாது என்று நிதானித்த வராய், எட்டிப் பார்த்துவிட்டு மிகவும் மெதுவான குரலில் சொன்னார்.

''முருகா! அண்ணன் எங்க போயிட்டான்? இண்டைக்கெண்டு பார்த்து இப்பிடிச் செய்திருக்கிறனே பாத்தியா! காலம்பர கூட அவனுக்கு படித்துப் படித்துச் சொல்லி இருந்தன். ஒரு இடமும் போகாத இண்டைக்கு அவசர விஷயம் ஒண்டு கதைக்க வேண்டும் எண்டு. கேட்டானு? போயிட்டான்.

இப்ப நீ, நான் சொல்றதக் கவனமாகக் கேள்! அந்தச் சந்தியில ரெயின் தண்டவாளத்திற்குக் கிட்ட போய் நிண்டு கொள். அண்ணன் வந்தால் அவனை நிப்பாட்டி, இஞ்ச சாமிநாதன் வந்திருக்கிற விஷயத்தைச் சொல்லு. கொஞ்சம் மட்டு மரியாதையாக நடக்கிற மாதிரி புத்தி சொல்லி கூட்டிக் கொண்டு வா.

''என்ன நான் சொல்றது விளங்குது தானே! மனசில எவ்வளவத்தையோ நினைச்சுக் கொண்டிருக்கிறன். என்ர எண்ணத்தில மண்ணை அள்ளிப் போட்டுவிடுவான், கவனம்'' என்று கூறி முருகனை அனுப்பி விட்டு உள்ளே வந்தார் தாமோதரம்.

வெற்றிலையை எடுத்து சுண்ணும்பைத் தடவிக் கொண்டிருந்த சாமிநாதன் தாமோதரத்தைக் கண்டதும்.

''உங்கட மூத்தவன் இப்ப எங்கயோ வேலை செய்து கொண்டிருக்கிருனும். எப்படி நல்ல வேலையா? சம்பளமாக எவ்வளவு கிடைக்கிறது?''

கேள்வி ஒன்றை எழுப்பியவாறு தட்டிலிருந்த பாக்கில் கொஞ்சத்தை அள்ளி வாயில் போட்டுக் கடித்துக் கொண்டே இடது கையில் இருந்த வெற்றிலையை நாலாக மடித்து வாயினுள் நுழைத்தார்.

தன் மகளைக் கொடுக்க முன்வரும் அவர், மாப்பிள்ளையைப் பற்றிய விபரங்களைச் சேகரிக்க நினைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆனால், சாமிநாதன் கேட்ட கேள்விக்கு, நெஞ்சை நிமிர்த்தி உடனடியாக விடை கொடுக்கக் கூடிய மாதிரி நடைமுறை இருந்திருக்க வேண்டும். அல்லது எல்லாவற்றையும் பூசி மெழுகி பிரமாதமாகச் சமாளிக்கும் பழக்கம் தாமோதரத்திற்கு கைவந்திருக்க வேண்டும்.

இரண்டுக்குமே வழியில்லை.

தாமோதரம் ஒருநிமிடம் மௌனமானார்.

ஆயிரம் பொய்களைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தைச் செய்யலாம் என்ற பத்தாம் பசலிக் கொள்கை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

'பொய்' என்ற அத்திவாரத்தில் கட்டப்படுகிற எந்த விடயமாக இருந்தாலும் சரி அது நிலைத்து நிற்காது. என்றோ ஒரு நாள் அது அடியோடு சரிந்து விழும் என்பது அவருடைய தீர்க்கமான முடிவு.

கலியாணம் ஆயிரங்காலத்துப் பயிர். இதில் 'பொய்' என்பது எந்த வடிவத்திலும் நுழைய நாம் அனுமதிக்கக் கூடாது. உண்மையைச் சொல்வதில் சிலவேளை உடனடி மனக் கஷ்டங்கள் ஏற்படலாம் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அதிலேகிடைக்கிற மனநிறைவுக்கு ஈடு இணையே கிடைப்பதில்லை.

அந்த ஒரு நிமிட மௌன இடை வெளிக்குள் அவர் மனம் பல பிரச்சினைகளைத் தன்னுள் எழுப்பி அலசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தது.

''ஐயா! என்ர அறுபது வருட வாழ்க்கையில் என் நினைவுக் கெட்டிய வரை உள்ளுக்க ஒண்டவைத்து வெளி யில் ஒண்டப் பேசாம இருக்கத்தான் பழகியிருக்கிறன். அந்தப் பழக்கத்தை நான் சாகிற வரைக்கும் காப்பாற் றவே விரும்புகிறேன்.''

''நீங்க இண்டைக்குத் தான் இங்க வந்திருக்கிறீங்க. எண்டாலும் உங்களை ஆரோ அன்னிய மனுஷன் எண்டு நினைக்காம, ஒளிப்பு மறைப்பு எதுவுமே இன்றி சில விஷ யங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறன். அதற்கு நீங்க அனுமதியும் வாய்ப்பும் தருவீர்கள் எண்டால்...''

தாமோதரத்தின் இந்த நீண்ட முகவுரைப் பேச்சு ஏன் என்று சாமிநாதனுக்கு முற்றாக விளங்கவில்லை. ஒரு வேளை சீதன விஷயத்தில் கூடிய தொகையைக் கேட்கப் போகிறாரோ என்ற சந்தேகம் உண்டாகியது. எதற்கும் அவர் சொல்ற வரைக்கும் பொறுப்போமே என்ற தீர் வோடு சாமிநாதன், அவரைத் தொடர்ந்து பேசும்படி தலையை ஆட்டினார்.

தாமோதரம் மனதைத் திறந்து கொட்டத் தொடங் கினார்.

''ஐயா! என்ர மூத்தவன் கிருஷ்ணன் வலு கெட்டிக் காரன். நல்ல திறமைகளெல்லாம் அவனிட்ட இருக்கு. ஆனா என்ன செய்யிறது? கொஞ்சம் முரட்டுத் தனமும் அவனிட்ட இருக்கு. இப்பத்த பொடியளைப் போல இவ னும் என்னவோ நாகரிகத்தப் பற்றி பெரிசா கதைக் கிறான், நினைக்கிறான்.

நான், எவ்வளவோ பாடுபட்டுத் தேடிக் குடுத்த வேலையையும் விட்டுவிட்டான். ஏதோ அவன்ட கூட்டா ளிகளின் பழக்கங்களால சும்மா நேரங்காலம் இல்லாம திரியிறான் எண்டு கேள்விப்படுகிறன். சில சமயங்களில் அந்தக் கதைகளையெல்லாம் என்மனம் நம்புகிறது. சில சமயங்களில் நம்ப மறுக்கிறது.

எது எப்படி இருந்தாலும் அவனையும் ஒரு வழிக்குக் கொண்டுவர வேணும் எண்டதான் என்ர ஆசை. அவனைத் திருத்தி ஒரு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடச் செய்துவிட வேண்டுமெண்டு நினைக்கிறன். பொறுப்பைச் சுமத்தி நல்ல மனுஷனாக அவனை வாழச் செய்ய வேணுமெண்ட ஒரே ஆசைதான் இப்பஎனக்கு.

அவனைப் பத்தி கடிதத்தில் முந்தியே எழுதியிருக்கிறன். நீங்க பணமாக எனக்கு எதுவும் தரவேண்டாம். குணசாலியான உங்கட மகள் இந்த வீட்டுக்கு வந்தால் அதுவே போதும். அவனை நல்லவனுக்கும் உத்தமியாக அவள்—உங்கட மகள் நடந்து கொள்வாளானால், அதன் மூலம் அவனுடைய குடும்பமும் எங்கட குடும்பமும் தலை தூக்கும் எண்டதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

மூத்தவன் பீ. ஏ. பாஸ் பண்ணியிருக்கிறான் என்றது உங்களுக்குத் தெரியும். அவன்ர படிப்புக் கேத்த ஏதாவது ஒரு வேலையையும் தேடிக் குடுக்கிற பணியை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்க. இதெல்லாத்தையும் ஒண்டாகச் செய்து முடிக்கக் கூடிய சக்தி எனக்கு இப்போதைக்கு இருப்பதாகத் தோன்றவில்லை.''

அதற்கு மேல் தொடர்ந்து தாமோதரத்தால் பேச முடியாது அவரது குரல் கரகரத்தது. கண்களை நீர் திரையிட்டு மறைத்தது.

அந்தக் காட்சியில் சாமிநாதனின் உள்ளம் அப்படியே நெகிழ்ந்து உருகிப்போய்விட்டது என்றே கூற வேண்டும். கண்ணீர் திரையிட தன் முன் அமர்ந்திருக்கும் தாமோதரத்தை உற்று நோக்கினார்.

தாங்கள், மற்றவர்களை விட திறமையானவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக, பொய்யையும் புளுகையும் அவிழ்த்து விட்டு, அந்தப் புளுகுகளிலேயே தங்களை மினுக்கி மறைத்துக் கொண்டு திரியும் மனிதர்களிற் பெரும்பாலானவர்களைக் கொண்ட இந்தச் சமூகத்தின்

பல்வேறு முகங்கள் அவர் மனக்கண் முன் தோன்றுகின்றன. இப்படி அப்பட்டமாக உண்மையை, எந்த வித ஒளிப்பு மறைப்புமின்றி கூறும் ஒரு மனிதனை அவர் இது வரை சந்திக்கவேயில்லை.

தாமோதரம் ஒரு இலட்சிய மனிதராகவே அவர் இதயத்தில் உயர்ந்து நின்றார். எங்கு தேடினாலும் கண்டு பிடிக்க முடியாத ஒரு பண்பாளர் அவர் என்று நினைத்தார்.

மௌனமாக நடைபெற்ற இந்தக் கணிப்பு நிகழ்வைக் கலைப்பது போல, வாசல் பக்கத்திலிருந்து, ஆங்கில மெட்டின் விசில் ஓசையும், அதனோடு போட்டி போட்டுக் கிளம்பிய சப்பாத்து ஒலியும் கேட்டன.

விருந்தையின் நடுப்பகுதி வரை வந்துவிட்ட கிருஷ்ணன், தனது தகப்பனாருடன் வேற்று மனிதர் ஒருவர் கதைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றி சிறிதும் லட்சியம் செய்யாமல் தனது சேட்டைக் கழட்டி தூணில் இருந்த ஆணியில் கொழுவி விட்டான்.

அந்த புது மனிதர்—சாமிநாதன் இருந்து கொண்டிருந்த கதிரைக்குப் பக்கத்தில் கிடந்த டீபோயை இழுத்து அதன் மேல் தனது வலது காலைத் தூக்கி வைத்து சப்பாத்தின் லேஸை அவிழ்க்கத் தொடங்கினான்.

* * *

தாமோதரத்தின் வீட்டிற்கு வருவதற்கு இரண்டு பாதைகள் உண்டு. அகன்ற தார் ரோட்டிலிருந்து 'ரவுண் எபவுட்' சந்தியிலிருந்து பிரியும் கிறவல் பாதை ஒன்று.

அநுராதபுரிச் சந்திக்குச் சற்றுத் தள்ளியுள்ள மேற்கு தமிழ் மகாவித்தியாலயத்திற்கு நேர் எதிராகப் பிரியும் கிறவல் பாதை மற்றொன்று.

பாலையூற்றுக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதையின் ஒரு இடத்தில் இந்த இரண்டு பாதை

களும் சங்கமமாகி லூர்து கெபியை நோக்கிச் செல்லு கின்றன. இவற்றில் எந்தப் பாதை வழியாக வந்தாலும் ரயில் பாதையைச் சந்தித்தேயாக வேண்டும்.

தந்தையின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக முருகன், ரயில் பாதையை ஒட்டியிருந்த சுவர்க்கட்டில் குந்தி இருந்து அண்ணன் வருகிறானா என்று அந்தக் கிறவல் ரோட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நேர் வழியைப் பற்றிக் கவலைப்படாது, வழக்கம் போல் குறுக்குப் பாதை ஒன்றின் வழியாக வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கும் அண்ணனைத் தற்செயலாகக் கண்டு, பதைபதைத்துப் போனான்.

முன்னால் சென்று கொண்டிருக்கும் அண்ணனை மறித்து, தகப்பன் சொல்லி வைத்த யோசனைகளைக் கூறி முன்னெச்சரிக்கை பண்ண வேண்டிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டு, முருகன் அரக்கப் பரக்க ஓடிவந்த போது:—

விருந்தையில் கிருஷ்ணனின் அலட்சியச் செய்கையை யும், அதனால் ஆத்திரமடைந்த தந்தையின் உக்கிர மான பார்வையையும் பொறுக்க முடியாதவனாக, வெடித்துக் கிளம்பப் போகும் ஏதோ ஒரு பயங்கரத்திற்கு வழிவிட்டு ஒதுங்கி இடங் கொடுப்பவன் போல விருந்தை யின் ஓரத்தில் கிராதிக் கருகில் கைகளைப் பிசைந்தவாறு நின்று விட்டான்.

கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்த இந்த விஷயங்களைச் சாமிநாதன் ஊகித்துக் கொள்ளுமுன் சமாளிக்க வேண்டும் என்ற அவசரத் துடிப்பால், தாமோ தரம், மூத்தவனின் செய்கை ஏற்படுத்திய ஆத்திரத்தை கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு குரலில் கனிவை ஏற்படுத்திக் கூப்பிட்டார்.

''கிருஷ்ணா இப்பிடி வா''

கிருஷ்ணன் அசைந்ததாகத் தெரியவில்லை. லேசுகளைக் கழட்டும் வேலையைச் செய்து கொண்டே நிமிர்ந்து பார்த் தான்.

''என்ன விஷயம்? எனக்குக் காது நல்லாக் கேக்கும். ஏதாவது சொல்ல வேணு மெண்டால் அங்க நிண்டே சொல்லுங்க''

வெகு அலட்சியமாக எடுத்தெறிந்து சூடாகச் சொன்னுன் கிருஷ்ணன்.

அவனுடைய சேட் பொக்கற்றுக்குள் காசு இல்லை என்ருல், அவனுடைய பேச்சு வார்த்தைகளிலும் பணிவு இருக்காது என்பதை அனுபவரீதியாக தெரிந்து வைத்துள்ள போதிலும், தாமோதரத்தின் நெஞ்சு அவமானம் தாங்காமல் கொதித்துப் பிரண்டது. அதை வெளிக் காட்ட சந்தர்ப்பம் இதுவல்ல என்று அடக்கிக் கொண்டார்.

''கிருஷ்ணு! இதோ இருக்கிருரே இவர் என்ர நண்பர். பெயர் சாமிநாதன். யாழ்ப்பாணத்தவர். கொழும்பிலிருந்து வந்திருக்கிருர், இவருடைய மகளை உனக்குச் சடங்கு செய்து குடுப்பதற்காக.........''

அவர் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள், டீபோயில் இருந்த சப்பாத்துக் காலை படாரென்று நிலத்தில் அடித்தவாறே அவர் முன்வந்து நின்ருன் கிருஷ்ணன்.

''அப்பா! எனக்கு இப்ப சடங்கு செய்து வைக்கச் சொல்லி கேட்டனுனு? ஆரை எப்போ சடங்கு செய்ய வேணும் எண்டு எனக்குத் தெரியும். அதெல்லாம் நான் முந்தியே முடிவு செய்து போட்டன். அது முடிந்து போன விஷயம். எங்கயோ இருக்கிற உதவாக்கரைகளை யெல்லாம் கொண்டுவந்து என் தலையில கட்ட நினைக்கிற நினைப்பை காத்திலை வுட்டுடுங்க.''

நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொல்லிய கிருஷ்ணன் அதோடு நின்றுவிடவில்லை. மலைத்துப்போயிருந்த சாமிநாதனின் பக்கம் திரும்பினுன்,

"மிஸ்டர் சாமிநாதன்! நீங்க ஆரோ எனக்குத் தெரியாது. இந்தா இருக்கிற எங்கப்பா சொல்றதக் கேட்டுக் கொண்டு இங்க வந்து மினக்கட வேணும். உங்கட பக்கத்து ஊரிலேயே ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து மகளுக்கு புரப்போஸ் பண்ணி "எனக்கும் ஒரு 'கார்ட்' அனுப்பி வையுங்க."

ஏளனம் கலந்த சிரிப்போடு சொல்லிவிட்டு நடந்த கிருஷ்ணன், தூணில் கொழுவியிருந்த சேட்டை எடுத்து மாட்டிக்கொண்டு படபடவென்று வெளியேறிவிட்டான்.

சில விஞடிகளில் தன்னைச் சுற்றி நடந்து விட்ட அந்த துர்ப்பாக்கியமான சம்பவங்களின் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுக்கொள்ள தாமோதரத்திற்கு மேலும் சில விஞடிகள் பிடித்தன.

நினைவு ஒரு நிலைக்கு மீண்டபோது, தனக்கு முன்னல் சாமிநாதன் இருந்த கதிரை வெறுமையாகத் தோற்றமளிப்பதை அவரால் உணரமுடிந்தது.

அப்பாவைப் பார்க்க முடியாத—பார்க்க விரும்பாத முருகன் சுவர்ப்பக்கம் திரும்பி நின்றுகொண்டு, ஆணியில் தொங்கிக்கொண்டிருந்த கலண்டரிலிருந்து நேற்றைய திகதித் தாளைக் கிழித்துக்கொண்டிருந்தான்.

முருகனைப் போலவே, தனது உள்ளத்திலிருந்து கிருஷ்ணன் என்ற மகனின் உறவைக் கிழித்து எறிய வேண்டும் போலத் தாமோதரத்திற்குத் தோன்றியது. ஆனல்... இரத்த பாசம் குறுக்கிட்டதால் அதை உடனடியாகச் செய்ய முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார்.

கதவு நிலை மோதியதால் நெற்றியில் ஏற்பட்ட காயம் இப்போது 'விண்' ணென்று வலிக்கத் தொடங்கியது. இதயமோ மௌனமாக அழுதுகொண்டிருந்தது.

மூத்தவனுக்கு கால்கட்டைப் போட்டுவிட்டால், அதன் மூலம் அவனின் மூர்க்கத்தனத்திற்கு ஒரு முடிவு

கட்டிவிடுவதோடு குடும்பத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளை படிப்படியாக சமாளித்துவிடலாம் என்ற அதீதக் கற்பனையோடு குசினி வாசலில் நின்றுகொண்டிருந்த சிவகாமி கொஞ்ச நேரத்துக்கு முன்னால் மூத்தவனால் ஏற்படுத்தப்பட்ட அந்த அதிர்ச்சியின் வேதனையைத் தாங்கமாட்டாதவளாக முந்தானைச் சேலைக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். இதயமோ மௌனமாக அழுதுகொண்டிருந்தது.

# 5.

குடும்பத்தில் உள்ளவர்களை மாத்திரமன்றி குடும்பத்தோடு இணைய வந்தவரையும் தூக்கி எறிந்து பேசிவிட்டு வெளியேறிய கிருஷ்ணன் இன்னும் வீட்டுக்குத் திரும்பவில்லை.

அவன் திரும்பி வரவே வேண்டாம் என்று அன்றைய அதிர்ச்சி நிலையில் தாமோதரம் கொண்டிருந்த வைராக்கியம் இரண்டு நாளின் பின் சற்று இளகத் தொடங்கியது.

"எங்கே போகப் போறான்? வயிறு கடிச்சதும்இரண்டு மூண்டு நாளில திரும்பி வருவான்."

இவ்வாறு சபலத்தோடு காத்திருந்தார்.

நாலாவது நாள், கல்லூரியிலிருந்து வீட்டிற்கு திரும்பிப் போவதற்காக பஸ் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்த வேளையில் கேள்விப்பட்ட 'அந்தச் செய்தி' தாமோதரத்தை நிலை குலையச் செய்து விட்டது.

"'வட்டிக்கடை முதலாளி வைகுந்தனின் மகள் வாசுகியைக் கூட்டிக் கொண்டு பட்டணத்தை விட்டே ஓடி விட்டானாம் கிருஷ்ணன்,'.

வெறும் கவர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து, கவர்ச்சியையே மூலதனமாகக் கொண்டிருந்த அந்த ஆடம்பரப்

பிரியனோடு ஓடிச் சென்றவள் கூடவே இருபதினாயிரம் பெறுமதியான நகைகளையும் அள்ளிக்கொண்டு போயிருக் கிறாளாம்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு தாமோதரத்தின் நிலையே மாறிவிட்டது. வெளியில் தலைகாட்ட மனமில் லாது அவமானத்தால் உளமும் உடலும் சோர்ந்து போனார். இன்னும் ஒரு மாதத்தில் தனக்குக் கிடைக்க விருந்த வேலை நீக்கக் கடிதத்தை எதிர்பார்க்காமல் தானா கவே வேலையை விட்டு நீங்கிவிட்டார்.

இந்தச் சமூகத்தில் பலதரப்பட்ட குத்திக் குதறும் கண்களையும், வாய்களையும் சந்திக்க நேரிடுகிற அவல நிலையையும், அவற்றுக்கு மறுப்புச் சொல்ல முடியாது தவித்துப் புழுங்கும் வேதனையையும் தவிர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் வந்தபோது வேலையை இராஜினா மாச் செய்வதைத் தவிர உடனடியாகச் செய்யக் கூடிய வழிவகைகள் எதுவும் அவருக்குத் தென்படவில்லை.

கடலுக்குள் விழுந்து நீரில் அமிழ்ந்தித் தத்தளித் துக் கொண்டிருக்கும் ஒருவனுக்குக் கிடைக்கும் ஒரு சிறிய மரத்துண்டு எத்தனை நம்பிக்கையையும் நெஞ்சத் துணி வையும் அளிக்குமோ அதைவிடப் பல மடங்கு தாமோ தரத்திற்கு தெம்பையும் உற்சாகத்தையும் அளித்தது இளையவன் முருகனுக்குக் கிடைத்த வேலை நியமனக் கடிதந்தான்.

தாமோதரம் கடைசியாகக் கற்பித்த, தனிப்பட்ட கல்லூரியை அன்பர்கள், நண்பர்கள் கொடுத்த 'டொனே ஷன்' என்ற மூலதனத்தின் மூலம் நீண்ட காலம் நிர் வகிக்க முடியாமல் அல்லல்பட்ட நிர்வாகிகள், முடிவில் அரசாங்கத்திடமே அக் கல்லூரியை ஒப்படைக்கத் தீர் மானித்த அந்த இறுதிவேளையில், அக் கல்லூரியின் கிளார்க்காக நியமனம் பெறும் அதிர்ஷ்டம் முருகனுக்குக் கிடைத்தது.

தாமோதரத்தின் குடும்ப பொருளாதாரத்தை பொறுத்தவரை மறுக்க முடியாத வரப்பிரசாதமாகவே இந்த வேலை நியமனக் கடிதம் தென்பட்டது.

முருகனுக்கு கிளார்க்காக நியமனம் கிடைத்து வேலையையும் பொறுப்பெடுத்து விட்டான்.

முருகன் இப்போது ஒழுங்காக வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான். காலை ஏழு மணிக்கெல்லாம் வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிடுவான். காலையுணவைச்சாப்பிட்டுவிட்டு, தாய் சிவகாமி தயாரித்துக் கொடுக்கும் மதிய உணவுப் பார்சலோடு மெல்லிய நடையில் அனுராதபுரச் சந்திக்கு வந்து சேர்ந்ததும், ஐந்தோ பத்து நிமிடத்தில் அந்த இடத்துக்கு வரும் டவுணுக்குப் போகும் பஸ்ஸில் ஏறினன் என்றல் கல்லூரிக்கு ஏழரை மணிக்குள் போய்ச்சேர்ந்துவிடுவான். பின்னேரம் வீடு திரும்பும் போது மாலைமணி ஐந்திற்கு மேலாகி விடும்.

அவன் எடுக்கின்ற சம்பளத்தின் ஒவ்வொரு சதமும் குடும்பத்தின் நிர்வாகத்திற்கு ஒவ்வொரு ரூபாய் மதிப்பில் உயர்ந்து உதவியது.

'முருகனுவது தலையெடுத்து கறை பிடித்துப் போன குடும்பத்தின் மதிப்பை, புனரமைப்புச் செய்கின்றனே' என்ற உற்சாகந்தான், இப்போது உணர்விழந்து உருக்குலைந்திருந்த அந்த வயோதிபத் தம்பதிகளின் உடலில் உயிரை ஒட்ட வைத்துக் கொண்டிருந்தது.

வழக்கம் போல ஒருநாள், முருகன் கல்லூரிக் கணக்கு வழக்குப் புத்தகங்களை மூடிவைத்துவிட்டு அன்றைய பதில் கடிதங்களைத் தபாலில் சேர்ப்பதற்காக, தபால் கந்தோரை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, எதிர்பாராத விதமாக அவனுடைய பள்ளிக்கூட நண்பன் பரமநாதனைச் சந்திக்க நேரிட்டது.

''அடடே முருகனு?'' என்று ஆச்சரியத்துடன் முருகனின் கையை எட்டிப்பிடித்தான் பரமநாதன்.

''என்னப்பா இதுகோலம்? நல்லா மெலிஞ்சு கறுத்துப் போட்டாய். இன்னும் படிக்கிறியா? இல்லாட்டி வேலை கீலை செய்யிறியா?''

பாடசாலைக் காலத்தில் ஐந்தாந் தரத்திலிருந்து ஒரே வகுப்பில் ஒரே வாங்கில் இருந்து படித்து மிக நெருங்கிப் பழகி எட்டாந்தரத்தோடு பின்னர் பிரிந்து கொழும்பு சென்ற இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு, முருகனைக் காணுமல் கண்டுவிட்ட பரமநாதன் படபட வென்று கேள்விகளைத் தொடுத்தான்.

பரமநாதனின் தொடர்ச்சியான கேள்விகளில் எதற்கு முதலில் பதில் சொல்வது என்று திகைத்து நின்ற முருகனைப் பால்ய உரிமையோடு கையில் பிடித்து இழுத்துக் கொண்டு தபாற் கந்தோருக்கு எதிரில் இருந்த 'அம்பாள் கபே'க்குள் நுழைந்தான் பரமநாதன்.

முன் பக்கத்திலிருந்த கண்ணுடி ஷோகேஸுக்குள் கீழ்த்தட்டின் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்த வடைகளைக் காட்டி, கொண்டு வரும்படி ஓடர் கொடுத்த பிறகுதான் முருகனின் பதிலுக்காக முகத்தைப் பார்த்தான் பரமநாதன்.

முருகன் உடன் பதில் சொல்வதற்குத் தயங்கினுன். கதைகளுக்கிடையில் எங்கே தனது குடும்ப நிகழ்ச்சிகளைப் பற்றி—அண்ணனைப் பற்றி ஏதாவது பேசவேண்டி வந்து விடுமோ என்று மனதிற்குள் அஞ்சினுன்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்துள்ள அந்த நண்பனின் ஆர்வத்தையும், ஆசையையும் தூக்கி எறிந்துவிட மனமில்லாமல் தொட்டம் தொட்டமாக ஆடு குழை தின்கிற மாதிரி பரமநாதன் கேட்ட கேள்விகளுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலவற்றைப் பற்றி மட்டும் சொன்னுன் முருகன்.

அப்பா ரிட்டயராகியது. குடும்பச் சுமையை மேற்கொண்டதால், தொடர்ந்து படிக்க முடியாமல் வேலைக்குச் சேர்ந்தது போன்றவற்றைச் சுருக்கமாக சொன்னுன்.

அதற்கு மேலும் அந்தக் கதையை பேச விரும்பாதவனாக பேச்சை வேறு திசையில் திருப்பும் நோக்கோடு பரமநாதனைப் பற்றிய விசாரிப்பில் இறங்கினான்.

''பரம்... இப்ப எங்க இருக்கிறாய்? கொழும்பில எண்டு நினைக்கிறன். சரியா?''

முருகன் விசாரித்தான்.

பரமநாதன் தன்னைப் பற்றி எதுவும் சொல்வதாய் இல்லை. முருகனைப் பற்றிய விசாரிப்பிலேயே தொடர்ந்தான்.

''என்ன இருந்தாலும் உங்கப்பா உன்ர விஷயத்தில் ஓரவஞ்சமாகத்தான் நடந்திருக்கிறார். இல்லையெண்டா, உன்ர அண்ணனை பீ. ஏ. வரையில் படிப்பித்தவர் உன்னை எஸ். எஸ். சி. யோடு நிப்பாட்டிப்போட்டார். என்ன இருந்தாலும் உன்ர அண்ணன் கெட்டிக்காரன், காரியத்தைச் சாதித்துக் கொண்டான். ஆனா... நீ எதுக்கும் தலையாட்டிக் கொண்டு மடையன் மாதிரி நடந்திருக்கிறாய்? இல்லையா?''

அது சரி, இதென்ன பெட்டி? சாப்பாட்டுப் பெட்டியா?

மேசையிலிருந்த பிளாஸ்ரிக் சதுரப் பெட்டியைத் தூக்கி வைத்துக் கொண்டு பரமநாதன் கேட்டான்.

''ஆமாம்'' என்ற பாவனையாக முருகன் தலையை ஆட்டி ஒத்துக் கொண்டான்.

''உன்ர வயது என்னடா? ஏதோ பெரிய குடும்பக்காரன் மாதிரி, காலம்பர சமைச்சு ஆறி அலர்ந்து போன சாப்பாட்டைக் கட்டிக் கொண்டு வந்து சாப்பிடுகிறாய்? உழைச்சுக் குடுக்கிறாய் நீ பக்கத்தில இருக்கிற கண்டீனில சுடச்சுட ஏதாவது வாங்கித் தின்றா என்ன?''

தன் பால்ய நண்பனின் தோற்றத்தைச் சகிக்க முடியாதவனாக பரமநாதன் ஒவ்வொரு விஷயத்தையும் அனுதாபத்துடன் அதே வேளையில் ஆத்திரத்துடன் அணுகிக் கொண்டிருந்தான்.

பரமநாதன் சொன்ன ஒவ்வொரு சொல்லும், சலன மற்று நிர்மலமாக இருந்த முருகனின் உள்ளத்தில்புகுந்து, உறங்கிக் கிடந்த உணர்வுகளைத் தட்டி எழுப்பி ஒரு குழப்ப நிலையை உருவாக்கும் என்று அவன் கண்டானு?

''பரம்! நீ சொல்றதெல்லாம் சரிதான். எனக்கு அப்படிச் செய்ய விருப்பம் இல்லை எண்டா நினைக்கிருய்? எதுக்கும் ஒரு வாய்ப்பு இருக்க வேணுமா?

அப்பா அரசாங்க உத்தியோகம் பார்த்தது என்னவோ உண்மைதான். ஆனு, மற்றவங்களைப்போல பென்சன் எடுக்கிற வசதி அவருக்கு இருந்திருக்கவில்லை. மூத்த அண்ணனும் வீட்டில் இப்போ இல்லை.

என்ர உழைப்புத்தான் இப்போ வீட்டுக்கு உதவியாக இருக்கு. இவ்வளவு காலமும் எங்களை வளர்த்து, படிப்பிச்சு, ஆளாக்கிய பெத்தவங்களுக்கு இதுகூடச் செய்யாட்டி, ஏதோ படிச்சிருக்கிறேம் எண்டு சொல்லிக் கொள்ற எங்களப்போன்றேருக்கும் மத்தவங்களுக்கும் என்ன வித்தியாசம்? நீ சொல்ற மாதிரி கடைகளில சாப்பிட்டு ஆடம்பரமாகச் சீவிக்கிறதுக்கு எனக்கு வழியுமில்லை. அப்பிடி சோக்குப் பண்ணிக்கொண்டு திரியவேண்டிய அவசியமுமில்லை.''

முருகனின் வாய் இப்படி பதில் சொல்லிக்கொண்டிருந்த அதே வேளை, அவனுடைய மனமோ பரமநாதன் உடுத்திருந்த வெளிநாட்டுத் துணியிலான பெல்ஸ், டெற்ரேன் சேர்ட், மொட் ஸ்டைல் சப்பாத்து, அழகான வெள்ளி பிரேம் போட்ட சன்கிளாஸ் ஆகியவற்றேடு கூடிய பரமநாதனின் எடுப்பான தோற்றத்தை எடை போட்டுக்கொண்டிருந்தது.

தான் போட்டிருந்த பொப்ளின் சீலையிலான வெள்ளை சேர்ட், காக்கி லோங்ஸ் என்பவற்றேடு பரமநாதனின் தோற்றத்தை ஒப்பிட முயற்சித்தபோது முருகனுடைய மனம் வேதனைப்படத்தொடங்கியது.

மேசையில் ,கடைப்பையன் கதிரமலே கொண்டுவந்து வைத்த தட்டிலிருந்து வடை ஒன்றை எடுத்து முருகனுக்கு நீட்டி தானுமொன்றை ஒருகடி கடித்தவாறே மீண்டும் பரமநாதன் பேசத்தொடங்கினன்.

''நாங்க படிக்கிற நேரத்தில, ஒரு சதமும் உழைக்காத உன்ர அண்ணன் எப்பிடி சோக்குப்பண்ணிக்கொண்டு திரிஞ்சான் தெரியுமா? நாளுக்கொரு லோங்ஸ் ஸோட, வேளைக்கொருஹோட்டலில சாப்பிட்டுக்கொண்டு அவன் அந்தக்காலத்திலேயே திரிஞ்சானேடா, உனக்கு ஞாபகம் இருக்கா?

ஆறு......... நீ...... என்னமோ குடும்பம், வீடு, பொறுப்பு, அது, இது எண்டு சொல்ருய். வீடு, வீடு எண்டு இப்பவே உடைஞ்சி தேய்ஞ்சி போனியெண்டா நாளைக்கு உனக்கு கலியாணம் ஏதாவது நடந்தா......... வார மனுஷிக்குக் குடுக்கிறதுக்கு உன்னட்ட ஒண்டுமே இருக்காது போலிருக்கு... உன்னச் சொல்லி என்ன பிரயோசனம்? உன்ர அப்பாவைக் கேக்க வேணும்...''

சுவரிலிருந்த பெரிய மணிக்கூடு ஐந்து முறை அடித்துச் சத்தமாக ஒலி எழுப்பியது.

''முருகா! நான் ஐந்தரை மணிக்கு மூதூர்ல இருந்து வார லோஞ்ல ஒருவரைச் சந்திக்க வேணும். ஜெட்டிக்கு போவோம். வெளிக்கிடு.''

பரமநாதன் அவசரப்படுத்தினன்.

நல்லவேளை. அந்தச் சத்தம் கேட்காவிட்டால் பரமநாதன் இன்னும் என்னென்ன யோசனைகளைச் சொல்லியிருப்பானே?

'பில்' லுக்கு பணத்தைக்கொடுத்து மிகுதிச் சில்லறைக்கு இரண்டு சிகரட்டுகளை வாங்கி முருகனிடம் ஒன்றை நீட்டினன்.

''நோ, தாங்ஸ், நான் குடிக்கிறதில்லே'' என்று மறுத்த முருகனை, ஏதோ ஒரு அபூர்வ பிராணியைப் பார்ப்பதுபோல உற்று நோக்கிவிட்டு தனது சேர்ட்

பொக்கட்டுக்குள் அந்தச் சிகரட்டைப் போட்டுக்கொண்டு கடை வாசலில் தூணோடு கொழுவியிருந்த விளக்கில் கையிலிருந்த சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டான் பரமநாதன்.

ஒரு முறை புகையை உள்ளிழுத்துக் கொண்டவன் எதையோ நினைத்தவனாக திடீரெனக் கேட்டான்:

''முருகா! கேக்கிறன் எண்டு குறை நினைக்காத. உன்னட்ட எத்தனை லோங்ஸ் இருக்கு?''

பரமநாதனின் கேள்வியை விரும்பாதவன் போல முருகன் கையில் வைத்திருந்த கடிதக் கட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தான்.

மூன்றேமூன்று காக்கிலோங்ஸுகளைத்தைத்துவைத்துக் கொண்டு, மாறி மாறி போட்டுச் சமாளிக்கும் தனது அற்பத்தனத்தை அல்லது வறுமைத் தனத்தை நண்பனுக்குக்கூட கூறித்தானாக வேண்டுமா?

பதில் கிடைக்காததன் மூலம் எதையோ ஊகித்துக் கொண்ட பரமநாதன்—

''அப்பிடியெண்டா நான் கேள்விப்பட்ட விஷயம் உண்மைதான்......'' என்று முணுமுணுத்தான்.

தெருவைக் குறுக்கறுத்து, எதிரிலிருந்த தபாற் பெட்டியில் முழுக் கடிதங்களையும் ஒன்றாகத் திணிக்க முயன்று, முடியாமல் போகவே, இரண்டாகப் பிரித்து உள்ளே செலுத்திக்கொண்டிருந்த முருகனின் மனம் தன் அண்ணனின் கதாநாயகன் விளையாட்டைப் பற்றித்தான் பரமநாதன் கேட்கப் போகிறான் என்பதை ஊகித்து எரிச்சல் கொண்டது.

''அதுதான் எல்லோருக்கும் தெரிந்த பழைய விஷயமாச்சே! ஆரோ, வள்ளியோ, வாசுகியோ எவளோ ஒருத்திய கூட்டிக்கொண்டு போன விஷயம் தானே...''

அலட்சியமாகச் சொன்னான் முருகன்.

''உன்ர அண்ணன் வள்ளியோட போனுலென்ன, வாசுகியோட போனுலென்ன, நான் அதக் கேக்கல்ல. விஷயம் என்னடாவெண்டா......''

''முருகா! சின்னக்கடையில பிரகாசம் அன் சன்ஸ் சீலைக்கடைக்கு முன்னுக்கு என்ர அண்ணன் முறையான ஒருவர்ர டெயிலர் கடை ஒண்டு இருக்குத் தெரியுந் தானே? ஓடருக்கு ரெடிமேற்ருக உடுப்புத் தைச்சுக் குடுக்கிறவங்க.

அந்தக்கடையிலை உன்ர அண்ணன் கிருஷ்ணன் மூண்டு ட்ரௌவுசர் தைச்செடுத்திருக்கான். முன்னூறு ரூபா காசு குடுக்கவேணும். கிருஷ்ணன் எங்கயோ போயிற்ருன் என் டோன கடைமுதலாளி உங்கப்பாவைப் பிடிச்சு வெருட் டிருக்கிருன் போல.

இப்ப தனக்கு காசு வேணும் எண்டு அவர் பயமுறுத் தியதால, உன்ர அப்பா காசக் குடுத்து கடனைக் கிளி யர் பண்ணினதாக கேள்விப்பட்டன். நீ என்னடா வெண்டா காக்கிக் காற்சட்டையோட......

இப்ப விளங்குதா அப்பாவுக்கு யார்ல ஆசை இருக் கெண்டு! வீட்டுக்கு ஒரு சதமும் உதவாம மானத்தை வாங்கிக்கொண்டு ஓடினவன்ர தலையில முன்னூறு ரூபாக் காசக் கட்டி அனுப்பியிருக்கிருர்.

மானத்தைக் காப்பாற்றி, உருக்குலைஞ்சு உழைச்சுக் கொட்டுற உனக்கு காக்கி லோங்ஷும், கட்டுச்சோறும்... இருந்தாலும் இப்பிடிப்பட்ட ஒரு குணத்தை நான் ஒரு அப்பாமார்லயும் காணல்லடா.''

இப்படிக் கூறியவன், தபாற்கந்தோர் முகப்பிலிருந்த மணியை பார்த்துவிட்டு—

''நேரம் போகுது...... கதைக்கிறதெண்டா இன்னும் கதைக்கலாம்...... பிறகு ஒரு நாளைக்கு சந்திக்கிறன்.''

ஜெட்டியை நோக்கி அவசரமாக விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டான் பரமநாதன்.

முருகன், அவன் உருவம் மறையுமட்டும் பார்த்துக் கொண்டே நின்ருன். பிறகு, தபாற்கந்தோர் வளவை விட்டு வெளியேறி நியூ ஜோதி சலூனுக்கு முன்ஞலிருந்த பஸ் தரிப்பை நோக்கி நடையைத் திருப்பிஞன்.

அவனுடைய தலே சுமக்கமுடியாத பாரத்தைக் கொண்டதுபோல 'விண் விண்' என்று வலித்தது.

பரமநாதனே ஏன்தான் சந்தித்தேன் என்று எண்ணத் தோன்றியது.

அவன்- பரமநாதன் வேணுமென்று இப்படிக் கதைக்க வில்லே என்பது முருகனுக்குத் தெரியும். அவனுடைய பழக்கமே அப்பிடித்தான்.

தெரிந்த எவருக்கும் எப்பவும் பரிதாபப்பட்டு பேசிறது அவனுடைய வழக்கம்.

படிக்கிற காலத்திலேயே அவனுடைய வகுப்பில் இருக்கிற ஆராவது ஒரு பொடியனுக்கு அநீதி நடந்துவிட்டது என்று அறிந்தாலுே அவ்வளவுதான். ஏதோ தனக்குத்தான் அப்படி நடந்துவிட்டமாதிரி ஆவேசத்தோடு கொதித்தெழுந்து, வாதாடி அந்தப் பொடியனுக்கு நியாயம் கிடைக்க வழிசெய்துவிடுவான்.

இது முருகனுக்கு நன்ருகத்தெரியும். ஆனல், பரமநாதன் இப்போது பேசிய பேச்சுக்கள் முருகனின் உள்ளத்தில் புகுந்து பயங்கரமானதொரு புயலே உருவாக்கிவிட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவில்லே. அவனேயறியாமலேயே அப்பாவி முருகனின் மனதில் விஷத்தை விதைத்துவிட்டான்.

இதுவரை தனக்குத் தெரியாதிருந்த எத்தனேயோ விஷயங்களே மிகவும் தெளிவாக புட்டுக்காட்டி, தனது அகக் கண்களேத் திறக்க வந்த தீர்க்கதரிசி பரமநாதன் என்று பரிபூரணமாக முருகன் நம்பிஞன்.

தூரத்தில் பஸ் வந்துகொண்டிருந்தது.

முருகன் 'அனு-சந்தி' பஸ்ஸில் ஏறும்போது மணி ஆறுக்கு மேலாகியிருந்தது.

** ** **

கல்லூரியிலிருந்து மாலை ஐந்து மணிக்கெல்லாம் பாலையூற்றிலுள்ள வீட்டிற்கு வந்து சேர்ந்து கைகால் அலம்பிக்கொண்டு, அம்மா கொடுக்கும் தேநீரைக் குடிப்பதும், அதைத்தொடர்ந்து தூணில் கொழுவியிருக்கும் பிளாஸ்ரிக் கூடையை எடுத்துக்கொண்டு அடுத்தநாள் சமையலுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்குவதற்காக அநுராதபுரச் சந்தியிலுள்ள கடைகளுக்கு கிளம்பிவிடுவதுமான ஒரு நாளாந்த வழக்கத்தைக் கொண்டிருந்த முருகனுக்கு இன்று என்ன நடந்தது?

விளக்குக் கொளுத்தி எவ்வளவோ நேரத்துக்குப் பிறகு வீட்டிற்கு முருகன் திரும்பியது, கைகால் அலம்பாது விறுந்தையிலிருந்த கதிரையில் குந்தியிருந்தது, தான் மேசையில் மூடிவைத்திருந்த தேநீரை தொட்டும் பார்க்காதது போன்ற திடீர் மாறுதல்களை அவனின் தாய் சிவகாமி அவதானிக்கத் தவறவில்லை.

## 6.

தாமோதரம் கடந்த சில மாதங்களாக சற்று தெம்போடு காணப்பட்டார். முருகன் அவருடைய மனதிற்கு ஆறுதலை அளித்துவந்தான். மூத்தவன் கிருஷ்ணன் உண்டாக்கிய வலியின் தாக்கம் தெரியாமல் முருகன் இங்கிதமாக நடந்துவந்தான்.

அனலாக எறிக்கும் வெயிலின் வெக்கையைப் பொறுக்க முடியாமல் பகல் முழுவதும் வீட்டு விறுந்தை

யில் உள்ள சாய்மனைக் கதிரையில் படுத்துக் கிடந்தவாறே, பழைய நூல்களை வாசித்துவாசித்து ஏற்படுகிற அலுப்பைப் போக்குவதற்காக, மாலை வேளைகளில் தாமோதரம் சிறிது தூரம் அந்தக் கிறவல் பாதை வழியாக நடந்து 'சந்தி' வரை செல்வார்.

கலகலப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் சனங்களின் நடமாட்டங்களையும், இயந்திரங்களின் இரைச்சல்களையும் கண்டு, கேட்டு, அதன் மூலம் சோர்ந்துபோன இதயத்துக்குச் சற்று சூட்டை உண்டாக்கும் பாவனையில் கொஞ்ச நேரத்தை அங்கு கழித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிடுவார்.

இன்றும் அப்படித்தான் உலாவிவிட்டு வீட்டிற்கு வந்த தாமோதரம் சாதாரணமாகத்தான் பேச்சை ஆரம்பித்தார்.

ஆனால், அந்தப் பேச்சு இவ்வளவு காரசாரமான விவாதமாகப் போய் முடியுமென்றோ, இளையவன் முருகன் தன்னை இப்படி எடுத்தெறிந்தாற்போல் பேசிவிடுவான் என்றோ அவர் கற்பனை கூடப் பண்ணியிருக்கவில்லை. பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்.

உள் அறையில் சுவர் ஓரமாக இருந்த ஒரேயொரு பழங்கால வேலைப்பாடுகளோடு கூடிய முதிரை அலுமாரிக்குமேல் கையை வைத்துத் தடவிப்பார்த்த தாமோதரம் அங்கே, தான் எதிர்பார்த்த சில்லறைக் காசுகளைக் காணாததால் முருகனிடம் கேட்டார்:

''முருகா! நேற்று நீ ரெண்டு ரூபாய் மாற்றிக் கொண்டுவந்தாய்... ஆனா... இங்க பத்துச் சதந்தான் கிடக்கு... மிச்சம் எங்க? என்ன வாங்கினனீ?''

இப்படி அவர் கேட்டது இதுதான் முதற்தடவையல்ல.

விறாந்தையில் கதிரையில் இருந்த முருகன் உடனடியாகப் பதில் ஒன்றையும் சொல்லவில்லை,

வாசிக்க முயற்சி செய்துகொண்டிருந்த புத்தகத்தை அப்படியே வைத்துவிட்டு, கண்களை இடுக்கி தகப்பனுரைப் பார்த்தான். அவன் பார்வையில் வெறுப்பு தாண்டவமாடியது.

இன்று மாலை பரமநாதனைச் சந்தித்த நேரம் முதல் தனக்குள் குடைந்து கொண்டிருந்த எண்ணற்ற கேள்விகளைக் கேட்டு அப்பாவுடன் தர்க்கம் போட ஒரு சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த முருகன் இப்போது எப்படி ஆரம்பிப்பது என்று ஒரு முறை மனதில் ஒத்திகை பார்த்துக்கொண்டான்.

சாதாரணமாக மற்ற நேரங்களில் என்ருல் தகப்பனுரின் இப்படியான கேள்விக்கு முருகன் மிக மரியாதையாக பதில் சொல்வான்.

''அந்தக் காசா...அதை நான் தான் எடுத்தனுன்... அதற்கு சம்பியன் பிளேட் ஒண்டு இருபது சதம், பற்பொடி பக்கற் பத்து சதம்...'' என்று செய்த செலவுகளுக்கு கணக்குச் சொல்வான்.

ஆனுல் இப்போது முருகன் ஒரு புதுத் தொனியில் பேசத் தொடங்கினுன். அவனுடைய பேச்சு மாத்திரமல்ல, பார்வை, அங்க அசைவு எல்லாமே புது மாதிரியாக இருந்தது...

''ஓ... அந்த ரெண்டு ரூபாயில் எவ்வளவு மிச்சம் இருக்கெண்டு சொன்னீங்க? பத்துச் சதம் மட்டுமா இருக்கு. அப்ப மிச்சம் ஒரு ரூபா தொண்ணூறு சதத்துக்கு கணக்குச் சொல்றன்...பேப்பரையும் பென்சிலையும் எடுத்து எழுதிக்கொள்ளுங்க...

அதுல ஒரு ரூபாய பீ. ஏ. படிக்கச் செலவழிச்சன். ஐம்பது சதத்துக்கு எனக்கொரு லோங்ஸ் தைச்சிருக்கிறன். மிச்சம் எவ்வளவு நாற்பது சதமா? அதில என்ர காதலிக்கு பட்டுப் புடவை ஒண்டு வாங்கிக்குடுத்தன்.

கணக்கு போதுமா? இல்லாட்டி இன்னும் தெளிவாச் சொல்லவேணுமா? கணக்கா கேக்கிறீங்க?

ஐந்து ரூபா பத்து ரூபா எண்டு உங்கட செல்லப் பிள்ளை தண்ணிபோல தன்ர இஷ்டத்திற்கு செலவழிச்சு திரிஞ்சபோது கணக்குக் கேட்கத் துணிவில்லை. இப்ப மாத்திரம் நான்—வீடு வீடு எண்டு உழைச்சி ஓடாகிக்கொண்டிருக்கும் நான், அந்தச் சில்லறைக் காசை எப்பிடிச் சிலவழிச்சன் எண்டதற்குக் கணக்குக் கேக்கிறீங்க! நல்லநியாயாயம்தான் உங்கட''

முருகனின் குரலில் சிதறியஅளவுக்கு மீறிய அலட்சிய பாவத்தை உணர்ந்த தாமோதரம் கல்லாய்ச் சமைந்து போனார்.

தன் மகன் முருகன்தான் இப்பிடி, இத்தனை வார்த்தைகளையும் அள்ளி வீசினான் என்பதை நம்ப முடியாமல் திகைத்து எதுவுமே பதிலிறுக்க முடியாமல் வாயடைத்துப்போன நிலையில் கதிரையில் சாய்ந்துவிட்டார்.

சமையல் செய்வதற்காக குப்பிவிளக்கின் வெளிச்சத்தில், அரிசியில் கல்லைப் பொறுக்கி எறிந்துகொண்டிருந்த சிவகாமிக்கு, இளையவன் முருகனின் ஆவேசப் பேச்சைக் கேட்டதும் முகம் சிவத்துப் பொங்கியது.

பூனை போலிருந்த மகன் திடீரென புலிபோல பாய்ந்து வயது போன தகப்பனை மட்டுமரியாதை இல்லாமல் வார்த்தைகளால் தாக்கியதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவளாக, அவளுடைய நெற்றி நரம்புகள் புடைத்து விம்மின.

மடியிலிருந்த சுளகை ஒரு பக்கம் வைத்துவிட்டு சராலென எழுந்து முன் விறாந்தைக்கு வந்தாள்.

''கண்டறியாத பிள்ளைகளைப் பெத்து நிறையச் சுகத்தைக் கண்டது போதும். இனியும் என்ன சுகம் தேவைப்படுது. பேசாம வாங்க. இந்த துரையின்ரை உழைப்பில நாங்க சீவிக்கிறோம் என்றதுக்காக என்னவோ துள்ளிப் பாயிறான்.

எங்கட உடம்பில ஒரு சொட்டு இரத்தம் இருக்கிற வரைக்கும் எங்கெண்டாலும் பாடுபட்டுச் சாப்பிடு

வோம். பெலன் இல்லயெண்டா எதையாவது குடிச்சு உயிரை மாச்சுக்கொண்டு நிம்மதியா போயிடலாம்.

இவன்ட வாயால எல்லாம் பேச்சைக் கேட்டு அவமானத்தை தாங்கிக்கொண்டு சீவிக்க வேணுமெண்ட அவசியமில்ல. பேசாம எழும்புங்கோ, வெளிக்கிடுவோம்.''

முருகனைப் பார்க்காமலேயே குமுறிக் கொட்டினாள் சிவகாமி.

''ஓமோம்! பெரிய அவமானந்தான். உண்மையைச் சொன்னா எரிச்சலாகத்தான் இருக்கும். அந்த பெரிய துரை எவளோ ஒருத்தியை இழுத்துக்கொண்டு ஓடின போது இங்க ஆரும் அவமானப்பட்டதா தெரியலே.

தடல்புடலா உடுக்கிறதுக்காக அவர் பட்டிருந்த கடனை, ரகசியமாக பணம் குடுத்துச் சமாளித்தபோது இங்க ஆரும் அவமானப்பட்டதா தெரியலே. இப்ப நான் ஏதோ சொன்னதிற்காக அவமான உணர்ச்சி வருகிறதாக்கும்.''

பெற்றதாயின் முன்னால் முருகன் இப்படி ஒருநாளும் எடுத்தெறிந்து பேசினதில்லே. ஆனால், இப்போது பெற்றவர்கள் முன்னால் நின்றுகொண்டிருப்பது நேற்று வரை காணப்பட்ட முருகன் இல்லேயே!

இன்று மாலே பரமநாதன் ஏற்றிவைத்த வேகம் முருகனுடைய உள்ளத்தில் தவிர்க்க முடியாத வெறியைத் தூண்டி விட்டிருந்தது.

சிவகாமி, வேகமாக அவன் பக்கம் திரும்பினாள். கனல் கக்கும் கண்களோடு அவனை நோக்கிக் கிளம்பிய அவள் அடுத்த வினாடி என்ன செய்ய இருந்தாளோ...?

நல்லவேளை, தாமோதரம் சட்டென்று எழுந்து சிவகாமியுடைய கையைப் பிடித்து உள்ளறைப்பக்கமாகத் திருப்பி விட்டார்.

''சிவகாமி! நீ உள்ளே போ! அவன்ட பேச்சுக்கு நீ மறுமொழி சொல்லிக்கொண்டு நிக்க வேணும். மறுமொழி சொல்ல வேணுமெண்ட அவசியமுமில்லே,

எனக்குத் தெரியும் என்ன செய்ய வேணும் எண்டு. வெளில போயிட்டு பல பிரச்சினைகளோட வீட்டுக்குவார ஆம்பிளைகள் ஏதாவது பேசும் போது குறுக்கால பேசக் கூடாது எண்டு உனக்கு படிச்சுப் படிச்சு ஆயிரந்தடவை சொல்லியிருக்கிறன். நீ உள்ளே போ, உன்ர வேலையைப் பார்.''

ஆத்திரத்தோடும், அதேவேளையில் வார்த்தைகளை கவனமாகவும் சொல்லி கட்டளையிட்டு சிவகாமியை உள்ளுக்கு அனுப்பிவிட்டு முருகனின் பக்கம் திரும்பினார் தாமோதரம்.

''முருகா! உன்னட்ட அப்பிடி கணக்கு கேட்டது பிழை என்றத நான் ஒத்துக் கொள்றன். உன்னோட கோவிக்கிறதில நியாயம் இல்லை. எல்லாம் என்ர தலைவிதி.

பெத்து வளர்த்த பிள்ளையிடமே கணக்கு கேட்க முடியாத ஒரு நிலைக்கு நான் இப்போ தள்ளப்பட்டிருக்கிற என்ர விதியைத் தான் நான் கோவிக்க வேணும். இப்பிடியான ஒரு இழிவு நிலை எந்த தகப்பனுக்கும் வரக் கூடாது முருகா!

இனிமேல் நீ வாங்குகிற சம்பளத்தில், முதல்ல உன்ர தேவைக்கான காசை எடுத்துக்கொண்டு மிச்சத்தை மட்டும் வீட்டுச் செலவுக்குக் குடு. நீ வளர்ர பிள்ளை. நல்ல உடுப்புகளைத் தச்சுப் போடு.வேணுமெண்ட சாப்பாட்டை வாங்கிச் சாப்பிடு.

வீட்டுச்செலவுக்கு காசு காணுவிட்டால், நான் ஏதாவது வழி செய்து கொள்வன். எங்கட குடும்பத்தில் எல்லாரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றதுதான் என்ர ஆசை.''

பேச்சை நிறுத்திக் கொண்டவர், ''சரி சரி எல்லாத்தையும் மறந்திட்டு போய் உன்ர வேலையப் பார்'' என்று சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டார்.

வெளியில், தகரக் கதவுக்கு அருகில், கறுத்தப் பூனை யொன்று, தின்றதையெல்லாம் 'அவுக்' 'அவுக்' என்று கக்கிக் கொண்டிருந்ததைக் கண்டு அருவருப்படைந்தார்.

கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்த தாமோத ரம் நேராகக் கோவிலடிப் பக்கம் நடந்தார்.

கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் புதிய கோவிலுக்காக குவித்து வைக்கப்பட்டிருந்த கற்குவியல் ஒன்றின் மேல் ஏறிக் குந்தினர்.

உள்ளும் புறமும் கொதித்துக் கொண்டிருந்த அவ ருக்கு, திறந்த வெளியில் வீசிக்கொண்டிருந்த இளம்தென் றல் சுகமாக இருந்தது. உடலில் ஏற்பட்டிருந்த நெருக் கடியான வேகத்தைத் தணிக்க உதவியது. ஆனால், உள் ளத்தில் ஏற்பட்ட வலி இன்னும் குறையவில்லை.

முருகனிடம் இன்று ஏற்பட்டுள்ள திடீர் மாற்றத் திற்கு என்ன காரணமாய் இருக்கும் என்பதை ஊகிக்க முயன்றார். அமைதியாக இருந்த அவனுடைய மனதை இல்லாததும் பொல்லாததுகளையும் கூறி யாரோ கெடுத்து விட்டார்கள் என்ற ஆத்திரம் மேலோங்கியது.

எல்லாப் பெற்றாரையும் போல, அவன் கெட்டுப் போனதிற்கு அவனுடைய கூட்டாளிகள் தான் காரணம் என்று ஒரேயடியாகச் சொல்லி, கூட்டாளிகள் மீது குற் றத்தைச் சுமத்தி, தந்தைக்குரிய பொறுப்பிலிருந்துநழுவி விட அவருடைய மனம் இடங் கொடுக்கவில்லை.

''சே! அவன் என்ன, இல்லாததையும் பொல்லாத தையுமா சொன்னான்? அவ்வளவும் உண்மைதானே!''

பெற்றாரின் பணத்தில் நாள் தவறாமல் சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கிற பள்ளிக்கூட பொடியன்களைக் கூட, ''படத்திற்குப் போகக்கூடாது'' என்று கட்டளை யிட்டு முற்றாகத் தடை செய்ய முடியாமல் ''படத்திற்குப் போ, ஆனால், செகன்ட் ஷோவுக்குப் போகாதே'' என்று

சொல்லி ஓரளவு பெற்றூர்கள் திருப்திப் பட்டுச் சீவிக்கிற இந்தக் காலத்தில், உழைத்துக் கொடுக்கிற மகனுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்காத தன் தவறு இப்போதுதான் தாமோதரத்திற்கு உறைக்கிறது.

''என்ன இருந்தாலும் முருகன் இளந்தாரிப் பிள்ளை, அவனுக்கும் நாலு பேர் போல ஆசைகள் இருக்காதா?''

முருகன் மேல் இனந்தெரியாத கழிவிரக்கம் அவருக்கு ஏற்பட்டது.

நீண்ட நேரமாக ஓயாதுஅசைந்தாடிக் கொண்டிருந்த அந்தப்பெரிய நாவல் மரத்தின்இலைகள் இப்போது வேகத்தைக் குறைத்துக்கொண்டு மோன நிலையில் நின்றன.

தாமோதரம் ஒரு முடிவுக்கு வந்தார்.

மூத்தவன் கிருஷ்ணனுடைய விடயத்தில் செய்த தவறை மீண்டும் விடாமல் இருக்க அவருக்கு அந்த முடிவு தான் சரியாகப் பட்டது.

முருகனுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைத்து விட்டால் அவன் இப்படியான சலனங்களில் அகப்பட மாட்டான் என்று திடமாக நம்பினர்.

இந்த நம்பிக்கையோடு, கற்குவியலிலிருந்து எழுந்து வேட்டியின் பின் பகுதியில் படிந்திருந்த தூசியைத் தட்டி விட்டு வீட்டை நோக்கி நடந்தார்.

## 7.

**வா**ரம் ஒன்று ஓடி மறைந்தது.

இந்த ஒரு வாரத்துள் தாமோதரம் சுறுசுறுப்பாக, முழு மூச்சாக காரியத்தில் இறங்கியிருந்தார். தனக்குத் தெரிந்த மிக நெருங்கிய நண்பர்கள் சிலருக்கு கடிதங்கள் எழுதி எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியில், இன்று தபா

வில் வனிதாவின் புகைப்படமும் அவளுடைய தகப்பனின் கடிதமும் கிடைத்தது.

கொழும்பில் பலசரக்குக் கடை ஒன்றினது உரிமையாளரான செல்லத் தம்பியின் இரண்டாவது மகள் வனிதா. 'அட்வான்ஸ் லெவல்' வரை படித்திருந்தாள்.

எப்படியாவது முருகனுடைய கல்யாணத்தை விரைவில் செய்துவைக்க வேண்டும் என்று அவர் கொண்டிருந்த எண்ணத்தை மேலும் பலப்படுத்தியது செல்லத்தம்பியின் கடிதம்.

'அந்த' இடத்தையே முடித்துவிட ஆரம்பத்தில் தீர் மானித்திருந்தார். ஆனால், சிறிது சிந்தித்துப் பார்த்த போது இந்த இடம் பொருந்தி வருமா என்ற சந்தேகமும் முளைவிடத் தொடங்கியது.

'முருகனைவிட அதிகம் படித்திருக்கும் அந்தப் பெண் இவனோடு ஒத்துழைத்துப் போவாளா? பணவசதியில் எங்களை விட எத்தனையோ மடங்கு சௌகரியமுள்ள வீட்டுப் பெண் என்பதில் சந்தேகமில்லை. அவள், இவனுடைய சம்பளத்திற்குத் தக்கதாக சமாளித்து குடும்பத்தை நடாத்துவாளா? வயது போன மாமியாரை மரியாதையாக நடாத்துவாளா? ஒரு வேளை பணப்பெருமை காரணமாக இவர்களை எல்லாம் உதாசீனம் செய்து விட்டால்...?

இதுபோன்ற பல்வேறு கேள்விகளைத் தன்னுள்எழுப்பி சிந்தித்தபோது, விரலுக்கு மீறிய வீக்கம், இறுதியில் தீராத ஏக்கத்தையே தரும் என்ற அனுபவ முடிவுக்கு வந்தார்.

தந்தையின் சிந்தனை இப்படியிருக்க மகனின்முடிவோ மாறாக இருந்தது.

அன்று இரவு முருகன் சாப்பாட்டை முடித்துவிட்டு வந்தபோது தாமோதரம் பேச்சைத் தொடங்கினார்.

முன்பெல்லாம், குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி அலசி ஆராய இருவருக்கும் ஏற்றதாக இந்த நேரம்தான் சரி

யாக இருந்தது. ஆனல், போன வாரம் முருகன் அவரை எடுத்தெறிந்து பேசிய சம்பவத்திற்கு பிறகு, தாமோதரம் அவனேடு முகங் கொடுத்துப் பேசுவதற்கு விரும்பவே இல்லை.

ஒரு வார மௌன இடைவெளிக்குப் பின் இன்று தாமோதரம் மகனை ஏறெடுத்துநோக்கினர். அன்றையைப் போல் ஏதும் தாறுமாருய் நடந்து விடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் மிகவும் பக்குவமாக விஷயத்தைத் தொடங்கினர்.

''முருகா! இந்தக் கடிதத்தைக் கொஞ்சம் படித்துப் பார். அதோடு கூட இருக்கிற போட்டோவையும் பார்.''

இதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் கையிலிருந்த என்வலப்பை அவனிடம் நீட்டினர்.

உங்களுக்கு வந்த கடிதத்தை ஏன் நான் படிக்க வேணும் என்று மறுப்புச் சொல்லி கதையை முற்ருக முடித்து விடுவானே என்று தாமோதரம் அஞ்சியது போலில்லாமல் முருகன் அவர் நீட்டிய உறையை வாங்கி விரித்து உள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்து,தொங்கிக்கொண்டிருந்த அரிக்கன் விளக்குக்கு அருகில் கொண்டு சென்று படிக்கத் தொடங்கினன்.

கடிதத்தைப் படித்து முடிந்ததும் நாணிக் கோணிஓடி ஒளிந்து கொண்டு'எனக்கு எதற்குஇப்போது கலியாணம்?' என்று போலியாக வெட்கப்பட்டு நடித்து ஒதுங்கிப்போய் விடவில்லை.

எதற்குமே தயார் என்ற பாவனையில் தோற்றமளித்த அவன், வனிதாவின் புகைப்படத்தையும், விபரத்தையும் அறிந்தபோது அசைக்கமுடியாத தீர்மானம் ஒன்றிற்கு வந்திருந்தான்.

''அப்பா! இந்தப் பெண்ணையே பேசி முடியுங்கள். அழகும் இருக்கு, அதுக்கேற்ற பணமும் இருக்கு. எனக்கு இவளைப் பிடிச்சிருக்கு.''

கடிதத்தையும் புகைப்படத்தையும் என்வலப்பிற்குள் மறுபடியும் செலுத்திக்கொண்டே முருகன் பாக்குத் தெறித்தாற்போல் சொன்ஞன்.

தாமோதரத்திற்கு வியப்பாக இருந்தது. அவர் அவனிடம் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. இப்போது அவன் இந்தக் கலியாணத்திற்கு ஒத்துக்கொண்டு விட்டாலும், தனது அபிப்பிராயத்தையும் சொல்லிவிட இதுதான் சந்தர்ப்பம் என எண்ணினுர்.

''முருகா! பெண் அழகாக இருக்கிருள். நல்ல வசதியான இடம். எல்லாம் நல்லதுதான். ஆஞ...... எங்கட நிலமைக்கு இது கொஞ்சம் பெரிசா இருக்கு எண்டுதான் யோசிக்கிறன்.''

தாமோதரத்தின் இழுவல் கதைக்கு முருகன், எந்த வித கூச்சநாச்சமின்றி படாரென்று பதில் சொன்ஞன்.

''எனக்குப் பிடிச்சிருக்கு. அந்த இடத்தையே பேசி ஒழுங்கு பண்ணுங்க. அப்பா தான் வசதி இல்லாமல் இருக்கிருர் என்ருல் வருகிற மாமஞரும் அப்பிடித்தான் இருக்க வேணுமா?''

இப்பிடிச் சொல்வதன் மூலம் எந்தளவு தூரம் தகப்பனின் இதயம் தாக்கப்படும் என்பதை முருகன் உணர்ந்து தான் சொன்ஞனே என்னவோ?

தன்னுடைய ஏழ்மைத் தனத்தைச் சொந்த மகனே சுட்டிக்காட்டிப் பேசியது, தாமோதரத்தின் உள்ளுணர்வுகளை ஊசி கொண்டு குத்துவது போல இருந்தது.

கொஞ்ச நாட்களாக முருகன், தன்னை எடுத்தெறிந்து பேசிவருவதை அவர் உணர்ந்திருந்தும், இனி இதையெல்லாம் பெரிசாக எடுப்பதால் எந்தவித நல்ல பயனையும் பெற முடியாது என்ற உண்மையில் மனதை அடக்கிக் கொண்டார்.

அவருடைய அடக்கத்திற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது.

ஏற்கனவே மூத்தவன் கிருஷ்ணன் செய்ததுபோல முருகனும் தன்னை விட்டு ஓடிப்போய் விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கைதான் அது. தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை எல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கிவைத்து விட்டு, வனிதாவையே மருமகளாக ஏற்றுக்கொள்வ தென இறுதியாக முடிவு செய்தார். அதற்கான ஏற் பாடுகளைக் கவனிப்பதில் ஓடியாடித் திரிந்தார்.

அந்த வயோதிபத் தம்பதிகள் கண்டுகொண்டிருந்த நீண்டநாளைய கனவுகளில் ஒன்று மங்களகரமாக நிறை வேறியது.

அவர்களின் ஆசைப்படி முருகனின் கலியாணம் கோணேஸ்வரர் ஆலயத்தில் எந்தவித கலகலப்புமின்றி மிகச் சிறப்பாக ஆனால், சிக்கனமாக நடந்தேறியது.

கொண்டாட்டம் என்ற பெயரில் ஒலிபெருக்கிகளை வீட்டின் கூரைகளிலும் மரங்களிலும் கட்டிவிட்டு பகலும் இரவும் மாறி மாறி, பாலுணர்ச்சிகளைக் கிளறித் தூண்டி விடும் சிலேடைச் சினிமாப் பாடல்களை கர்ண கடூரமாய் இசைத்து, அந்த சுற்று வட்டாரத்தையே ஒரு கலக்குக் கலக்கி, குடியிருப்பாளர்களின் வயிற்றெரிச்சல்களைக் கிளப்பி, ஒலியை மாத்திரமின்றி உபத்திரவத்தையும் பெருக்கிக் கொள்ளும் கைங்கரியத்தைச் செய்ய தாமோ தரத்தின் மனம் ஒருப்படவில்லை.

கலியாணச் செலவையெல்லாம் ஒன்று சேர்த்து தன் மகளுக்கு நகைநட்டுகளாகப் பூட்டி மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார் வனிதாவின் தந்தை செல்லத்தம்பி.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, தாமோதரத்தின் வீடு, புதிய மெருகுடன் கலகலப்பாகக் காட்சியளித்தது. வீடு மாத்திரமல்ல, தாமோதரமும் சிவகாமியும் கூட கலகலப் பாக இருந்தார்கள். அந்த வயோதிபத் தம்பதிகள் இள மைப் பொலிவுடன் மனமெல்லாம் மகிழ்ச்சி நிறைந்து முகமலர்ந்து காணப்பட்டார்கள்.

பொன் நகைகள் ஜொலிக்க முகத்தில் புன்னகை பூத்துக் குலுங்க வனிதா அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது லெட்சுமியே குடி வந்து விட்டாள் என்று நினைத்தார்கள்.

மூத்தவன் கிருஷ்ணன் ஏற்படுத்தி விட்டுச்சென்ற களங்கத்தின் கறையைத் துடைத்து, அதற்கு ஈடு செய்ய வந்த ஒரு தெய்வப் பெண்ணாகவே வனிதா காட்சியளித்தாள்.

''இனிமேல் நமது வாழ்க்கை வண்டி கரடுமுரடான பாதையை விட்டு விலகி, வளவளப்பான பாதையில் அலுங்காமல் நலுங்காமல் ஓடும்.''

இப்படி நினைத்து பூரிப்படைந்தார்கள்.

## 8.

முருகனின் கை விரல்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு முகமலர்ச்சியுடன் வீட்டிற்கு வந்த மறுநாளே வனிதா முகத்தைச் சுழிக்கத் தொடங்கினாள்.

முன் விறுந்தை, நடு அறை, பின் விறுந்தை ஆகிய மூன்றிலும், கூரையில் கம்பியில் தொங்கிக்கொண்டு ஒளி வெள்ளத்தை உமிழ்ந்து, இரவைப் பகலாக்கிய இரவல் பெற்றோல்மக்ஸ் விளக்குகள் உரியவர்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்ட மறுநாள் இரவு அரிக்கன் விளக்கின் மந்தமான வெளிச்சத்தைக் கண்டதும் வனிதா பொரிந்து தள்ளினாள்.

''என்ன இருட்டு? எனக்குப் பயமாக இருக்கு! இதென்ன வீடா? லைட் வெளிச்சம் இல்லாம இரவில என்னால சீவிக்க ஏலாது. எங்களுக்கெண்டு தனி 'பெட்றூம்' ஒண்டுகூட இங்கில்லை, மார்க்கட் மாதிரி இந்த விறுந்தை

யிலேயே பகல் முழுவதும் குந்தி இருக்க ஏலுமா? சும்மா பாட்டுக் கேக்கிறதுக்கு ஒரு டிரான்சிஸ்ரர் ரேடியோ கூட இல்லை.''

வெறுப்போடு கூறிய வனிதா, அந்த மங்கிய வெளிச்சத்திலும் முன் விறாந்தை மூலையில் ஒரு புத்தகத்தைக் கையில் பிடித்தவாறு யோசனையில் மூழ்கியிருந்த முருகனைத் தோளில் பிடித்து உலுப்பினாள்.

''இஞ்சருங்க! லைட் உள்ள பெரிய வீடா டவுன்ல ஒண்டைப் பாருங்க. இல்லாட்டி இந்த வீட்டுக்கு லைட் போடுவிக்க ஏதாவது அரெஞ்மண்ட் செய்யுங்க. காசு இல்லையெண்டா சொல்லுங்க. இப்பவே நான் அப்பாவுக்குக் கடிதம் எழுதி எடுப்பிக்கிறன்.''

கீறல் விழுந்த இசைத் தட்டைப் போல அடிக்கடி திருப்பித் திருப்பிச் சொல்லிக் காட்டி, தான் பிறந்த வீட்டின் பெருமையைப் பெரிசா தம்பட்டம் அடித்த அதே வேளையில், புகுந்த வீட்டின் நிலையை மறைமுகமாகக் கேவலப்படுத்தினாள்.

மறுநாள் காலை சிவகாமி கொண்டுவந்து கொடுத்த கோப்பியை ஒரு வாய்க்குமேல் குடிக்கமுடியாதவள் போல் சங்கடப்பட்டு வெளியால் கொட்டிவிட்டு வனிதா,

''இப்பிடி கஞனித் தண்ணி மாதிரி கோப்பி குடித்து எனக்குப் பழக்கமில்லை. நல்ல கடுமையான பால் கோப்பி தான் எனக்குப் பிடிக்கும்'' என்று மாமியாரின் முகத்தில் அறைந்தாற் போல் சொன்னாள்.

தாமோதரம் இவற்றைக் கவனிக்காமல் இல்லை. பொறுமையின் சிகரமாக விளங்கினார். அன்றிரவு முருகனும் வனிதாவும் நடு அறைக்குள் படுக்கப் போன பிறகு, சிவகாமியை முற்றத்தில் தனிமையில் அழைத்து ஆறுதல் கூறினார்.

''சிவகாமி, நாங்க நல்லதையே நினைத்தோம். ஆனால், நடக்கிறதோ......? சிவகாமி, உன்ர இளகிய மனசு படுகிற

வேதனை எனக்கு நல்லா விளங்குது. வனிதா உன்னைத் தூக்கி எறிந்து பேசிறதும் எனக்குத் தெரியும். உன்னாலை இதத் தாங்க ஏலாதுதான். ஆனால், என்ன செய்யிறது? எந்த நிமிஸத்திலயும் பொறுமையை மட்டும் விட்டுடாதே! முரண்டு பிடிக்கிற மாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வழிக்குக் கொண்டுவரவேணும். எடுத்தாப் போல சடக்கெண்டு அடக்கநினைச்சால் அறுத்துக்கொண்டு ஓடினாலும் ஓடிவிடும். கொஞ்சம் அவசரப்பட்டுட்டோம் என்று நினைக்கிறன். இனி பொறுமையாகத்தான் இருக்க வேணும்.''

''எங்களுக்கென்ன இன்னும் இருக்கிறது கொஞ்சக் காலந்தான். அதை நிம்மதியாகக் கழிக்கவேணுமெண்டா எல்லாத்தையும் சகிக்கவேணும், சமாளிக்கவேணும். நாம பெரிசா நினைச்ச மூத்தவனோ, எங்கட முழு நம்பிக்கையையும் போட்டு உடைச்சதும் இல்லாமல் தீராத அவமானத்தையும் தந்துவிட்டுப் போயிருக்கிறான். அந்தப் பழியை, இந்த சமூகத்தின் பொல்லாத கண்களிலிருந்து மறைக்கிறதுக்காவது நாம இளையவன்ர மனைவியோட ஒருமாதிரி ஒத்துப்போய்த்தானகவேண்டும். என்ன நடந்தாலும் சரி, இந்த நாலு சுவருக்குள்ள மட்டும் தெரியிற மாதிரி நினைச்சிக்கொண்டு மனம் சோர்ந்துபோகாமல் இருக்கவேணும். இப்பிடி இருக்கிறது வலுகடினமான காரியம் எண்டது எனக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்யிறது? அப்பிடி இருந்துதானாக வேண்டும். நீ, அப்பிடி இருக்கிறதுதான் எமக்குப் பெலனாகும்.''

நொந்துபோன மனைவியைப் பக்குவப்படுத்தும் முயற்சியில் பல விடயங்களை எடுத்துக் கூறினார் தாமோதரம்.

மருமகள் வருவதன் மூலம் தனக்கு ஓய்வும் நிம்மதியும் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த சிவகாமிக்கு, அவற்றுக்குப் பதிலாக நாட் செல்லச் செல்ல வேலைகளும் மனவேதனையும் கூடிக்கொண்டு வந்ததுதான் கண்ட மிச்சமாக இருந்தது.

சிவகாமி பொறுமையாக இருக்கவே முயன்றாள். ஆனால், அந்தத் தாயின் பொறுமையைச் சோதிக்கும் வண்ணம் பல சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்துகொண்டிருந்தன.

வழக்கமாக முருகனுக்கு சம்பளம் கிடைக்கும் தினத்தன்று மாலை, கல்லூரியிலிருந்து முருகன் வீட்டுக்கு வந்த உடனேயே தேநீரைக்கூட குடிக்காது, சம்பளம் அடங்கிய என்வலப்பை தந்தையின் கையில் கொடுப்பான். அவர் அதை ஆனந்தப் பூரிப்போடு வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு சிவகாமியைக் கூப்பிட்டு அவளுடைய கையில் வைப்பார். அவள் உள்ளம் நெகிழ அதை வாங்கி வைத்துக் கொள்வாள். அடுத்த சம்பளம் கிடைக்குமட்டும் எப்படியோ சமாளித்துவிடுவாள்.

ஆனால், இன்று சம்பள தினம். முருகன் புது மாதிரியாக நடந்துகொண்டான்.

கல்லூரியிலிருந்து திரும்பியவுடன் சம்பளம் அடங்கிய என்வலப்பை எடுத்துக்கொண்டு விருந்தையில் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த தந்தையைக் கண்டும் காணாதவன் போல நடு அறைக்குள் ''வனி வனி'' என்று செல்லம் குழையக் கூப்பிட்டுக்கொண்டு சென்றான்.

துப்பறியும் நாவல் ஒன்றில் மூழ்கி, அதன் கதாநாயகி செய்துகொண்டிருந்த வீரச் செயல்களில் மனதைப் பறி கொடுத்து, தன்னையே மறந்த நிலையிலிருந்த வனிதா, சுவையான அந்த நினைவு தடைப்பட்டுவிட்டதே என்ற வெறுப்பு பரிமளிக்க எழுந்து வெளியே வந்தாள்

''என்ன அப்பிடி தலைபோற காரியம்?''

—பார்வையால் கேள்வி எழுப்பினாள்.

''வனி! உனக்கு ஒரு அன்பளிப்பு கொண்டுவந்திருக்கிறன். கையை நீட்டு. இந்தா பிடி.''

அளவுக்கு மீறிய உற்சாகத்துடன் முருகன், தனது ஒரு மாத உழைப்பு முழுவதையும் அப்பிடியே அவளுடைய கையை அள்ளி இழுத்து என்வலப்போடு திணித்தான்.

என்வலப்பை மட்டும் எடுத்துக்கொண்டு, அவனுடைய கையை உதறிவிட்டு என்வலப்பைப் பிரித்து மடமட வென்று பணத்தை எண்ணினுள் வனிதா.

''மிச்சம்...?''

அவளின் குரலில் அதிகாரம் மேலோங்கி நின்றது.

''மிச்சமா? முத்திரைக்காக பதினைந்து சதம் மட்டும் எடுத்தனுன். சம்பளம் முழுவதுமே அவ்வளவுதான்.''

மனதில் ஏற்பட்ட திகைப்பை மறைத்துக்கொண்டு முருகன் சொன்னுன்.

''பூ...இவ்வளவுதானு? நானும் ஏதோ நானூறு ஐந் நூறு எண்டு நினைச்சன்.''

—அலட்சியத்தோடு கூறிக்கொண்டே உள்ளே சென் ருள். தனது பெட்டியைத் திறந்து என்வலப்பை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு, மீண்டும் கதிரைக்குத் திரும்பி நாவலை விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினுள் வனிதா.

அப்போது கூட அவளின் போக்கைச் சரியாகப் புரிந்துகொள்ளாத— புரிந்துகொண்டும் ஒன்றும் செய்ய முடியாத— முருகன் அவளைப் பார்த்துக் கூறினுன்:

''வனீ! நீதான் லட்சுமி மாதிரி வீட்டுக்கு வந்திருக்கி றீயே! பிறகென்ன? இனி என்ர சம்பளம் கெதியா கூடி விடும்.''

ஏளனம் நிரம்பி வழிந்த முகத்தை வில்லங்கமாகச் சிரிக்கப்பண்ணிக்கொண்டிருந்த இளைய மகனின் பரிதாப நிலையை மேலும் அவதானிக்க விரும்பாது, வாசலைவிட்டு விலகி குசினிக்குள் புகுந்துகொண்டாள் சிவகாமி.

இதுவரை தன் கையில் கிடைத்துவந்த மகனின் சம் பளத் தொகை இன்று மருமகளின் கைக்கு மாறிக்கொண் டதைப் பற்றி அவளுடைய மனம் வருந்தவில்லை. அப்படி வருந்துவதற்கு நியாயம் இருப்பதாக அவளுக்குத் தெரிய

வில்லை.ஏனெனில் அந்த மாற்றம் அவள் எதிர்பார்த்த ஒரு நிகழ்ச்சிதான்.

அவளுடைய வேதனைக்கெல்லாம் காரணம் அந்த மாற்றம் நடைபெற்ற முறையில்தான் இருந்தது.

கண் முன்னாலேயே தான் பெற்ற மகன் பட்ட அவமானம் அவளை முள்ளாக வேதனைப்படுத்தியது.

முருகனுக்காக மூடிவைத்திருந்த தேநீர்க் கோப்பையைக் கழுவிக்கொண்டிருந்த அவளுடைய இதயம் அழுது கொண்டிருந்தது.

* * *

இப்போது கொஞ்ச நாட்களாக, பாலையூற்றில் இருக்கிற பெண்கள்,மரண வீடு,கல்யாண வீடு என்று எங்காவது ஒன்றுகூடச் சந்தர்ப்பம் கிடைத்தால் தாமோதரனின் மருமகள் வனிதாவைப் பற்றிய பேச்சே முழுமையாக அவர்களின் வாய்க்கு அவலாக அமைந்திருந்தது. அந்த அளவிற்கு முருகனின் மனைவி வனிதாவின் கெடுபிடிகள் தீவிரமடைந்திருந்தன.

''அடேயப்பா!அவள்ர உடையும் நடையும்...கொழும்பில இருந்திட்டு வந்தவ எண்டா என்ன கொம்பா முளைச்சிருக்கும்.நாங்க எல்லாம் கொழும்புக்கு போகாம வராம இருக்கிறோம் என்ட நினைப்புப் போல.''

''ஓமென்றன். என்னவோ எங்களுக்குத் தெரியாத கொழும்பில இருந்து வந்தவையாக்கும். அவள் பண்ற நடப்பும் றெக்கிளாசும் என்ன மாதிரி இருக்கு தெரியுமா?''

''பாவம் சிவகாமி.அந்தக் கிழவி பாடுதான் பெரிய பாடாப் போச்சு.ஊருல உலகத்தில மருமகள் என்றொருத்தி வீட்டுக்கு வந்தால் மாமிமார்ர அட்டகாசம் தான்

தாங்கமுடியாம இருக்கும் என்பாங்க. இங்க நடக்கிறதெல்லாம் தலைகீழ். மருமகள்ர அட்டகாசந்தான் நடக்குது.''

''அந்தக் கிழவரைப் பார்த்தா ஆகக் கண்ராவியாக இருக்கு. பாவம். பெரிய பொடியன் காவாலியாகப் போயிற்ருன். இவன் இளையவனோடு ஆறுதலாக இருக்கலாமெண்டு நினைச்சார்... ஆனு இந்தப் பொடியன் அந்தப் பெரிய பொடியனை நல்லவனுக்கிவிட்டான். ஆக எல்லாத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரண்டாலும் பெத்தவங்களுக்கு ஒருசதத்திற்குப் பிரயோசனம் இல்ல.''

''ஓம் ஓம்! ஐந்து சதம் தேவையெண்டாலும் அந்த அம்மா கையைக் கட்டிக்கொண்டு மருமகள்ர 'ஹான்ட் பாக்'கப் பாத்துக்கொண்டு நிக்க வேணுமாம்.''

இவை மாத்திரமல்ல, இன்னும் என்னென்னவோ தெரிந்தது பாதி தெரியாதது பாதியாக அவரவர் ஆக்கத் திறமைக்கு ஏற்றவாறு கண் மூக்கு வைத்துக் கதைத்தார்கள். அந்தக் குடும்பத்தின் நடைமுறை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் பெரிதுபடுத்திப் படம் பிடித்துக் காட்டினர்கள்.

இவை வம்புப் பேச்சுக்கள் என்று கொண்டாலும் இந்தப் பேச்சுக்களில் வதந்தியை விட உண்மை அதிகம் இருந்தது.

உழைத்துக் களைத்துப்போன அந்த வயோதிபத் தம்பதிகளின் பேரில் அனுதாபங் கலந்த பரிதாபப் பேச்சாக அவை இருந்தன.

# 9

அன்று சனிக்கிழமை!

முருகனுக்கு கல்லூரி விடுமுறை நாள்.

அதற்கு முதல்நாள் வெள்ளிக்கிழமை இரவு, முருகனும் அவனுடைய மனைவியும், டவுனுக்குப் படம் பார்க்கப் போயிருந்தார்கள்.

படம் முடிந்து டவுனிலிருந்து வெளிக்கிடும் கடைசி பஸ்ஸில் ஏறி பாலையூற்றுக்கு வந்து சேர்ந்தபோது நேரம் பதினொன்ருகியிருந்தது.

அவர்கள் சாப்பிட்டுவிட்டு படுக்கச்சென்ற பிறகு, தானும் சாப்பிட்டுவிட்டு, சட்டிபானைகளையும் பீங்கான் கோப்பைகளையும், தனித்து ஒருத்தியாக கழுவி அடுக்கிவிட்டு சிவகாமி பாயை விரித்தபோது நேரம் நடு இரவு பன்னிரண்டுக்கு மேலாகியிருந்தது.

இரவு நேரஞ் சென்று படுத்ததினுல் ஏற்பட்ட சோர்வு உடம்பை வாட்ட, அன்று சனிக்கிழமை விடுமுறை என்றதினுல் சிவகாமியால் விடிந்த பிறகே எழும்ப முடிந்தது.

முருகன் கல்லூரிக்குப் போகும் நாட்களில் விடியற்காலை நாலு மணிக்கே எழுந்து சமையல் வேலைகளைக் கவனித்து அவனுக்குச் சாப்பாடு கொடுத்தனுப்பி வைப்பாள்.

இன்று விடுமுறை.

அவசர அவசரமாகச் சமைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனுல் சிவகாமி குசினிக்குள் போய் அடுப்பை மூட்டி, கோப்பி போடுவதற்காக கேத்தலில் நீரை ஊற்றிக் கொதிக்க வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

இரவில் நித்திரை சரியாகக் கொள்ளாததால் 'விண் விண்' என்று வலித்த கன்னப் பொட்டுக்களை மெதுவாக அழுத்தி விட்டவாறு, ஈர்க்கில் கட்டை எடுத்து முற்றத்தில் விழுந்து கிடந்த கஞ்சல் குப்பைகளை கூட்டித் துப்புரவு செய்வதில் அவள் முனைந்தாள்.

கொழும்பிலிருந்து தகப்பன் அனுப்பிவைத்த ''சிங்கப்பூர் கஸட்'' றேடியோவில் கோபால் நேரம் ஏழுமணி அறிவித்து, அதைத் தொடர்ந்து தமிழ்க் குழந்தைகளுக்கு (ஆங்கிலத்தில்) 'ஹப் பி பேர்த் டே' வாழ்த்துக் கூறும் நிகழ்ச்சியும் தொடங்கி விட்டிருந்தது. ஆயினும் இன்னமும் கோப்பி கிடைக்காத வேகாரத்தோடு எழுந்து வந்தாள் வனிதா.

கைகளை நீட்டிச் சோம்பலை முறித்துவிட்டு, 'டூத் பேஸ்ட்' நிரம்பி வழியும் பிரஷ்ஷுடன் நித்திரை சரியாகக் கலையாத ஒரு மோன நிலையில் கிணற்றடிப் பக்கம் சென்ற வனிதா சில நிமிடங்களில் பத்திரகாளியானாள்.

''இப்படி ஒரு அநியாயம் எந்த வீட்டில் நடக்கும்?''

அவள் எழுப்பிய ஆவேசக் குரலைக் கேட்டு அதிர்ந்து போன சிவகாமி கையிலிருந்த விளக்குமாறை குசினித் தகரத்தோடு சாய்த்து வைத்துவிட்டு வனிதாவுக்கு அருகில் வந்தாள்.

வனிதாவின் கனல் கக்கும் பார்வை பட்டுத் தெறித்த இடத்தை திரும்பிப் பார்த்தாள் சிவகாமி.

அங்கே!

கிணற்றுக் கட்டுக் கருகில், பக்கத்து வளவில் குடியிருந்தவர்களின் வளர்ப்பு நாய்க் குட்டிகள் இரண்டும் தன்னிச்சையாக கடித்துக் குதறி இழுத்துப் பிய்த்து விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றின் விளையாட்டுக்கு இலக்காகி இழுபட்டுக் கிழிந்து ஈரமண்ணில் துவண்டு தொங்கிக் கொண்டிருந்தது வனிதாவின் விலையுயர்ந்த சிங்கப்பூர் நைலக்ஸ் சாறி ஒன்று.

நேற்று இரவு வனிதா படத்திற்குப் போற போது உடுத்துக் கொண்டு போன சாறி அது. வியர்வை மணத்தோடு தியேட்டரில் கப்பியிருந்த சிகரட் புகை நாற்றத்தையும் போக்குவதற்காக வெளியில் கட்டியிருந்த கயிற்றுக் கொடியில் அதைக் காயப்போட்டிருந்தாள்.

அந்தச்சாறி பட்டுக்கொண்டிருந்த பாட்டைப் பார்த்ததும் பதறிப் போன சிவகாமி, கீழே கிடந்த கல் ஒன்றைப் பொறுக்கி நாய்களின் மேல் விட்டெறிந்து அவற்றைக் கலேக்கும் முயற்சியில் ஈடுபட்டாள். அந்தக் கல் விழுந்த வேகத்தில் நாய்க் குட்டிகள் கவ்வியிருந்த சீலையை அப்பிடியே விட்டு விட்டு வேலி ஓட்டைக்குள்ளால் பாய்ந்து ஓடி மறைந்துவிட்டன.

''ஐயோ! அருமந்த சாறி! இந்த வீட்டுல ஒருவருக்கும் கவனம் எண்டது இல்ல. இரவில படுக்கப் போகக்க வெளியில, கொடியில் என்ன காயப் போட்டு இருக்கு எண்டு, பார்த்து எடுத்து வைக்கத் தெரியாத ஜென்மங்கள்.''

விலேயுயர்ந்த சாறி அதுவும் தகப்பன் வீட்டிலிருந்து கொண்டுவந்த 'சிங்கப்பூர் நைலக்ஸ்' கிழிபட்டுக் கிடந்த கோலத்தைத் தாங்க முடியாத வனிதாவின் வாயிலிருந்து திட்டுகள் வெளிப்படத் தொடங்கின.

இரவு, வெளியில் வைத்து சட்டிபானேகளேக் கழுவிக் கொண்டிருந்தபோது, கயிற்றுக் கொடியில் தொங்கிக் கொண்டிந்த அந்தச் சாறியை சிவகாமி கவனிக்காமல் இல்லே.

'பாவம் சிறுசுகள் களேச்சுப்போய்ப் படுத்துட்டுதுகள் போல' என்று முருகன் ஜோடியில் சுரந்த இரக்க உணர்ச்சி மேலிட, அந்தச் சாறியை எடுத்து மடித்து உள்ளே வைக்கவேண்டுமென்று தான் சிவகாமி நினைத்திருந்தாள். ஆனுல், எல்லா வேலேகளேயும் முடித்துக் கொண்டபோது ஏற்பட்ட அயர்வில் பாவம் அவள் அதை மறந்து போனுள். அதற்காக வனிதா இப்படி அபாண்டமாகக் குத்திக் காட்டிப் பேசவேண்டுமா?

''நான் என்ன, வேணுமென்டா விட்டனுன் வனிதா? என்னேட கூடமாட உதவி செய்யத்தான் உன்னுல் முடியிறதில்லே... உன்ர உடுப்புக்களே எண்டாலும் எடுத்துப் போட்டிருக்கலாம் தானே!''

பரிவோடு சிவகாமி இப்படிக் கேட்டது வனிதாவின் கோபத்தை அதிகரித்து மேலும் எரிச்சலை மூட்டியது.

''ஓஹோ! அப்பிடி எண்டா என்னை என்ன வேலைக்காரி எண்டு நினைச்சிருக்கிறீங்க போல. வேலைக்காரி செய்யிற வேலய எல்லாம் என்னைச் செய்ய சொல்றீங்களோ? அதுக்கு வேற ஆளைப் பாக்க வேணும்!''

'வேலைக்காரி' என்று வனிதா பொடி வைத்துப் பேசி சுட்டிக் காட்டினது தன்னைத்தான் என்பதை சிவகாமி புரிந்து கொண்டாலும் உள் எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

ஒரு சின்ன விஷயத்திற்கு வனிதா இப்பிடி வார்த்தைகளைக் கொட்டி விடுவாள் என்று சிவகாமி எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையை மேலும் நீடிக்கவிட்டால் முடிவு எங்கே போய் முடியுமோ என்று கிலேசப்பட்டாள். பேச்சை திசை திருப்ப முயன்றாள்.

''வனிதா! வீண் கதை எதுக்கு? இரவுல என்னால சரியாப் பாக்க முடியல்லை. இப்ப என்ன தலையா போயிட்டுது? ஏதோ கிடைக்க முடியாத என்னமோ ஒண்டு. முருகன்ட சொல்லி இன்னுமொண்டு வாங்கிக் குடுக்கச் சொல்றன்.''

''ஓஹோ! அப்பிடி ஒரு எண்ணமும் இருக்கா?''

நையாண்டி தொனிக்கச் சொன்ன வனிதா மேலும் தொடர்ந்தாள்.

''உங்கட மகன் வாங்கித் தந்த சாறியைத் தானே நான் உடுக்கிறன்! அப்பிடியும் இருந்திட்டென்றா பிறகென்ன? மகன் வாங்கித் தருவானும் மகன். இப்பிடி ஒரு சாறியை வாங்கித் தந்திட்டா, பிறகு இந்த மாதம் முழுவதும் சாப்பிடுவதற்கு என்ன செய்யிறதா எண்ணம்? என்னவோ ஐந்நூறு, ஆயிரம் எண்டு உழைச்சுக் கொட்டுகிற மகனைப் பெத்துவிட்டதா நினைப்பு!''

இடுப்பில கையை வைத்துக் கொண்டு பொரிந்து தள்ளினாள் வனிதா. அவளோடு வரிந்து கட்டிக் கொண்டி

ருக்க சிவகாமி விரும்பவில்லை. ஆனாலும், ஏற்ற பதிலைச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

''அவன்ர சம்பளம் ஐந்நூறு ஆயிரம் இல்ல எண்டு முந்தியே உனக்குத் தெரியுந் தானே! அது தெரிந்து தானே அவனைக் கட்டி இருக்கிறாய். பிறகு என்னத்துக்குச் சும்மா வீண் கதை? எல்லோரும் உன்ர அப்பாவைப் போல வியாபாரமா செய்யிறாங்க? ஆயிரம் ரெண்டாயிரம் எண்டு உழைக்க!''

சிவகாமி சொல்லிக் கொண்டிருந்தபோது, பின்வளவி லிருந்த காய்ந்துபோன வேலியில் சரசரப்புக் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள். நாலைந்து தலைகள் வேலிக்கு மேலால தெரிந்தது.

தங்களைத்தான் அவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள் என்று உணர்ந்தபோது சிவகாமியின் உடம்பு கூசியது. இதற்குமேல் கதையை வளர்க்கிறது புத்திசாலித்தனமாக இருக்காது. என்ற முடிவில் வனிதாவைப் பார்த்து உரிமையோடு சொன்னாள்;

''அங்க பின்னால பார்! பின்வளவு ஆக்கள் புதினம் பார்க்கிறாங்க. அவங்க சிரிக்கிறதுக்கு முன்னால, பேசாம முகத்தைக் கழுவிக் கொண்டு உள்ளே போ!''

மருமகள் வீட்டிற்கு வந்த இவ்வளவு காலத்தில் சிவகாமி இப்படி உரிமையோடு பேசியதுகிடையாது. இதுதான் முதற் தடவை. வனிதா மெதுவாக பேச்சை நிறுத்தி உள்ளே போய்விடுவாள் என்று எதிர்பார்த்தாள். ஆனால், அப்படி நடக்கவில்லை. பதிலாக அவளின் முகம் குப்பென்று சிவந்தது. தலையைச் சிலுப்பிக் கொண்டு, விட்ட சண்டையைத் தொடரத் தயாராக இருந்தாளே தவிர மாமியாரின் கட்டளைக்குப் பணிந்துபோக விரும்பவில்லை.

''என்ன சொன்னீங்க? சிரிக்கப் போறாங்களா? இனிமேல் சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு? உங்கட மூத்த மகனை பெத்து வளர்த்த சித்துவக் கேட்டைப் பார்த்துத்தான்

சிரிப்பாய் சிரிக்கிறுங்களே! அது போதாதா? இன்னும் என்ன சிரிப்பு வேண்டியிருக்கு? என்னமோ மானத்த பெரிசா நினைக்கிறவங்களைப் போல கதைப் பேச்சு. காசு விஷயத்தில தரித்திரமா இருந்தாலும் 'ஓடர்' பண்றதில ஒண்டும் குறைச்சல் இல்ல.''

வனிதா, வரிந்து கட்டிக் கொண்டு பொரிந்து தள்ளினுள்.

ஏழ்மை நிலையைச் சுட்டிக் காட்டி அதை ஒரு பெலவீனமாக்கி, அந்த பெலவீனத்தையே பெரிது படுத்தி சுட்டிக் காட்டுவதை பொறுக்க முடியாத சிவகாமி, வனிதாவின் வாயை அடக்கத் துடித்து ஏதோ சொல்ல வாயை உன்னினுள். ஆனுல், வார்த்தைகள் ஒன்றும் வெளிவரவில்லை.

வீட்டின் பின் விருந்தைக் கதவுக் கருகில், கலங்கிய கண்களோடு வந்து நின்றகணவரின் முகத்தைக்கண்டதும், சிவகாமி சொல்ல நினைத்ததை மென்று விழுங்கிக்கொண்டு குசினிக்குள் புகுந்து கொண்டாள்.

வசதிகள் வாய்ப்புகள், எல்லாவற்றையும் இழந்து, குடும்ப நலனுக்காக தங்களையே ஒறுத்துத் தேய்த்து வரும் சிவகாமியின் மென்மையான உள்ளுணர்வுகள் இப்படி அடிக்கடி தூண்டப்பட்டு வேடிக்கை பார்க்கப் படும் போதெல்லாம், கணவரின் பார்வையில் பிரகாசிக்கும் ஈடு இணையற்ற கனிவில் ஓரளவு தணிந்து கலக்கத்தைக் குறைத்துக் கொள்வாள்.

பாவம் அவளால் மேற்கொண்டு என்ன செய்ய முடியும்? அவளின் அந்தப்புரமான குசினிக்குள் புகுந்து கேவிக் கேவி அழுது கண்ணீர் வடிப்பதில் மனநிறைவு காண வேண்டியதுதான்.

காலையில் விடிந்ததும் விடியாததுமாக யாரையோ பார்ப்பதற்காக வெளியே புறப்பட்டுச் சென்றிருந்த முருகன் இன்னும் வரவில்லை.

அவனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு தாமோதரம் முன் விறுந்தைக்கு வந்து சாய்மானைக்கதிரையில் தஞ்சமடைந்து கிடந்தார்.

சிவகாமியை நினைத்தபோது அவரது கண்கள் கலங்கின. 'எத்தனையோ பெண்களைப் பெற்ற தாய்மார் கூட நிம்மதியாக — சொகுசாக சீவித்துக் கொண்டிருக்கும் போது, இரண்டே இரண்டு ஆண்களை மட்டும் பெற்ற இவளுக்கு ஏன் இந்தத் தண்டனை?'

'சொகுசாக இருக்க வேணும் என்று அவள் ஆசைப்பட்டது கிடையாது. ஆனால், நிம்மதியாக இருக்க ஒரு நாளும் வாய்ப்பு ஏற்படாதா? நிம்மதியைத் தேடி அவள் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும், தொல்லையும் துன்பமும் பின்னாலேயே தேடிப் போய்விடுகிறதே!'

சற்று முன்னால், நடந்து முடிந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தாள்.

'நல்ல வேளை இப்போது முருகன் இங்கு இல்லாமல் விட்டது. இருந்துதான் என்ன செய்வான்? பெற்ற தாய்க்காக வாதாடுவானா? கட்டிய தாரத்திற்காக வாதாடுவானா? தங்கம் சுமந்த கழுதையிடம் பொதியை ஏற்றி வைத்தால் என்ன நடக்கும்?'

தகரக் கதவு திறக்கப்படும் ஓசையைக் கேட்டதும் அவர் உஷாரானார்.

வெளியில் சென்றிருந்த முருகன் வீட்டிற்கு வந்தான். தாமோதரத்தின் அனுபவ எதிர்பார்ப்பை போலவே முருகன் நடந்துகொண்டான். நடு அறையினுள் அவன் போனதும் 'குசு குசு' என்று உள்ளே தலையணை மந்திரம் ஓதப்படுவதை தாமோதரம் உணர்ந்து கொண்டார். வரவிருக்கும் பெரும் புயலை எப்படித் தாங்கிக் கொள்வது? சமாளிப்பது என்பது பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டார்.

அவரின் எதிர்பார்ப்புப் போலவே, உள்ளே போன வேகத்திலேயே முருகன் திரும்பி வந்தான். மூலையில் சாய்

மானைக் கதிரையில் படுத்திருந்த தகப்பனின் முன் வந்து நின்றான். அவனுடைய முகம் கோபத்தில் விம்மி புடைத்திருந்தது. கண்கள் சிவந்திருந்தன.

"அப்பா! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்திட்டன். இனி இந்த வீட்டில் சீவிக்கிறதில புண்ணியமில்லை. வரவர இங்கு ஒருவருக்கும் மரியாதை தெரியவில்லை. மருமகளுக்கு ஏற்ற மதிப்பைக் குடுத்து நடத்தத் தெரியவில்ல. வனிதாட குடும்பம் எப்பிடிப்பட்டதெண்டு தெரிஞ்சு கொண்டும் அவளோட ஒத்துப் போகத் தெரியாத இந்த வீட்டில் இனி எனக்கென்ன வேலை? நான் வேற வீடு பாத்துக்கொண்டு போகப் போறன்!"

ஆவேசம் வந்தவனைப்போல் கொட்டி முழக்கிய மகனை நிமிர்ந்து பார்க்க விரும்பவில்லை தாமோதரம். மருமகளோடு ஒத்துப் போக முடியாது என்று சிவகாமி சொல்கிறாள்? வனிதாவோடு ஒத்துப் போறதுக்காக சிவகாமி எவ்வளவு தூரம் தன்னையே பலியாக்கிக் கொண்டு வருகிறாள் என்பதை இவன் அறியாமலா பேசுகிறான்? புதுமனைவியின் மோகம் இப்படி இவனைக் கேவலமாக்கி விட்டதா?

இவனுடைய கொள்கை சரி, வனிதாவுடைய கருத்து பிழை என்றெல்லாம் சரி பிழை பேசி தர்க்கம் போடுவதற்கு இது நேரமில்லை என்பதை தாமோதரம் உணர்ந்து கொண்டார்.

'குடும்பம் என்பது ஒரு கோயில். அது நீதிமன்றமல்ல. சட்டப் புத்தகங்களின் துணையைக் கொண்டு எது சரி, எது பிழை என்று விசாரிப்பதும், வாதத் திறமையுள்ளவன் வெற்றி கொள்வதும் நீதிமன்றத்தைப் பொறுத்த வரை சரியாக இருக்கலாம். ஆனால், குடும்பத்தில் சரி பிழை என்ற வாதத்திற்கு கொஞ்சமும் இடமில்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சரியையும் பிழையையும் அப்பால் ஒதுக்கி வைத்துவிட்டு அன்பிற்கு முதலிடம்

கொடுக்க வேண்டும். அப்போதுதான் குடும்பம் என்ற கோயில் ஒளி கொடுக்கும்.'

பலதையும் சிந்தித்துக்கொண்டு கூரை முகட்டைப் பார்த்தவாறே சொல்லத் தொடங்கினுர் தாமோதரம்:

''முருகா! சொல்லக் கூடாத வார்த்தையை எல்லாம் சொல்கிருய். வீட்டைவிட்டு போகப் போகிறன் என்கிருய். அதுதான் உனக்கு சரி என்று பட்டால் அப்பிடியே செய்! உன்னைத் தடுக்கிறதுக்கு நான் யார்? நீ படிச்சவன். எதையும் விரைவாக விளங்கிக் கொள்ளுகிற திறமை இருக்கு. உனக்குத் தெரியும், பிரிஞ்சு போற ஒன்றச் சேர்க்கிறது கஷ்டமே தவிர, பிரிச்சு வைச்சு வேடிக்கை பாக்கிறது லேசான வேலை என்று அதை நீ செய்யத்தான் வேணுமென்று முடிவு கட்டினுல் அதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்? இந்த வீட்டில் உன்னுடைய மனைவி எதிர்பார்க்கிற வசதிகள் எதுவும் இல்லை என்றதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனு, அதுக்காக வீட்டை விட்டு வெளிக்கிடுறதுதான் செய்யக் கூடிய வழி என்று நீ நினைக்கிருய். நாலைஞ்சு பிள்ளைகள் இந்த வீட்டில இருந்து அவர்கள்ட கரைச்சல் பொறுக்காம நீ வெளியே போக நினைச்சா அதில நியாயம் எண்ட ஒன்று இருக்கு. ஆனு, இந்த வீட்டில இருக்கிறது நீ ஒருத்தன்தான். வயது போன எங்களால கஷ்ரம் எண்டு சொல்லி, எங்கள அனுதையாக விட்டுட்டு, இதே இடத்தில் நீ வேறயாச் சீவிக்க விரும்புகிறது, வேணுமென்றே நீ எங்களுக்குத் தேடிக் குடுக்கிற கெட்ட பேராகும். அதுதான் உன்ர லட்சியம் என்ருல் அப்பிடியே செய்......''

வாழ்க்கை வசதிகள் பலவற்றை இழந்திருந்தும், இதுவரை நிதானத்தை மட்டும் இழந்து பழக்கப் படாத தாமோதரத்தின் குரல் பிரிவுணர்ச்சியை ஏற்றுக்கொள்ள மறுத்து கரகரத்தது.

முருகன் ஒன்றுமே பேசவில்லை. கதிரையின் மேல் விளிம்பை வலது கையால் தேய்த்தபடி சில வினுடிகள்

நின்று கொண்டிருந்தான். பிறகு எதையோ நினைத்தவனாக தலையை ஆட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டான்.

'எப்படிச் சொன்னாலும் முருகன் படித்தவன். நான் சொன்னவற்றையெல்லாம் நின்று நிதானித்து யோசித்துப் பார்ப்பான். நல்ல முடிவையே எடுப்பான்......'

பதில் எதுவும் சொல்லாமல் முருகன் வெளியேறியதைக் கொண்டு, தனது கொள்கைகளை ஓரளவு புரிந்து கொண்டுள்ளான் என்ற நினைப்பின் திருப்தியில் இவ்வாறு எண்ணினார் தாமோதரம்.

காலையில் வெளியே புறப்பட்டுப் போன முருகன் மத்தியானம்தான் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவனுடைய கையில் இரண்டு சாப்பாட்டுப் பார்சல்கள் இருந்தன. மத்தியானம் வீட்டில் சமைத்த சாப்பாட்டில் முருகனும் வனிதாவும் பங்கு கொள்ளவில்லை.

இரவும் அவர்கள் சாப்பிட மறுத்துவிட்டனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.

விடிந்ததும் விடியாததுமாக வாசலில் வந்து நின்ற டாக்ஸியில், ஏற்கனவே இரவு முழுவதும் அடுக்கித் தயாராக வைத்திருந்த சாமான்களைக் கொண்டு போய் முருகன் ஏற்றியபோது தாமோதரம் நிலை கலங்கிப் போனார். இளையவன் முருகன் இவ்வளவு விரைவில் இந்த முடிவுக்கு வருவான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

கண்களில் நீர் பனிக்க, தகரக்கதவுக்கு அருகில் நின்று கொண்டிருந்த தகப்பனையும் தாயையும் கை கூப்பி வணங்கி விடைபெறும் போதே முருகனின் கண்களும் கலங்கியிருந்தன.

தான் செய்தது போலவே, பெற்றவர்களிடமிருந்து விடை பெறும்படி வனிதாவை முருகன், கண்களால் கேட்டுக் கொண்டபோது வனிதா அதைக் கவனிக்காதவள் போல விறுவிறென்று நடந்துபோய் டாக்ஸியின் பின்

கதவை இழுத்துத் திறந்து ஏறி இருந்ததை, உணர்விழந்து கொண்டிருந்த அந்த வயோதிபப் பெற்றோர் கவனிக்கத் தவறவில்லை.

முன் கதவைத் திறந்து முருகன் ஏறியதும், புழுதியை வாரி இறைத்துக் கொண்டு டாக்ஸி புறப்பட்டது.

டாக்ஸி புறப்பட்டுபோய் நீண்ட நேரத்திற்குப் பிறகுதான் தாமோதரத்திற்கு அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட முடிந்தது. மனைவி சிவகாமியை திரும்பிப் பார்த்தார். பனித்திருந்த அவருடைய கண்கள் உடைப்பெடுத்தன. பெரும் புயலுக்குப் பின் காணப்படும் அசாதாரண அமைதி நிலவிய அந்த வீட்டிற்குள் போவதற்கு மனமின்றி வாசல் படியிலேயே நின்றிருந்தாள் சிவகாமி.

அன்று முழுவதும் அந்த வீட்டில் அடுப்பு புகையவேயில்லை. பாசப் பிரிவினையை தாங்கமாட்டாமல் இரண்டு இதயங்களும் அழுது கொண்டிருந்தன.

## 10

முருகனும் அவன் மனைவி வனிதாவும் தனியாக குடித்தனம் செய்யப் போய் ஏறக்குறைய மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. ஆயினும் தாமோதரம் என்னவோ முப்பது வருடம் வயதினுல் மூப்படைந்தவர் போல தோற்றமளித்தார். கண்கள் நல்லாகக் குழிவிழுந்து உடல் தளர்ந்து காணப்பட்டார்.

பழைய வீடாக இருந்தாலும், பாவனையில் அவர்கள் அதை வைத்திருந்த லாவண்யத்தில் களை பொருத்திக் காணப்பட்ட நிலைமை இன்று பழங்கதையாய்ப் போய் விட்டது.

அவருடைய அந்தப் பழைய வீட்டின் முன்பக்கத்து அரைச் சுவரின் கீழ்ப்பகுதியில் பல இடங்களில் சுண்ணும்புப் படைகள் கழன்று அவரின் தோற்றத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. அந்த அரைச் சுவரில் கொஞ்சம் நல்லபடியாக இருந்த சுண்ணும்புப் பகுதிகளிற் கூட, அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுவர்களின் கரிக் கோடுகளிலான சித்திரங்கள் நிறைய இடம் பிடித்திருந்தன. காற்றினுல் ஒதுக்கி எறியப்பட்ட தெருக்குப்பைகள் முற்றத்தில் குவிந்து கிடந்தன.

முன்பெல்லாம் பளிச் சென்று துப்பரவாக இருந்த வீட்டின் முன்பக்கம், இப்போது குடியில்லாத நிலமாக, தன்னிச்சையில் தாறுமாருக வளர்ந்திருந்த புற்கள், கால் நடைகளின் எச்சில் மலங்கள் என்பவற்றின் ஒதுக்கிடமாக மண்டிக் காணப்பட்டது.

மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

இந்த மூன்று மாதங்களில் ஒரு நாள் தானும் வெளியே வரத்துணியாத—வரவிரும்பாத அந்தத் தாய், எப்படி முன் பக்கத்திற்கு வந்து குப்பை கூளங்களை அகற்றித் துப்பரவு செய்வாள்? தானுண்டு தன் குசினி உண்டு என்று ஒதுங்கிக் கொண்டாள்.

விருந்தை மூலையில் அந்த சாய்மனைக் கதிரை வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொண்டு, பழைய நிகழ்ச்சிகளை அசை போடவோ, வீட்டின் முன்பகுதிகளைக் கூட்டித் துப்பரவு செய்யவோ தாமோதரத்திற்கு இப்போது நேரம் கிடைப்பதில்லை.

நீண்டு பெருகிக் கொண்டிருக்கும் மாலை நேரத்து நிழலாக, தம்மை பிடித்தலைக்கும் வறுமைப் பிணியை விரட்டியடிக்க, தன் இயல்புக்கு மீறிய வேகத்தில் தாமோதரம், வருவாய் தரக் கூடிய—அவரால் செய்யக் கூடிய வேலைகளைத் தேடி ஓடிக் கொண்டிருந்தார்.

கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்த காலத்தில் அவரிடம் காணப்பட்ட நல்ல ஒழுக்கப் பண்புகளால் கவரப்பட்ட பல இளைஞர்களில் ஒருவனான இராஜநாதன் இன்று பட்டதாரியாகி ஆசிரியராக அயற் கிராமம் ஒன்றில் கடமை புரிந்து கொண்டிருந்தான்.

அவனை ஒருநாள் சந்திக்க நேர்ந்த சம்பவம் தாமோதரத்தின் வாழ்வில் மற்றுமொரு திருப்பு முனையாக அமைந்தது.

அந்தச் சம்பவத்தை விபத்து என்பதா அதிர்ஷ்டம் என்பதா என்று இன்றுவரை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. ஏனெனில் இரண்டும் ஒன்றாக நடைபெற்றதே காரணமாகும்.

பட்டணத்திற்குப் போய், தெரிந்த நண்பர் ஒருவரைப் பார்த்து வழக்கமான 'வேலை தேடும் படலத்தின் ஒரு பகுதியை முடித்துக்கொண்டு சோர்ந்த மனத்துடனும், 'பைப்' நீரால் நிரப்பப்பட்ட வயிற்றுப் பாரத்துடனும் பாலையூற்றை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கும் போதே அந்த விபத்து நடைபெற்றது.

மலையிலிருந்து அனுசந்தி வரை ஓடிக் கொண்டிருந்த 'பஸ்' ஸில் போவதற்கு சில்லறை ஒன்றுமில்லாத காரணத்தால் தகித்துக் கொண்டிருந்த வெயிலையும் பொருட்படுத்தாமல் தாமோதரம் நடந்து மட்டிக்களிப்பாலத்தைத் தாண்டி லிங்க நகருக்குத் திரும்பும் கிறவல் பாதையை அண்மிக்கும் போது அவருக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது.

முதல் நாள் இரவிலிருந்து ஒன்றுமே சாப்பிடாததால் பலயீனப்பட்டு கால்கள் தள்ளாடின. ஏதோ பிரளயம் ஒன்று அவரைத் தாக்குவது போன்ற பிரமை பிடித்துத் தள்ள நினைவு மயங்கினார்.

அதன் பிறகு............

[library stamp]

இராஜநாதன், தனது காரின் முன்னால் அறிவு மயங்கிய நிலையில் விழுந்து கிடந்தவருக்கு அவசரமும், அவசியமுமான முதலுதவியைச் செய்து முடித்த போது தனது உதவி இப்போது மாத்திரமல்ல அந்தப் பெரியவரின் சீவியம் முழுவதற்குமே தேவை என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

தாமோதரத்தின் உடல் நிலையும், தோற்றமும், அவரைப்பற்றிச் சேகரித்த விபரங்களும் ஒன்று சேர்ந்து இராஜநாதனுக்கு பல விடயங்களைத் துலாம்பரமாக வெளிக்கொணர்ந்து அந்த நிமிடமே ஒரு முடிவான தீர்மானத்திற்கு அவன் வந்தான்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில், தனது அறிவுக் கண்களைத் திறந்து விட்டதோடு, நல்ல பண்புகளால் வழி காட்டி, நாம் முன்னேற வழிவிட்டு ஒதுங்கி நின்ற அந்த முன்னாள் ஆசிரியரான தாமோதரத்தை இப்போது பிடித்து வாட்டும் கஷ்ட நிலையைப் போக்க, அவருக்கு ஒரு வேலையைத் தேடிக் கொடுத்து விடும் முயற்சியில் அவன் முழுமூச்சாக முனைந்தான்.

சங்கக் கடைகளுக்கு நாள் சம்பளத்தில் இரவுக் காவலர்களை நியமிக்கப் போகிறார்கள் என்ற செய்தியை அவன் அறிந்தவுடன், அந்த வேலையை தாமோதரத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்ற வழிகளைத் தேடினான்.

ஜெனரல் மனேஜரிலிருந்து கிளை மனேஜர் வரை, பிரசிடன்ற் தொடக்கம் பிராஞ்ச் கொமிட்டி மெம்பர் வரை எல்லோரையும் சந்தித்து கதைத்ததின் பேரில் கூட்டுறவு யூனியனின் கன்னியா கிளை நிலையம் ஒன்றில் காவல் வேலை ஒன்றை பெற்றுக் கொடுப்பதில் இராஜநாதன் வெற்றிகண்டான்.

பெற்று வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகளில் மூத்தவனால் ஏற்பட்ட கறை ஒரு புறம், இளையவன் புதிய

மனைவியின் கட்டுப்பாட்டுக்குள் பணிந்து அவர்களைப் பரித விக்க விட்ட வேதனை மறுபுறம், பிள்ளைகளைச்சரியாக வளர்க்கத் தெரியாத அப்பாவிகள் என்று அவருடைய பலவீனத்தைச் சுட்டிக்காட்டி முகத்துக்கு முன்னாலும் முதுகுக்குப் பின்னாலும் குத்திக் குதறும் அயலவர்களின் வம்புப் பேச்சுகள் இன்னொருபுறம்.

இவை யாவற்றிலுமிருந்து விலகி, எங்காவது கண் காணாத இடத்திற்குப் போய்விட வேணுமென்று அடிக் கடி எண்ணி எண்ணி, அந்த எண்ணத்தைச் செயலாக்க வழி தெரியாமல் திகைத்து நின்ற தாமோதரத்திற்கு 'கன்னியாவில் காவல் வேலை' என்ற கட்டளை, வரவேற் கத்தக்க வரப்பிரசாதமாக இருந்தது.

வேலையை ஒப்புக் கொண்டு அதற்கான நியமனக் கடிதத்தைப் பெற தலைமை யூனியனுக்கு அவர் சென்ற போது—

''மாஸ்டர்! நீங்களா? உங்களுக்கா இந்தவேலை? வேண்டாம் மாஸ்ரர் உங்கட படிப்பென்ன?மதிப்பென்ன? நீங்க 'வாச்சர்' வேலைபார்ப்பதா?'' என்று அனுதாபப் பட்டு நியமனக் கடிதத்தையே தரத் தயங்கிய ஜெனரல் மனேஷரிடமிருந்து, அவர் கடிதத்தைப் பெற்று வெளியே வருவதற்குள் ஓரடி கூனிக் குறுகிப் போனார்.

''மாஸ்டராயிருந்தவர் காவல் வேலை பார்க்கக் கூடாதா? பார்த்தால் என்ன? இந்த வயதில வேற என்ன வேலயத்தான் பார்க்கிறதாம்? இப்படி அனுதாபப் படுகிறவர்கள் ஏதாவது வேலைக்கு வழி செய்தாலும் பர வாயில்லை''

இவ்வாறு முணுமுணுத்துக் கொண்டே ஒவ்வொரு படிகளாக இறங்கி வந்தவர், படிகளில் ஒரு வளைவில், மக்கள் வங்கியின் அடைவு பிடிக்கும் இடத்தில் குமிந்து நின்றவர்களிடையே தெரிந்த பல முகங்கள் இருப்பதைக் கண்டு, அவர்கள் ஏதாவது கேட்டு வைக்கப் போகிறார்

களே, என்ற பயத்தில் தாமோதரம் விறுவிறென்று இறங்கி வெளியேறினர்.

போகுமிடம் புதியது. ஒரு மாதம் முழுவதும் கடமை செய்த பிறகே சம்பளமாகப் பணம் கைக்கு வந்து சேரும். அதுவரை அந்தப் புதிய இடத்தில் எப்படி நாட்களை நகர்த்துவது என்று திகைத்துப் போய் நின்றிருந்த தாமோதரத்தின் கைக்குள் ஐம்பது ரூபாய்த் தாள் ஒன்றைத் திணித்து—

''இதை செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்''

—என்று சொன்ன இராஜநாதனை அவர் அப்படியே இரு கைகளாலும் கட்டி அணைத்துக் கொண்டார். காலமறிந்து நேரமறிந்து உதவிசெய்யும் இராஜநாதனை மாணவனாக மட்டும் கணிக்க அவர் மனம் இடந்தரவில்லை.

"இராஜநாதா உனக்கு நான் எப்படியப்பா கைமாறு செய்யப் போறன்? என்னை மேலும் மேலும் நீ கடன்காரனாக்கிருய்'' என்று குழந்தைபோல் அழத் தொடங்கினர்.

''சேர்! நீங்க எனக்கு எந்தக் கைமாறும் செய்ய வேண்டாம். என்னைப் படிப்பிச்ச உங்களுக்கு உதவி செய்யக்கிடைச்சதே என்ர அதிர்ஷ்டம் தான். இந்தத் தொகை இப்ப உங்களுக்குக் கட்டாயம் தேவை. இதை நான் கடனாகத் தந்ததாக நினைச்சுக் கொண்டு வசதி கிடைக்கிற போது கொஞ்சம் கொஞ்சமாகத் தந்தீங்க எண்டா போதும்''

தாமோதரத்தின் நெஞ்சில் தெய்வமாகக் குடியேறினன் இராஜநாதன்.

மறுநாள் காலையில் வீட்டைப் பூட்டிவிட்டு, சிவகாமியை அழைத்துக் கொண்டு கன்னியாவுக்கு தாமோதரம் புறப்பட்டு விட்டார்.

கன்னியாவிலிருந்த கூப்பன் கடை மனேஷர் கணேஷ் தோற்றத்தில் இளம் பொடியனாகக் காணப்பட்டாலும் நிறைந்த அனுபவம் கொண்டவனாக இருந்தான்.

வாச்சர் வேலைக்கு வந்திருக்கிறார் என்று தாமோதரத்தை ஏளனம் செய்யாமல் அவருடைய வயதிற்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை அன்போடு கொடுத்து வரவேற்றதுமின்றி கூப்பன் கடைக்கு அண்மையில் இருந்த ஒரு சின்ன வீட்டையும் அவருக்காக ஒழுங்கு படுத்திக் கொடுத்திருந்தான்.

மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறுமணிவரை அவருக்கு வேலை. ஆனால் தாமோதரமோ மாலை ஐந்து மணிக்கே கூப்பன் கடைக்கு வந்து விடுவார். மனேஜர் கடையை விட்டு வெளியேறும் போது ஜன்னல்கள் எல்லாம் சரியாகப் பூட்டப்பட்டிருக்கிறதா என்று பூட்டுகளை எல்லாம் ஒரு முறைக்கு இரு முறை இழுத்துப்பார்த்துக் கொள்வார்.

இரவு முழுவதும் அரிக்கன் லாம்பைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அடிக்கொரு தடவை கடையைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து கொண்டிருப்பார்.

நேரஞ் செல்லச் செல்ல அவருடைய கவனம் தீவிரமடையும். நித்திரை கண்களைச் சுழட்ட முயலும் போது சிவகாமி போட்டுக் குடுத்த கோப்பியை, அந்தப் பழைய ''தேமர்ஸ் பிளாஸ்'' கிலிருந்து கொஞ்சம் ஊற்றிக்குடிப்பார். 'பிளாஸ்க்' பழையது. ஆனாலும் அவரைப் போல் இன்னும் சூடு குறையாமல் இருந்தது.

ஒருகையில் அரிக்கன் லாம்பையும் மறு கையில் தடி ஒன்றையும் எடுத்துக் கொண்டு தாமோதரம் கடமையில் ஈடுபடத் தொடங்கினாரென்றால், வீசுவது பனிக்காற்றோ வரண்ட காற்றோ எதுவாயிருந்தாலும் எல்லாவற்றையும் தாங்கிச் சமாளித்துக்கொண்டு நடையைத் துரிதப்படுத்திக் கொள்வார்.

அந்தச் சங்கக் கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிற நேரத்தில் சிலவேளை, அவருடைய சிந்

தனேகள் பழையதை நோக்கி பாய்ந்து மறைந்த எண்ணங் களேக் கிளறி நிற்பதும் உண்டு.

வயது போன இந்த நேரத்தில்—பெற்ற பிள்ளேகளின் உழைப்பில் ஆறுதல் பெற வேண்டிய இந்த நேரத்தில் —இப்படி நித்திரை விழித்துப் பாடுபட வேண்டியிருக் கிறதே என்று அவர் எரிச்சல் மேலிட அடிக்கடி அலுத் துக் கொள்ளுவதும் உண்டு. ஆனுல் அப்படியான சிந்தனே யத் தொடர்ந்து, 'நான் இப்போது யாருக்கும் பாரமாய் இல்லே' என்ற வலுவான தன் மான உணர்ச்சி ஏற்பட்டு அவரின் நெஞ்சை நீவிவிட்டுக் கொள்ளும்.

பக்கத்து கிராமத்தில் இருந்த கூப்பன் கடை ஒன்றில் ஒரு நாள் இரவு களவு போய் விட்டது. கூரையைப் பிரித் துக் கொண்டு கள்வர் உள்ளே இறங்கி சாமன்களேக் கொண்டுபோய் விட்டார்கள்.

அந்தக் களவைப் பற்றிய பொலிசாரின் விசாரணே யின் போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியிடப்பட் டன. அங்கு காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்த 'சாமி' என்பவன், குறிப்பிட்ட களவு நடந்த அன்றைய தினம் கடமைக்கு வராமல், தன்னுடைய வயலில் சூடடித்துக் கொண்டிருந்தானும். உடனடியாக அவன் வேலேயிலி ருந்து நீக்கப்பட்டதுமின்றி அவன்மேல் வழக்கும் தொட ரப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பின்னர், தாமோ தரத்தின் காவல் நடவடிக்கை மேலும் ஒருபடி கெட்டி யாயிற்று. இரவு நேரத்தில் கொஞ்ச நேரம் தானும் கண்மூடாமல் 'கோழி எவ்வாறு தன் குஞ்சுகளேக் காக் குமோ' அவ்வாறு மிகக் கவனமாகத் தனது கடமையைச் செய்து கொண்டிருந்த போதுதான் அந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் நடைபெற்றது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை.

அன்று மாலை வேலைக்கு வரும் போதே தாமோத ரத்தின் உடல்நிலை சரியாக இருக்கவில்லை. முதல் நாள் இரவு வீசிய அகோரமான பனிக் காற்று அவரின் தளர்ந்த உடலுக்கு ஒத்துவரவில்லை.

ஒரு மாதிரியாக சமாளித்து விடலாம் என்ற எண்ணத்தோடு வேலைக்கு வந்திருந்தார். ஆனுல், நேரம் செல்லச் செல்ல உடல் வேதனை கூடியதே தவிர குறைந்த தாக இல்லை.

வழக்கம் போல பூட்டுகளைச் சரிபார்த்துவிட்டு, கட்டிடத்தை ஒரு படி சுற்றி வந்தார். சிறிது நேரத்தின் பின் இரண்டாம் முறை சுற்றிவர முயன்ற போது இயலாமற் போகவே களைத்துப்போன நிலையில் வெளியில் போடப் பட்டிருந்த வாங்கிலில் குந்திவிட்டார்.

திரும்பவும் எழுந்து நடக்க முயன்ருர். முடியவில்லை. தலையை நிமிர்த்தி பின்னுலிருந்த தூணேடு சாய்த்துக் கொண்டபோது சற்றுச் சுகமாக இருப்பதாக உணர்ந்து கொண்டார்.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தாரோ தெரியாது. 'டொக் டொக்' என்று எதையோ அடிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். கீழே வைத் திருந்த அரிக்கன் விளக்கைக் கையில் தூக்கிஞர். அது ஊதல் காற்றில் அணைந்துபோயிருந்தது.

''டொக்—டொக்—'' சத்தம் இன்னும் கேட்டுக் கொண்டே இருந்தது. அந்தச் சத்தம் கடையின் உட்பக் கத்திலிருந்து தான் வருகிறது என்பதை ஊகித்து உணர்ந்து கொண்ட தாமோதரத்தின் உடம்பிலிருந்த ரோமங்கள் சிலிர்த்துவிட்டன.

காதைக் கூர்மையாக்கிக் கொண்டு சத்தம் வரும் திசையை அவதானித்தார். எலிகள் ஏற்படுத்தும் சத்த மாக அது இருக்கலாம் என்று ஒருகணம் சந்தேகம் கிளம்

பியது. கடையில் உட்பக்கம் அங்குமிங்கும் ஓடித்திரியும் எலிகளின் நடமாட்டத்தால் தட்டுப்பட்டு, அடுக்கி வைக் கப்பட்டிருக்கும் பால் டின்கள் கலைந்து விழுந்து உருண்டோ டுவதும் உண்டு. அப்படியான சத்தமாயிருக்கலாம் என்று நன்றாகக் கவனித்தார்.

இப்போது கேட்டுக் கொண்டிருப்பது அப்படியான சத்தம் இல்லை என்பதைத் திட்டவட்டமாக ஊகித்து உணர்ந்ததும் தாமோதரத்தைப் பயம் பிடித்துக் கொண் டது.

வலித்துக் கொண்டிருக்கும் தலைப் பாரத்தையும் லட்சியம் செய்யாமல் மெல்ல எழுந்து, அணைந்திருந்த விளக்கை மீண்டும் பற்ற வைத்துக் கொண்டார்.

கதவுக்கருகில் வைக்கப்பட்டிருந்த தடியை ஒரு கை யிலும் விளக்கை மறு கையிலும் பிடித்துக் கொண்டு கட்டிடத்தின் வலப் புறமாகச் சென்றார். கடையின் பின் பக்கம் வேலிக்கப்பால் இருள் மண்டிக் கிடந்தது. விளக்கை உயர்த்திப் பிடித்துப் பார்த்தார். வெளிச்சம் எட்டிய தூரம் வரை ஒன்றையும் காணவில்லை. ஆளரவம் எதுவும் கேட்காததால் சற்று தைரியம் அடைந்தவராக அவர் நிமிர்ந்து பார்த்த போது, பனிக் காற்று வீசிக் கொண்டிருந்த அந்த நடு நிசி வேளையிலும் அவருடைய உடம்பு 'குப்' பென வியர்த்தது.

பின் கூரையின் சரிவான பகுதியிலிருந்து ஒரு உரு வம் விறு விறென்று கீழே இறங்கி வந்து கொண்டிருந் தது.

''கள்ளன் கள்ளன்'' என்று தொண்டை கிழிய சத்தம் போட வாயைத் திறந்தார். ஆனால், வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியே வர மறுத்தன. கால்கள் பின்னத் தொடங்கின. கையிலிருந்த தடியைச் சுழட்டி அந்த உருவத்தின் மேல் விட்டெறிய எத்தனித் தார். ஆனால், கைகள் அசைய மறுத்தன.

இதற்குள் அந்த உருவம் 'டக்' என்று கீழே பாய்ந்தது. கண்ணை மூடித் திறப்பதற்குள் அதனுடைய கையில் கத்தி ஒன்று காணப்பட்டது. அந்த உருவம் சீலைத் துண்டு ஒன்றினால் முகத்தின் கீழ்ப்பகுதியை மறைத்திருந்தது.

''வாயைத் திறந்து சத்தம் போட்டாயோ இந்தக் கத்தி குறி தப்பாது''!

பயங்கரமான எச்சரிக்கையுடன் அந்த உருவம் கையிலிருந்த கத்தியின் பிடியால் தாமோதரத்தை எகிறித் தள்ளியது.

''இந்தக் குரல்......... இந்தக் குரல்.........''

நிலை குலைந்து சுவரோடு விழுந்த தாமோதரம் திடீரென்று அந்தக் குரலுக் குரியவன் யார் என்பதை ஊகித்துக் கொண்டார்.

அந்த நள்ளிரவு நேரத்தில், தனி இடத்தில் கள்ளனைப் பார்த்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலும் பல மடங்கு அதிர்ச்சியை அந்த ஊகிப்பு அவருக்கு ஏற்படுத்தியது.

இக்கட்டான அந்த நேரத்திலும் தளர்ந்து போயிருந்த அவருடைய உடம்பில் எப்படித்தான் வேகம் வந்ததோ?

அரிக்கன் விளக்கைக் கீழே வைத்துவிட்டு, அந்த உருவத்தின் கையிலிருந்த கத்தியையும் லட்சியம் செய்யாமல், வேகமாக நடந்து கொண்டிருந்த அந்த உருவத்தின் மீது படாரென்று பாய்ந்தார். இரண்டு கைகளாலும் இறுகக் கட்டிப் பிடித்தார்.

''கிருஷ்ணு! இதென்னடா கோலம். உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கிறதற்கா, நான் இன்னும் உயிரோடு இருக்கிறன்? நீ படிச்ச படிப்பெல்லாம் கடைசில இதுக்குத்தானு உதவுது''

ஊகத்தை மனதில் கொண்டு தாமோதரம் சத்தம் போட்டுக் கதறினர்.

அந்த உருவம் ஒரு கணம் திகைத்து மலாரடிச்சுப் போய் நின்றது. தனக்கிருந்த அவசியத்தில்—அவசரத்தில் கிருஷ்ணன், தாமோதரத்தை அடையாளம் கண்டு கொள்ள நியாயமேயில்லை.

இந்த அர்த்த ராத்திரியில், திருமலையிலிருந்து ஏறக்குறைய ஆறு மைல்களுக்கப்பால் உள்ள இந்தக் கிராமத்தில் காட்டுக்குள் தன்னந் தனியாக இருக்கிற கூப்பன் கடையில் தன்னுடைய தந்தையை அவன் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? மின்சாரம் பாய்ந்தது போன்ற தாக்குதலுக்கு அவன் இலக்கானான். ஆனாலும் மறுகணம் சமாளித்துக் கொண்டு உஷாராகிறான்.

கட்டிப் பிடித்திருந்த தந்தையிடமிருந்து திமிறினான் கிருஷ்ணன். இளமையும் முதுமையும் இழுபட்டன. இளம் ரத்தத் துடிப்புக்கு முன்னால் தாமோதரத்தால் எவ்வளவு நேரத்திற்கு ஈடு கொடுக்க முடியும்!

தன்னை விடுவிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றவனாக கிருஷ்ணன் கடை வளவின் பின் வேலியைத் தாண்டி தலை தெறிக்கும் வேகத்தில் ஓடி, இருளோடு கலந்து விட்டான்.

இழுத்துப் பறித்த வேகத்தில் கிருஷ்ணனுடைய சேர்ட் பொக்கட், தாமோதரத்தின் கையில் சிக்கிக் கொண்டதை அவன் அவதானிக்கவில்லை.

செயலற்று, மூச்சு வாங்க, தன் மகன் ஓடி மறைந்த திசையை திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த தாமோதரம், முழங்கையில் கிருஷ்ணனின் கத்தி கீறியதால் ஏற்பட்ட காயத்திலிருந்து கசிந்து கொண்டிருந்த இரத்தத்தையும் கவனிக்காமல்; கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்டிருந்த சேர்ட் பொக்கட் துண்டை பிரித்துப் பார்த்தார். மடிந்து கசங்கிய கடதாசித் துண்டொன்று கீழே விழுந்தது.

குனிந்து அந்தத் துண்டை எடுத்து அரிக்கன் விளக்குக்கு அருகில் கொண்டு வந்து அவசர அவசரமாக விரித்து வாசித்தார்.

'மிஸ்டர் கிருஷ்ணன்,

நீங்கள் ஒன்றுக்குமே உதவாதவர் என்பதை இவ்வளவு கெதியில் நிரூபித்துவிட்டீர்கள். உங்களின் திறமையான பேச்சுக்கும் செய்கைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதைக் கண்டு விட்டேன்.

இனியும் நான் உங்களின் நடிப்புத் திறனில் மயங்கிப் போகத் தயாராக இல்லை. உங்களின் பலவந்தத்திற்காக நான் சினிமாவில் நடிக்கச் சம்மதித்தேன். உங்களை நம்பி கொண்டு வந்த நகையெல்லாம் இதற்காகச் செலவழிந்தாயிற்று. இப்போது சினிமா உங்களுக்கு விருப்பம் இல்லை என்பதற்காக நான் எப்படி விட்டுட்டு வரமுடியும்?

எனக்கு இப்போது இரண்டாயிரம் ரூபா உடனடியாகத் தேவை. உங்களுக்கு ஆண்மையிருந்தால் இந்தப் பணத்துடன் என்னைச்சந்திக்கவும். பணம் இல்லாமல் இங்கு வரவேண்டாம்.

—வாசுகி—'

நடுங்கும் கரங்களில் இருந்த கடிதம் வியர்வையில் நனைந்து, கசங்கியது.

''அடிப்பாவி! அவன் தான் ஊதாரி, உதவாக்கரை, ஒண்டுக்குமே பிரயோசனம் இல்லாதவன் எண்டு நினைச்சிருந்தன். அவனோடை ஓடிப் போன நீயுமா இப்பிடி''

வாய் முணுமுணுத்தது, இனி என்ன செய்வது என்பதைப்பற்றி சிந்திப்பதற்கே முடியாதவராக, கீழே இருந்த விளக்கைத் தூக்கிக் கொண்டு கடையின் முன் பகுதிக்கு வந்தார்.

## 11.

கீழ் வானம் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்கத் தொடங்கியது: திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் போகும் அதிகாலை எக்ஸ்பிரஸ் பஸ் பெரும் இரைச்சலோடு கூப்பன் கடையைக் கடந்து சென்றது. நேரம் ஆறுமணியை எட்டிக் கொண்டிருந்தது.

தாமோதரம் விளக்கை அணைத்து ஒரு பக்கம் வைத்து விட்டு பதட்டம் நெஞ்சைக் குடைந்தெடுக்க வேகமாகத் தார் ரோட்டுக்கு வந்தார்.

இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு அந்த ரோட்டைக் கடந்து எதிர்ப்பக்கத்திலிருந்த மணல் ஒழுங்கை வழியாக நடையை வேகமாக எறிந்து நீண்டு முடிவடையும் படலைக்கு அருகில் வந்து நின்றார்.

படலையின் உட்புறத்தில் நின்றிருந்த பெரிய மாமரத்தின் அடிவேரில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டிருந்த நாயொன்று அவருடைய வரவை எதிர்க்குமாப் போல் உடம்பைச் சிலிர்த்து உறுமியவாறு துள்ளி எழுந்தது. அது துள்ளி எழும்பிய வேகத்தில் நிச்சயமாகத் தாமோதரத்தை நோக்கி வரத் தயாராகியது. அது ஓடி வருவதற்குள்...........

அவதியும் பயமும் போட்டியிட பரபரப்போடு தாமோதரம் அவலக் குரல் எழுப்பினார்.

''தம்பி கணேஷ்......''

அவர் எழுப்பிய சத்தத்தோடு போட்டி போட்டுக் கொண்டு நாயும் பெருங்குரலெடுத்து குரைத்தது. அயர்ந்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் அல்லோலகல்லோலப்படுத்தினால் யாருக்குத்தான் கோபம் வராது?

எரிச்சலோடு எழுந்து வந்த கூப்பன் கடை மனேஜர் கணேஷ், குரலெடுத்து கத்திக்கொண்டிருந்த நாயைக் காலால்அடித்து அதட்டிக் கலைத்தவாறு படலையடிக்கு வந்துபார்த்தார்.

எழுப்பியது தாமோதரம் என்பதை அறிந்ததும் உள் எழுந்த எரிச்சலை ஒருவாறு மெள்ள அடக்கிக்கொண்டு படலையைக் கட்டியிருந்த கயிறை அவிழ்த்து அவரை உள்ளே அழைத்தார்.

"கையெழுத்துக்கு இப்ப என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் கடைக்கு வருவன்தானே? அது வரைக்கும் பொறுத்துக்கொள்ள ஏலாதா?"

தாமோதரம் வந்து நிற்கின்ற நோக்கம் விளங்காத தால் எரிந்து விழுந்தான் கணேஷ்.

"கையெழுத்துக்கில்ல மனேஜர்..."

எச்சிலை விழுங்கிக்கொண்டு, அதற்குமேலே நடந்த விஷயத்தை எப்படி சொல்வதென்று தெரியாமல் திணறினார் தாமோதரம்.

நாட் சம்பளத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் தாமோதரம் போன்ற காவல் வேலை செய்பவர்களுக்கு அந்த அந்த மாதம் முடிந்து வரும் அடுத்த மாதம் முதலாந் திகதி சம்பளம் கிடைக்கும்.

அந்தக் கடைசித் தினம் வரை வேலை பார்த்து அதற்கு அத்தாட்சியாக மனேஜரின் கையொப்பம் வாங்கிய கொப்பியை, திருமலையிலுள்ள பெரிய யூனியனுக்கு எடுத்துச் சென்று உரிய சப்ஜெட் கிளாக்கிடம் கொடுத்து, அவர் தன்னிடமுள்ள பேரேடுகளைத் தேடிப் பிடித்துசெக் பண்ணித் திருப்திப்பட்ட பின் அவர் தயாரிக்கும் வவுச்சரில் ஒப்பமிட்டு, அந்த வவுச்சரை ஜெனரல் மனேஜர் பார்வையிட்டு ஏற்றுக் கொண்டு 'அப்ருவ்' பண்ணி அதிகாரம் அளித்த பின் 'செக்' எழுதப்படும். அதற்குப் பிறகே சம்பளம் காசாக கையில் வந்து சேரும்.

தாமோதரம் வேலைக்குச் சேர்ந்த அடுத்த மாதம் முதலாந் திகதி, காலை ஒன்பது மணிக்கு கன்னியாவிலிருந்து டவுனுக்கு போகும் பஸ்ஸுக்காக, மனேஜரின் கையெழுத்துக் கொண்ட கொப்பியுடன் காத்திருந்து பத்து மணிக்கு பஸ் ஏறி டவுண் பஸ் ஸ்டான்டில் இறங்கி, தலைமை யூனியனுக்கு நடந்து போய்ச் சேர்ந்த போது நேரம் பதினொன்றுக்கு மேலாகியிருந்தது.

அதன் பிறகு சம்பிரதாயச் சடங்குகள் முடிந்து செக் எழுதப்படும் போது மணி ஒன்று அடித்தது. எழுதிய 'செக்' கில் கையெழுத்துப் போட அதிகாரம் பெற்ற பிரசிடென்ரோ, வைஸ் பிரசிடென்ரோ அந்த நேரத்தில் யூனியனில் இருந்திருக்காத காரணத்தால் அன்று சம்பளம் பெற முடியாமல் கைக் கெட்டியும், வாய்க் கெட்டாத நிலையில் கன்னியாக்கு திரும்பி வர வேண்டியதாயிற்று. பஸ்ஸுக்குப் பணமும், ஒருநாள் அலைக்கழிவும் தான் தாமோதரத்திற்கு மிச்சமாக இருந்தது.

அந்த அனுபவத்தின் எதிரொலியாக, அதற்குப் பிறகு, சம்பளம் பெறப் போகும் தினத்தன்று காலை ஏழு மணிக்கு முன்னதாகவே, மனேஜரிடம் கொப்பியில் கையெழுத்தை வாங்கி, உடனடியாக டவுனுக்கு பஸ் ஏறும் வழக்கத்தைத் தாமோதரம் கொண்டிருந்தார்.

அந்த மாதிரி கொப்பியில் கையெழுத்தை வாங்குவதற்காகத்தான் இப்படி விடிந்ததும் விடியாததுமாகத் தன்னைத் தேடி தாமோதரம் வந்திருக்கிறார் என்று எண்ணியதினாலேயே மனேஜருக்குச் சினம் பொங்கி வந்தது.

தாமோதரம் மேற்கொண்டு விஷயத்தை எப்படிச் சொல்வது என்று திணறிக் கொண்டிருந்த போது மனேஜருக்கு நித்திரை வெறி கலைந்து ஓரளவு நிதானம் திரும்பியவராகத் தாமோதரத்தைக் கூர்ந்து கவனித்தார்.

பயத்தினால் வெளிறிப் போன தாமோதரத்தின் கண்களில் தேங்கியிருந்த கண்ணீருடன் கூடிய கவலையின் சாயலைக் கண்டவுடன் கணேஷ் உஷாரானார்.

''வாச்சர், என்ன விஷயம்? என்ன நடந்தது?'' என்று கேட்டு அவசரப்படுத்தினுர்.

கணேஷ் இப்படிக் கேட்டதும் தாமோதரம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்.

''மனேஜர், ராத்திரி கடையில் களவு போயிருக்குது உடனே வாங்க''

நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்து விட்டவாறு தாமோதரம் விடயத்தைச் சொன்ன போது அவரது முழங்கையில் பளிச்சிட்ட இரத்தக் காயம் மனேஜரின் பார்வையில் பட்டது.

இரத்தக் காயத்தைக் கண்டதும் கணேஷின் மனம் எதையெதையோ கற்பனை பண்ணி, அந்தக் கற்பனையின் தாக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது பதட்டத்தோடு உள்ளே போய்த் துவாய்த் துண்டால் முகத்தைத் துடைத்துச் சேர்ட்டைத் தூக்கிப் போட்டு, பொத்தானைப் பூட்டியவாறு உடனடியாகப் புறப்பட்டார். தாமோதரம் அவருக்குப் பின்னுல் ஓட்டமும் நடையுமாகச் சென்றுர்.

சுப்பன் கடை வாசலை நெருங்கியதும் அவசரமாகப் பூட்டுக்களைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மனேஜர் மட்டுமல்ல, பின்னுல் வந்த தாமோதரமும் திடுக்கிட்டார்.

உள்ளே!

வாசல் கதவின் இடது பக்கமாக இருந்த ஜன்னலின் உட்பக்கத்தை ஒட்டினுற் போல் போடப்பட்டிருந்த மனேஜரின் மேசை அலங்கோலமாயிருந்தது.

பூட்டி வைக்கப்பட்டிருந்த மேசை லாச்சி கழட்டப்பட்டு, மேசைமேல் கிடந்தது. அந்த மேசைக்குக் கீழே சீமெந்துத் தரையில் முனை நெளிந்த பிடி போடாத புது மண்வெட்டி ஒன்றும் உளி ஒன்றும் கிடந்தன.

அவை ஒன்றையும் தொடாமல் மனேஜர் மேசை லாச்சிக்கு அருகில் வந்து அதனுள் இருந்த பொருட்களை

நோட்டம் விட்டார். பிறகு நிமிர்ந்து சுற்றி வர பலகை ருக்கைகளில் அடுக்கியிருந்த சாமான்களையெல்லாம் அவ தானித்து ஒரே பார்வையில் மதிப்பிட்டுக் கொண்டார்.

''வந்தவன் பரம்பரைத் திருடன் இல்ல, பஞ்சத் திருடன் போல தெரியிது. நேற்று முந்த நாள் வெள்ளிக் கிழமை விற்று வந்த காசு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை என்வலப்பில போட்டுக் கட்டி இந்த லாச்சிக் குள்ள புத்தகங்களுக்குக் கீழ வச்சிருந்தனான். புத்தகங்கள் எல்லாம் தலை கிழாகக் கிண்டப்பட்டிருக்கு. அந்த என்வ லப்கட்டை மாத்திரம் காணவில்லை. கள்ளன் அத மாத்தி ரந்தான் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான் எண்டு நினைக் கிறன். நல்ல வேளை, லாச்சிக்க இருந்த கணக்குப் புத்த கங்கள், பில் புத்தகங்கள், கூப்பன் புள்ளிகள் ஒண்டையும் தொடவில்லை''

கணேஷ் தனது முதலாவது மதிப்பீட்டை எடுத்துச் சொன்னார்.

''இங்க கீழே இடக்கிற சாமான்கள் ஒண்டையும் தொடாதீங்க. அப்பிடியே இருக்கட்டும். வந்தவன்ர விரல் அடையாளங்கள் அதில பதிஞ்சிருக்கும். கள்ளனைக் கெதியாக் கண்டு பிடிக்கிறதுக்கு பொலிசுக்கு அது நல்லா உதவும்''

தாமோதரத்திற்கு இப்படிச் சொல்லி எச்சரித்து விட்டு, கணேஷ் மீண்டும் ஒரு தடவை உட்புறம் பார்வை யைச் சுழற்றினார்.

கூரையில் ஓரிடத்தில் வானம் துலாம்பரமாகத் தெரிந் தது. ஓடு கழட்டப்பட்டதால் ஏற்பட்ட இடைவெளி அது. கள்ளன் கடைக்குள் நுழைவதற்கு ஓட்டைக் கழட்டி யிருக்கிறான், என்று தீர்மானித்துக் கொண்டார்.

அந்த இடைவெளிக்கும், கீழே நிலத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகளுக்கும் பாலமாக, நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்த சின்னப் பலகை ஏணியைப்

பார்த்ததும், அதன் மீது அடிக்கப்பட்டிருந்த சிவப்பு நிறம் அவருடைய கண்களை உறுத்தியது.

சட்டென்று தாமோதரத்தின் முழங்கையில் பார்த்த இரத்தக் காயம் அவர் நினைவுக்கு வந்தது.

திரும்பித் தாமோதரத்தைப் பார்த்தார்.

மலாரடிச்ச நிலையில், கைகள் இரண்டையும் நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிய வண்ணம் மேலே தெரிந்த இடைவெளியைப் பார்த்துக் கொண்டு தாமோதரம் நின்றிருந்தார்.

''வாச்சர் அங்க மூலையில பாருங்க. முட்டில தண்ணி இருக்கும். சிலைத் துண்ட நனைச்சு கையில இருக்கிற காயத்தைச் சுத்தி ஒரு கட்டுப் போடுங்க. போட்டுட்டு வாங்க. அந்தா கீழ கிடக்கிற பேப்பர்த் துண்டை எடுங்க. இங்க இரும்புச் சாமான்களை கையடையாளம் அழிஞ்சு போகாம தூக்கி ஒரு பக்கத்தில வைக்க வேணும் ம்......... கெதியா எல்லாத்தையும் பூட்டி எடுங்க. பொலிஸ் ஸ்டேசனுக்குப் போவோம்''

பணத்தைப் பறிகொடுத்த கணேஷ் அவசரப்பட்டார்: ''ஆனால் தாமோதரமோ பானை இருக்கிற இடத்தைத்'' தேடிக் கொண்டிருந்தார்.

''உப்புவெளில இருக்கிற பொலிஸ் ஸ்டேசனுக்குத் தான் நாங்க போக வேணும். அங்க இருக்கிற சார்ஜண்டை எனக்கு நல்லாத் தெரியும். அவரிட்ட சொன்னா அன்ராசபுரத்தில இருந்து நாய்களை எடுப்பிப்பார். அந்த நாய்கள் வந்திச்செண்டா கள்ளனைக் கெதியா அமத்திப் போடலாம்'',

பானையைத் தேடிக் கொண்டிருந்த தாமோதரம் ஏன் அப்படி அதிர்ந்து போய் நிற்கிறார் என்று கணேஷுக்கு விளங்கவில்லை. ஒரு வேளை கள்ளனை நேரில் கண்ட தாக்கத்திலிருந்து இன்னும் அவர் விடுபடவில்லையோ?

"வாச்சர்! இந்த வயதில இதயெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாதுதான். எண்டாலும் என்ன செய்யிறது? இப்ப அதயெல்லாம் பாத்துக்கொண்டு நிக்க ஏலுமா? இப்ப நீங்க கொஞ்சம் உஷாரா இருக்க வேணும்.

கள்ளன் எப்பிடி இருந்தான்? அவன்ர அடையாளங்களை எல்லாம் நீங்கதான் பொலிசுக்கு தெளிவாச் சொல்ல வேணும். அவன் அடையாளம் சொல்றதுக்குத் தானே அவன் கத்தியால உங்கட முழங்கையில மட்டும் வெட்டிட்டுப் போயிருக்கிறான். இல்லாட்டி கழுத்தில கத்திய வச்சிருக்கமாட்டானா?"

மனேஜர் இப்படிச் சொன்னார். ஆனால் தாமோதரத்தின் விரக்தி மனமோ எண்ணியது வேறு விதமாக இருந்தது.

கழுத்திலேயே கத்திய வச்சிருந்தான் என்றால் கூட எவ்வளவு நிம்மதியாக இருந்திருக்கும்? மகன்தான் கள்ளன் எண்டு சொல்லிக் காட்டிக்கொடுக்கவும் முடியாம, பொய் சொல்லவும் முடியாம தவிக்கவேண்டி இருந்திருக்காது.

எவ்வளவு நேரத்திற்கு தாமோதரம் மனம் புழுங்குவது? தாமோதரம் மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

"மனேஜர் பொலிசுக்கு கட்டாயம் போகத்தான் வேண்டுமா?"

அவரின் குரல் கரகரத்தது.

இப்படித் தாமோதரம் கேட்டது கணேஷுக்கு வியப்பாக இருந்தது. அதேவேளையில் வேடிக்கையாகவும் இருந்தது.

"பொலிசுக்குப் போகாம பிறகு என்ன செய்யிறதாம்? வாச்சர்! நீங்களே துப்பறிந்து கள்ளனைப் பிடித்துவிடலாம் எண்ட எண்ணமோ!"

கணேஷின் கேள்வியில் ஏளனம் நிரவியிருந்தது.

''அப்பிடி இல்ல... இங்க நடந்ததைப்பற்றி பொலிசில என்றி ஒண்டும் போடவேணும் மனேஜர்... உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்... உங்களுக்குப் பணம் தானே வேணும். அதை......''

தாமோதரம் சொல்லி முடிக்க முதல் மனேஜருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது! தன்னையே மறந்து விட்டார்.

''நீ என்ன பைத்தியமா? இல்லாட்டி என்னைப் பைத்தியக்காரனாக்குகிறாயா? எவ்வளவு களவு போயிருக்கு என்டு தெரியுமா? உன்ர தொண்ணூறு ரூபா சம்பளத்தில மாசம்ஒரு ரூபாயாகக் கொடுத்து துலைக்கலாம் என்டு எண்ணமா? இப்பத்தான் எனக்கு விளங்குது. உனக்கும் அந்தக் கள்ள ராஸ்கலுக்கும் தொடுப்பு இருக்குது என்டு.''

கணேஷ் சில விநாடி தாமோதரத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார். அவரின் பார்வையில் சந்தேகம் முளைவிடத் தொடங்கியது.

''நீதான் இந்தப் பணத்தை எடுத்து ஒளிச்சு வைச்சிருக்கிறாய். இல்லையா? பணத்தை எடுத்து வைச்சுட்டு நாடகமா ஆடுறாய்! முதலில உன்னைத்தான் பொலிசில புடிச்சுக் குடுக்க வேணும். மரியாதையாகச் சொல், பணத்தை எங்கே வச்சிருக்கிறாய்?''

புலிப் பாய்ச்சலாக பாய்ந்து தாமோதரத்தின் தோளைப் பிடித்து மனேஜர் உலுப்பினார். ஆத்திரத்தில் அவர் நிதானத்தை மட்டுமல்ல இதுவரை தாமோதரத்தின் வயதுக்குக் கொடுத்து வந்த மரியாதையையும் இழந்து போனார். இல்லாவிட்டால் இப்படி ஒருமையில் பேசி முரட்டுத்தனமாக அந்த வயோதிபரைப் பிடித்து உலுப்புவாரா?

தாமோதரம் அந்த உலுக்கலுக்குப் பயப்படவு மில்லை, கலங்கவுமில்லை. அவர்தான் அந்த நிலைகளையெல் லாம் கடந்த ஒரு எல்லையில் நிற்கிறாரே!

"மனேஜர் நீங்க என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்யுங்க. ஆனா நான் சொல்றதக் கொஞ்சம் தயவு செய்து கேளுங்க. இதுவரை நீங்க என்ர மேல வச்சிருந்த அந்த நம்பிக்கை மீது சத்தியமாச் சொல்றன். உங்கட காசை நான் தொடவேயில்லை. நான் திருடவில்லை. திருடன்..........."

தாமோதரத்தின் பக்குவப்பட்ட உள்ளம் நெகிழ்ந்து விட்டது. துக்கம் தாளாமல் வாய்விட்டு அழுதார்.

அந்த வயோதிபரின் பரிதாபம் நிறைந்த கண்களில் பீறிட்டு வழியும் நீரைக் கண்டதும் கணேஷின் கைப்பிடி தளர்ந்தது. அவருள் தலை விரித்தாடிய கோப வெறியும் தணிந்தது.

"வாச்சர்! நீங்க என்ன சொல்றீங்க எண்டு எனக்கு விளங்கல்ல"

"தம்பி! உங்களுக்கு விளங்கிற மாதிரி சொல்ல முடி யாத ஒரு சிக்கலில் நான் இருக்கிறேன். இப்போதைக்கு வேற எதையும் கேக்காதீங்க. களவு போயிருக்கிறதா நீங்க குறிப்பிட்ட தொகை, என்னால குடுத்துச், சமாளிக்க முடியும் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு.

பாலையூற்றில எனக்கு ஒரு காணி இருக்கெண்டு நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அந்தக் காணியையும் வீட்டையும் வித்தா, இல்லையெண்டாம குறைஞ்சது இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேல தேறும்.

இன்னும் கொஞ்ச நேரத்தால நல்லா விடிஞ்சிரும். முதல் காரியமா நாங்க ரெண்டு பேரும் பாலையூற்றுக்குப் போய் விஷயத்தை முடிக்கலாம்"

கணேஷுக்கு இன்னும் விடயம் சரியாக படிபடி வில்லை.

"நீங்க இப்படி பொடி வச்சு பேசிறதில பலனில்ல. என்னால இத நம்ப ஏலாது. எவனோ ஒருவன் களவெடுத்துக் கொண்டு போயிட்டான். நான் என்ட காணிய வித்து காசத் தாரன் எண்டு சொல்றது அவ்வளவு நம்புற கதையா இல்லே. சும்மா கதைகளைப் பேசி நேரத்தக் கடத்தலாம் எண்டு எண்ணுகிறீங்களோ என்னவோ, நீங்க வந்தாலும் சரி வராட்டாலும் சரி, நான் என்ட கடமையச் செய்ய வேணும். இப்ப பொலிசுக்குப் போகப் போறன்''

சாவிக் கொத்தை எடுத்து கதவைப் பூட்டப் போன கணேஷை, ஓடிச்சென்று வழி மறித்தார் தாமோதரம்.

''மனேஜர்! இன்னும் விபரமா நான் சொல்லத்தான் வேணுமா? என்னை அந்த அளவு எல்லைக்குக் கொண்டு தள்றீங்களா? சரிநான் விபரமாச் சொல்றன். இரவு வந்த கள்ளன் வேற ஆருமில்ல......''

மீண்டும் ஒரு பாட்டம் குலுங்கிக் குலுங்கி அழுதார். அழுகைக்கு மத்தியில் கூறினார்.

''நீங்க கள்ளன் என்று நினைச்சிருக்கிறது வேற ஆருமில்ல மனேஜர் என்ரை ரத்தத்தில தோன்றிய பாவி ஒருத்தன்......'' தொடர முடியாமல் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு அழுதார்.

''ஆர்ர முகத்தில இனி முழிக்கக் கூடாது எண்டு நினைச்சிருந்தனோ அவன்—என்ர மூத்த மகன்தான் இதைச் செய்திட்டான் மனேஜர். அவன்ட முகத்தில இனி முழிக்கக் கூடாது எண்டு ஓடி ஒதுங்கி வந்த என்னை கத்தியால கீறி அவனுக்கும் எனக்கும் உள்ள ரத்த உறவை புதுப்பிச்சிட்டு போயிட்டான்,

இப்போ சொல்லுங்க மனேஜர்! பெத்த மகனை பிடிச்சுக் குடுத்த அப்பன் என்ட பேரை நான் வாங்கத்தான் வேணுமா? அதுக்காகத்தானோ அவனை பெத்து கஷ்டப்பட்டு வளர்த்தனான்?

அவன் ஒண்டுக்கும் உதவாதவன், காவாலி, ஒரு ஊதாரி, அது உண்மை மனேஜர், அவனை நான் இப்பவும் வெறுக்கிறன். ஆனா......... என்ன செய்ய? என்னைப் பாசம் பேயாக ஆட்டுதே! அவன்ர மானத்த மட்டுமில்ல என்ர மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள் எண்டு தான் உங்களைக் கெஞ்சிறன்''

அதற்குமேல் எதுவும் பேச முடியாமல் குடும்ப நிலையைத் திருப்பித் திருப்பி பிறர் முன்னிலையில் தானே சொல்லிக் காட்ட வேண்டியுள்ள தன் அவலத்தை நினைந்து நெஞ்சு நெகிழ்ந்து அசதி மேலிட, கீழே அடுக்கி யிருந்த அரிசி மூடைகளின் மேல் சாய்ந்தார் தாமோ தரம்.

கணேஷின் கண்கள் கலங்கியிருந்தன. அவருடைய உள்ளமும் இப்போது மாறியிருந்தது. இந்த வயதில் எவ்வளவு வேதனைகளைத் தாங்கிக் கொண்டு நடமாடுகி றார் அந்த மனிதர் என்றதை நினைத்து மிகவும் பரிதாபப் பட்டார்.

தாமோதரத்தைப் பற்றி முதன் முதல் அறிமுகப்படுத் தும்போது, 'ஆண் பிள்ளைகளைப் பெற்றும் எந்தவித மான சுகத்தையும் பெறாமல் மிகவும் நொந்து போனவர் இவர், என்று முந்தி எப்போதோ பெரிய கடையில் மனேஜராயிருக்கிற பத்மநாதன் கூறியிருந்தது அவருக்கு நினைப்பு வந்தது.

'எங்களுக்கெல்லாம் இப்பிடி ஒரு தகப்பன் இல்லா மற் போனாரே' என்று தனக்குள் எண்ணிக் கொண்ட கணேஷ் தாமோதரத்தின் கைகளைப் பற்றினார்.

''சரி, வாச்சர்! எல்லாத்தையும் விடுங்க. இப்பதான் எனக்கு எல்லாம் விளங்குகிறது. நடந்தது ஒன்றையும் பத்திக் கவலைப்படாம எழும்புங்க. உங்கள வீட்டுக்குக் கொண்டு போய் விட்டுட்டு நான் போறன்''

என்று கூறி அவரை ஆதரவாகப் பிடித்து எழுப் பினார்.

''முதல்ல, அந்த மேசைக்குக் கீழ இருக்கிற உளி, சாமான்கள் எல்லாத்தையும் கொண்டு போய் பின்பக்கம் இருக்கிற கிணத்திலே எறிஞ்சிட்டு வாங்க. பிறகு மிச் சத்தை யோசிக்கலாம். எங்க இரண்டு பேரைத் தவிர மூண்டாவது ஆளுக்கு இந்த விஷயம் எட்டாமல் பாத் துக் கொள்றது. என்ர பொறுப்பு''

முகத்தைத் துடைத்துக் கொண்டு தாமோதரம் மனே ஜரை நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பார்வையில் நன்றி உணர்வு மேலோங்கியிருந்தது.

பொழுது நன்ருக விடிந்துவிட்டது!

தாமோதரத்தின் நல்ல குணத்தை கணேஷ் ஏற்றுக் கொண்டாலும், பணத்தை இழந்து விட அவர் தயாராக இல்லை. பணம் வேறு, குணம் வேறுதானே!

திங்கட்கிழமையாதலால், பெரிய யூனியனில் பேச் சர்ஸ் பண்ணுற நாள் அது. பொயின்ஸ் ஒட்டியிருந்த கொப்பியை, பில் எழுதும் கிளாக் வின்சனிடம் கொடுத்து அவனை 'மலை'க்குப் போற பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டு கணேஷ் காலையில் தாமோதரத்துடன் பாலையூற்றுக்குப் புறப்பட்டார்.

ஏற்கனவே, அந்தக் காணியையும், வீட்டையும் வாங் கக் காத்திருந்த பலரோடு பேரம் பேசி, இறுதியில் மூவா யிரம் ரூபாய்க்கு அவற்றை விற்ருர்.

அயல் அண்டையில் கொடுக்க வேண்டியிருந்த சில்ல றைக் கடன்கள் பற்றி, வரும் போதே சிவகாமி எச்சரிக்கை செய்திருந்தபடியால், அவற்றை எல்லாம் கொடுத்து விட்டு, மனேஜரின் கையில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயைக் கொடுத்தபோது தாமோதரத்தின் சேர்ட் பொக்கட்டுக்குள் சில்லறையாக மிஞ்சியிருந்தது பதினைந்து ரூபாய் மட்டுமே.

இந்த நிமிடம் வரை தன்னுடையதாக இருந்த அந்த வீடு, கை மாறியது குறித்து அவருடைய நெஞ்சு வேதனைப் படாமலில்லை. பெற்று வளர்த்த பிள்ளைகள் தறுதலையாக மாறி தங்களை ஒதுக்கித் தள்ளி கைவிட்ட போது, கடைசிக் காலத்தில இந்த வீடுதான் ஆறுதலாக—துணையாக இருக்கும் என்று இதுவரை நம்பியிருந்தார். அடுத்த நிமிடத்திலிருந்து அந்த நம்பிக்கைபொய்யாய் பழங்கதையாய் போகப் போவதைச் சகிக்க முடியாமல் பஸ்ஸில் ஏறினார்.

அன்று மாலை வழக்கம் போல காவல்தொழிலுக்குப் போகாமல் மனேஜரின் வீட்டைத் தேடிப் போனார்.

''தம்பீ, இண்டையில இருந்து நான் வேலைக்கு வர மாட்டன். என்னட்ட அந்தக் காணி இருந்த படியால் ஒரு மாதிரி இந்த இக்கட்டுல இருந்து மானத்தக் காப்பாற்ற முடிஞ்சிது. இனிமேல் இப்படியான எதிர்பாராத ஏதாவது சம்பவம் நடந்தால் ஈடு செய்யிறதுக்கு என்னட்ட ஒண்டுமே இல்ல, ஆகவே தொடர்ந்து நான் இங்க வேலை செய்யிறது உங்களுக்கு வாய்ப்பாக இருக்குமெண்டு நான் நம்பவில்லை''

தாமோதரம் இப்படி அறுதியிட்டுச் சொன்னபோது கணேஷால் தாங்க முடியவில்லை. இப்படியும் ஒரு திறந்த மனமுள்ள மனிதரைக் காணமுடியுமா என்று அனுதாபப் பட்டார்.

''வாச்சர்! நீங்க நடந்ததைப் பற்றி எதுவும் பேச வேண்டாம். முந்தியப் போல நீங்க இங்க வேலை செய்யிறதில எனக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்ல''

''இல்லை மனேஜர்! நீங்க என்னதான் சொன்னாலும், இந்தக் கூப்பன் கடையில தொடர்ந்து வேலை செய்யிறது எல்லா வழிகளிலும் எனக்குப் பாதகமாகவே இருக்கும்''

இப்படித் தன் நிலையைத் தெளிவு படுத்துவதற்காக அவர் திருப்பித் திருப்பி தன் மனக் கிளர்ச்சியை வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

''மனேஜர்! இந்த இடம் இனி எனக்கு நரகமாகத் தான் இருக்கும். நடந்து போன அந்த நிகழ்ச்சிகளின் நினைவு என்னை நிச்சயம் பாதிக்கவே செய்யும்.

கண்ணுக்கு முன்னாலை நடந்த நீதிக்குப் புறம்பான ஒரு சம்பவத்தை மறைக்க நேர்ந்த அவலம் என் நெஞ்சைக் குடைந்து கொண்டே இருக்கும். எரியிற நெருப்புக்கு மேல இருந்து கொண்டு இங்க வேலை செய்யிறது இனி என்னாலை முடியாத காரியம்.

மனேஜர்! உங்கட நல்ல மனசை புண்படுத்துவதற்காக என்னைப் பிழையாக நினைக்காமல் எனக்கு வழி விடுங்க. எங்காவது கண்காணாத இடத்துக்கு போய் விடுகிறேன்.''

தாமோதரத்தின் நியாயமான பிடிவாதத்தையும், அதற்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணத்தையும் நன்றாக உணரக்கூடிய கணேஷ், அவரைத்தடுத்து நிறுத்த வழிதெரியாமல், அந்த நல்லவரை இழக்கவும் விரும்பாமல் தடுமாறினார்.

தாமோதரத்தின் நொந்து போன மனதுக்கு ஆறுதல் தரக்கூடியதாக ஏதாவது வகையில் உதவி செய்யமுடியுமா என்று ஆழ்ந்து சிந்தித்தார். உதவி செய்யத் தான் வேண்டும் என்று முடிவாகத் தீர்மானித்து அதைச் செயலாக்கும் விடயத்தில் உடனடியாக ஈடுபட்டார்.

தம்பலகமத்தில், தச்சுப்பட்டறை வைத்து மரவேலைக்கான 'கொன்ராக்ட்' செய்து கொண்டிருக்கும் தன்னுடைய தம்பியின் கடைக்கு அவரை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தார்.

## 12.

யாரோ தன்னை உலுப்புவதாக உணரவே, தாமோதரம் சட்டென விழித்துக் கொண்டார்.

''நாலு பேர் இருந்து போற 'சீற்'ல இப்பிடி நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டு போனு...... மற்றுக்கள் பயணம் பண்றதில்லையா?''

இந்தச் சத்தத்தைக் கேட்டதும் தாமோதரத்திற்கு நித்திரை கலைந்து நினைவு திரும்பி... தன்னைச் சமாளித்துக் கொண்டு புழுவாக நெளிந்திருந்த தனது உடம்பை நிமிர்த்தி உட்காரச் செய்தார்.

* * *

'தடார் புடார்' என்று ஏறிய நாலைந்து இளவட்டங்கள் அவருக்குப் பக்கத்திலும், எதிர்ப்பக்கத்திலுமாக அடித்து மோதிக் கொண்டு இருந்து கொண்டார்கள்.

தாமோதரம் வெளியே எட்டிப்பார்த்தார்.

கல்லோயாச் சந்தி!

வெளியில் வீசிய குளிர் காற்று முகத்தில் பட்டதும் அவருக்கு சற்று சுகமாக இருந்தது.

மணியைப் பார்த்தார். பதினொன்ருகியிருந்தது. மட்டக்களப்பு ஸ்டேசனில் ஏறி பெட்டிக்குள் இருந்தது மாத்திரமே அவருக்கு நினைவுக்கு வந்தது.

முன் சீற்றில் இருந்து அவரோடு பிரயாணம் செய்த இளம் ஜோடியைக் காணவில்லை. எங்கேயோ இறங்கி விட்டிருந்தது. அவர்கள் இறங்கிப் போனது கூடத்தெரியாமல் அப்படியே பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த தனது மோன நிலையை எண்ணிய போது தரோமாதரத்திற்குச் சிரிப்பு வந்தது.

காலுக்கடியில் துழாவிப் பார்த்தார். பிரம்புக் கூடை வைத்த இடத்திலேயே பத்திரமாக இருந்ததைக் கண்டு அவர் திருப்திப்பட்டுக் கொண்டார்.

மீண்டும் அவரை ஆட்கொள்ளத் துடித்த நித்திரை மயக்கத்திலிருந்து விடுபட சுருட்டு ஒன்றை கூடையிலிருந்து எடுத்து பற்றவைத்துக் கொண்டார்.

இரண்டு மூன்று இழுவையில் நித்திரை வெறி நன்ருக முறிந்துவிட்டது. ஆனல், முட்டி மோதிக்கொண்டு நின்ற நினைவுகள் முறியத்தயாராக இல்லாமல் சுருட்டுப் புகை வளையங்களோடு போட்டி போட்டுக் கொண்டு அவரை வளையம் வரத்தொடங்கின.

* * *

தம்பலகமம், தாமோதரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது.

பச்சைப் பசேல் என்று காட்சியளித்த பரந்த வயல் வெளிகளும், பூத்துக் குலுங்கிய சோலைகளும் அவருடைய உள்ளத்தை நிறைத்து, உடலையும் ஓரளவு பழைய நிலைக்கு கொண்டு வந்திருந்தது.

அவருடைய மனைவி சிவகாமியும் இப்போது பெருமளவு மனநிறைவுடன் காட்சியளித்தாள். பெற்ற பிள்ளைகளால் ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து விடுபட்டு, முன்போல் உற்சாகமாக மற்றவர்களோடு கலகலப்பாகப் பேசிப் பழகி தெம்போடு இருந்தாள்.

தாமோதரத்தின் நல்லகுணத்திற்கு ஏற்றவாறு அங்கிருந்த மரவேலை நிலையமொன்றின் உரிமையாளரான தம்பிராசா அவருக்குத்தேவையான வசதிகளைச் செய்து கொடுத்திருந்தார்.

கன்னியாவில் மனேஜராயிருந்த கணேஷ் கொடுத்த கடிதத்தோடு தம்பலகமம் வந்த தாமோதரம் தம்பதிகளை நிறைந்த வாஞ்சையோடு வரவேற்று தனது மரவேலை நிலையத்தின் கணக்கு வழக்குகளை எழுதும் பொறுப்பை ஒப்புவித்தார் தம்பிராசா.

இடமாற்றம் தாமோதரத்திற்குப் பல வழிகளாலும் நன்மை தருவதாகவே அமைந்திருந்தது.

இன்னும் ஒரு வருடத்தின் பின் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்திருந்தஇன்சூரன்ஸ் பொலிஷியின்காலம் இவ்வளவு விரைவாக முடிந்திருக்கும் என்று அவர் நினைக்கவில்லை.

போனகிழமை அந்தப் பொலிஷிக்குரிய பணம் அவ ருக்கு வந்தது. தான் வேலை பார்த்த முதலாளியிடம் கொடுத்த அந்தச் 'செக்'கிற்குப் பணமாகக் கிடைத்த மூவாயிரம் ரூபாவையும் தாமோதரம் தனது மனைவி சிவ காமியிடம் மகிழ்ச்சி பொங்க கொடுத்தார்.

"இந்தா சிவகாமீ! நியாயப்படி இது உனக்குத்தான் சேரவேண்டிய பணம். இவ்வளவு காலமும் வறுமையே முழுவதுமான வாழ்க்கைப் பயணத்தில் பாசம் என்பதை என்னவென்றே அறியாமல் களைத்துச் சோர்ந்து என்னு டன் மனங்கோணாது பிரயாணம் செய்த உனக்கு நான் அளிக்கும் சிறிய பரிசு இது."

"நிலையானது என்று நம்பியிருந்த எங்கட பிள்ளைகள் எங்களை நடுவழியில் கைவிட்ட நேரத்தில், நிலையற்றது என்று நம்பியிருந்த இந்தத்தொகை இப்போ கிடைத்தி ருக்கிறது. பழசுகளைப் பற்றி திரும்பத் திரும்ப கதைக் கிறதில எந்த லாபமும் இல்லை. ஆனாலும், நாம் பெற்ற பிள்ளைகளை விட எப்போதோ எடுத்த பொலிஷி இப்போ பணமாக கையில் கிடைத்திருக்கிறதைப் பார்க்கும் போது பழையனவற்றை நினைத்துப் பார்க்கத்தான் வேண்டியிருக் கிறது?"

இடையில் கொஞ்சக் காலம் அந்தப் பிள்ளைகளை நம்பி எந்த வேலைக்கும் போகாததால் ஒழுங்காகப் பணம் கட்ட முடியாமல் போச்சு. இல்லாட்டா ஐயாயிரம் ரூபா கிடைச்சிருக்கும். இந்தத் தொகையாவது இப்ப கிடைச் சதே பெருங்காரியம்.

“பணத்தைப் பத்திரமாகக் கொண்டு போய் வை. நான் ஒரு ஐந்து சதம் கேட்டாலும் இந்தப்பணத்திலிருந்து எடுத்துத் தராதே! உன்ர பேரில ஒரு வீடு வாங்க இந்தப் பணத்தை பயன்படுத்தப் போறன்.”

சிவகாமி அவர் நீட்டிய பணத்தை வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டாள். உடனேயே பணத்தைத் திருப்பி அவரிடம் கொடுத்தாள்.

“நாசமாய் போன பணத்தை என்னிடம் காட்ட வேண்டாம். மனிசர்களின் குணங்களை மாற்றி நேசத்தைப் பிரித்து வேடிக்கை பார்க்கிறதுக்கு உதவும் இந்தப் பணம்எனக்கு வேண்டாம். உங்கட பாசமும் அன்புந் தான் எனக்கு வேணும்.”

இப்படிச் சொல்லி விட்டு சிவகாமி கண் கலங்கிய வளாக தன் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள்.

தாமோதரத்தின் கண்களும் பனித்தன.

சிவகாமியின் எதிர்காலம் சிறப்பாய் அமைய அவளுடைய பேரில் ஒரு வீடு வாங்க வேண்டும் என்று தாமோதரம் அண்மைக்காலமாக எண்ணிக் கொண்டிருந்தார். அதைச் செயலாக்க இந்தப்பணம் நிச்சயம் உதவும் என்று நம்பினார். அந்த நம்பிக்கையோடு பணத்தைக் கொண்டு போய் இரும்பு ரங்குப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார்.

* * *

அந்தப் பகுதியிலிருந்த பாடசாலைகளுக்கு தளபாடங்கள் செய்து கொடுத்ததன் பேரில் தம்பிராஜா முதலாளிக்கு பெருந்தொகையான பணம் வரவேண்டியிருந்தது.

அந்தப் பணத்திற்குரிய ‘செக்’குகளைப் பெறுவதற்காகவும், வேறு சில சின்ன வேலைகளுக்குமாக முதலாளியின் வேண்டுகோளின்படி தாமோதரம் நேற்று முன்தினம் மட்டக்களப்பிற்குப் புறப்பட்டு வந்தார். நேற்றும் இன்றும் மட்டக்களப்புக் கல்விக் கந்தோரில் சுற்றித்திரிந்து செக்குகளைச் சேகரித்துக் கொண்டு வந்த, வேலைகளையும்

முடித்துக்கொண்டு இப்போது தம்பலகமம் திரும்பிக் கொண்டிருக்கிறார்.

அவர் ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி இந்தக் கிழமைக்குள் எப்படியும் ஒரு சொந்த வீட்டை வாங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருப்பதை நினைத்ததும் அவருடைய மனம் மகிழ்ச்சியால் குதூகலித்தது.

'நான் இப்படியே இன்னும் கன காலத்திற்கு இருப்பன் என்றது என்ன நிச்சயம்? ஒரு வேளை ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விட்டால்... பாவம் சிவகாமி அந்தரிச்சுப்போயிடுவாள். நான் மலைபோல உசிரோட இருக்கேக்கய பொடியங்க அவளை புறக்கணித்துப்போட்டாங்க. பிறகு நான் இல்லாத காலத்தில் அவளைச் சேர்த்துக் காப்பாத்துவாங்க என்டதில் எனக்கு நம்பிக்கை இல்லை! ஆகவே அவளுக்கெண்டு ஒரு நிலையான வசதியைச்செய்து குடுத்துப் போட வேணும்!'

இப்படி தாமோதரம் தனக்குள் பலவாறு சிந்தித்தவராய் கடிகாரத்தைப் பார்த்தார். இரண்டு மணியாகியிருந்தது! திருகோணமலைக்குப் போற கொழும்பு மெயில் ரெயின் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடும்.

வெளியில் பனிக்காற்றின் வீச்சம் இப்போது கூடியிருந்தது!

தாமோதரம் தலையை உள் இழுத்துக்கொண்டார்.

''ஹலோ ரமேஷ்! எங்க மலைக்கா?''

கூப்பிட்டது யாரென்று தலையை நீட்டிப் பார்த்தார். பெட்டிக்கு வெளியே நின்றிருந்த யாரோ ஒரு ஹிப்பித்தலை இளைஞன் பெட்டியின் உள்ளே இருந்தவர்களை அடையாளம் கண்டு கொண்டு கேட்டதும் இல்லாமல், பெட்டியின் கதவைத் இழுத்துத் திறந்து, உள்ளே ஏறி வந்து ஏற்கனவே இருந்தவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

"நான் றிங்கோவுக்கு போயிட்டுவாரன். அதுசரி விஷயம் என்னெண்டு தெரியுமா? நம்மட முருகன் மடையன் மாதிரி மாட்டிக் கொண்டான்!"

உள்ளே ஏறி வந்தவன் சிகரட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டே ஆரம்பித்தான்.

உறங்குகிற பாவனையில் மூலையில் ஒருக்களித்திருந்த தாமோதரம், முருகன் என்றசொல்லைக்கேட்டதும் துணுக்குற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். உலகத்தில் முருகன் என்று அவருடைய மகனுக்கு மாத்திரம் தானு பெயர் வைக்கப்பட்டிருக்கிறது? எத்தனையோ முருகன்கள் இருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆனாலும், சபலம் யாரைத் தான் விட்டது? உஷாராகக் காதுகளை அவர்களின் உரையாடலுக்குத் திருப்பினார்.

வந்தவனின் சிகரட் நெருப்பிலிருந்து ஆளுக்கொரு சிகரட்டை மூட்டிக்கொண்டார்கள் உள்ளே இருந்தவர்கள். புகைவளையங்கள் பெட்டியை முற்றுகையிட பேச்சு சுவாரஸ்யமாகத் தொடர்ந்தது.

"ஏன்? என்ன விஷயம்?"

"எங்கட டிப்பார்ட்மென்ட் ஓடிட்டர் சங்கரப்பிள்ளையை இப்பகண்டனான். அவன் தான் சொன்னான். இல்லாட்டி எனக்கு எங்க தெரியப் போகுது".

"சரி என்ன விஷயம் எண்டு சொல்லன்!"

"பள்ளிக்கூடத்தில திடீர் என்று ஓடிற் பண்ணப் போயிருக்கிறாங்க. பசிலிட்டி பீஸ் எக்கவுண்டில மூவாயிரம் சோட். உடனே அக்ஸன் எடுத்திருக்காங்க."

"அதுக்கும் இவன் முருகன் என்ன செய்யிறது? பசிலிட்டி பீஸ் எண்டா பிரின்சிபல் தானே பொறுப்பு."

"ஆர் இல்லையெண்டது? பிரின்சிபல் தான் பொறுப்பு. இவன் அங்க கிளாக் ஆக இருக்கிறான். எக்கவுன்ட் வேலையையும் இவன் தான் செய்யிறது வழக்கமாம். அதுக்கு

முந்தினகிழமை முழுவதும் பிரின்சிபல் லீவில் நிண்டிருக்கிருர். அந்தக்கிழமை முழுவதும் கிடைச்ச கலக்சன் எல்லாம் இவனிட்டதான் இருந்திருக்கு.''

''அவன் முருகன் வேலே செய்யிறது நாம படிச்ச கொலிஜ்ஜில இல்லேயா? அங்க பாங்க் எக்கவுண்ட் இருக்கிதே. அதுல டிப்போசிட் பண்ணியிருக்கலாமே?''

''என்னடா நீ, முருகனே பற்றித் தெரியாத மாதிரி கதைக்கிருய். அதெல்லாம் அப்டு டேற்ருச் செய்து வைக்கிறவன் அவன் தெரியுமா? சேர்ந்த கலக்ஸன் முழுவதையும் பள்ளிக்கூட பியோன் பொடியனிடம் குடுத்து பாங்கிற்கு அனுப்பினன் என்கிருன் முருகன். ஆனு... பியோன் இத மறுக்கிருன். தன்னட்ட ஒரு சதமும் தர இல்ல என்கிருன்.

வழக்கமாக கலக்ஸன் சேரச்சேர டெயிலியாக பியோன் தான் பாங்கிற்குக் கொண்டு போய் டிப்போசிட் பண்றவன். ரெண்டு மூண்டு நாள் அவனும் வேலேக்குப் போகவில்லேயாம்.

கடைசி நாள் அவன் வேலேக்கு வந்தோடன எல்லாக் காசுகளேயும் சேர்த்து ஒண்டாக பியோனிடம் குடுத்தன் என்கிருன் முருகன். ஆனு, காசப் பெற்றுக்கொண்டதுக்கு புரூபாக லெட்ஜர்ல பியோண்ட கையெழுத்து ஒண்டையும் காணவில்லேயாம்.''

''பிறகு?''

''பிறகு என்ன? அப்பாவி முருகன் அகப்பட்டுக்கொண்டான் பாவம்!''

''நீங்க எந்த முருகனேப் பற்றிடா கதைக்கிறீங்க?''

இவர்களின் உரையாடலே இதுவரை அலட்சியமாக-அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவனின் கேள்வி இது.

''அவன் தான்டா நம்மளோட படிச்ச முருகன், மெல்லிசா உயரமா இருப்பான். 'முருங்கை முருங்கை' என்டு பட்டப்பெயர் வைச்சிருந்தோமே அவன் தான்ரா. எப்போ

பார்த்தாலும் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருப்பான். இப்ப ஞாபகம் வருகுதா?''

''ஓ............அவனு! பாவம். அப்பிடி அவன் பிழை விடகூடிய ஆளில்லையே! எதிலும் வலு 'கீன்' ஆக இருப் பானே!''

''என்ன செய்யிறது? காசோட புழங்குகிற வேலைஎண்டாலே கவனமாகத்தான் இருக்கவேணும். கொஞ்சம் கண்ணயர்ந்தா போட்டுக் கட்ட வேண்டியது தான்.''

''அதெண்டா மெய்தான். ஆனு, அவன் எப்பிடிடா போட்டுக் கட்டுறது? படாத பாடு படுகிறுன். என்னமோ அவன்ர 'லக்' வன் வீக் 'ரைம்' குடுத்திருக்கிறுங்களாம். அதுக்குள்ளாக காசைக் கட்டாட்டி கேஸ் தான்.''

''அவனுக்கு அப்பா அம்மா ஒருவரும் இல்லையா? போன வருஷம் அவனுக்கு 'வெடிங்' முடிஞ்சிது எண்டு கேள்விப்பட்டனுன், அது உண்மை தானே!''

''அதையேன் கேக்கிறு! பொண்டாட்டிட பேச்சைக் கேட்டுக்கொண்டு பெத்தவங்களோட சண்டை புடிச்சிட்டு வேருயாப் போய் இருக்கிறுனும். அப்பன்காரன் அண்டையோட ஊரை விட்டுப் போனவர் தானும். அதுக்குப்பிறகு அவன்ர முகத்திலயும் முழிக்கல்லையாம்! இப்ப அவர் எங்க இருக்கிருர் எண்டு அவனுக்கே தெரியாது எண்டா, பார்த்துக்கொள்ளன் அவங்கட உறவை.

''கலியாணம் கட்டின பகுதி எப்பிடி?''

''அந்தக் கன்ராவிய ஏன் கேக்கிறு! வயித்தெ ரிச்சல் சிக்கல் தொடங்கின முதல் நாளே விஷயத்தை விளக்கி மாமனுக்குத் தந்தி அடிச்சிருக்கிறுன். ஆனு, கொழும்பில இருந்து பணத்துக்குப் பதிலாக 'இப்ப ஒண்டும் வசதியில்ல' என்று போஸ்ட் காட்டுல நாலு வரி வந்திச்சாம். நான் நினைக்கிறன் பெத்தவங்க உதவி செய்யட்டுமே என்ற எண்ணம் போல.''

''இந்த உலகமே இப்பிடித்தான்ரா! வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும். அது சரி எவ்வளவு நாள் 'ரைம்' குடுத்திருக்கிறுங்க எண்டு சொன்னனீ. ஒரு கிழமையா? பிறகென்ன? மிஸிஸப் பிடிச்சு கொழும்புக்கு அனுப்பினுன் எண்டா எல்லாம் சரியாப் போயிடும்.''

''மிஸிசா? நீ நினைக்கிறதுக்கு முந்தியே அவள் கொழும்புக்கு 'ரெயின்' எடுத்திட்டாளாம் தெரியுமா?''

''பிறகென்ன?''

''ஆனு.........நீ நினைக்கிற மாதிரி பணம் கொண்டாரதுக்காக கொழும்புக்கு போகல்ல, முருகனேடை கோவிச்சுக் கொண்டு வெளிக்கிட்டுட்டாளாம்.''

''அப்பிடியா? கேக்கிறதுக்கே அசிங்கமாயிருக்கு!''

''ஓமென்றன்! கழுத்து நிறைய நகை போட்டிருந்தாளாம். ஆனு, அதில ஒண்டக்கூடக் கழட்டிக் குடுக்க ஏலாதெண்டுட்டாளாம்.புருஷனுக்கு கரைச்சல் எண்டு தெரிஞ்சதும் அவனேடை சண்டை பிடிச்சுக் கொண்டு வெளிக்கிட்டுட்டாளாம்.''

''உண்மையா? இப்பிடியும் ஒரு மனுஷி இருப்பாளா? நானு இருக்க வேணும்......''

''வெட்டி முறிச்சுப்போடுவாயாக்கும். ஓம் ஓம் இப்ப இப்பிடித்தான் சொல்லுவா. பிறகு என்னடா வெண்டால்..............''

''என்ன செய்யிறது மனுஷிமார தலையில தூக்கி வச்சுக் கொள்றவன்ட கதியெல்லாம் இப்பிடித்தான். அவன் முதல்லேயே இடத்தக்குடுத்திட்டான். அப்ப சரியா நடந்திருந்தா பெத்தவங்கட்ட எண்டாலும் 'ஹெல்ப்' எடுத்திருக்கலாம்.''

''அதெண்டா மெய்தான். நாம் இருக்கிறம் எங்களால என்ன செய்யமுடியும்? ஏதோ அஞ்சு பத்தெண்டா

ஒரு மாதிரி அஜட்ஸ் பண்ணி குடுத்து ஹெல்ப் பண்ணலாம். ஆயிரக் கணக்கிலெண்டா ஆரால ஏலும்.''

விசில் சத்தம் கேட்கிறது.

சங்கிலித் தொடராக — ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து கொண்டிருந்த உரையாடல் அறுபடுகிறது. அதுவரை நடைபெற்ற உரையாடலுக்கு வித்திட்டவன் பெட்டியின் கதவைத் திறந்து கொண்டு 'டாட்டா' சொல்லிவிட்டு அவசரமாக விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

நீண்ட குரலெழுப்பியவாறு புகையிரதம் புறப்படத் தொடங்கியதும் பெட்டிக்குள் இருந்தவர்கள் பேப்பரைக் கீழே விரித்துப் போட்டுக் கொண்டு படுப்பதற்கு ஆயத்தமானார்கள்.

பெட்டியில் அமைதி ஆட்கொண்டிருந்தது.

அதுவரை தொடர் அறுபட்டுத் தனியாக நின்று கொண்டிருந்த அந்தப் பெட்டி மற்றப் பெட்டிகளோடு இணைக்கப்பட்டு இழுபடுகிறது.

ஓடிக்கொண்டிருக்கும் எஞ்சின், தான் சென்று கொண்டிருக்கும் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத—பாதைக் குப்பயனில்லாத பெட்டிகளைச் சந்திகளில் கழட்டி விட்டு தம் பிரயாணத்தை மேற்கொள்வதும் தொடர்பறுக்கப் பட்டு கைவிடப்பட்ட நிலையில் ஏகாந்தமாய் நின்றுகொண்டிருக்கும் அந்தப் பெட்டிகள் கூட அதனோடு தொடர்பு உள்ள — அதன் பாதைக்குப் பயன்படக் கூடிய எஞ்சின்களோடு ஒட்டிக்கொண்டு கிளம்பி விடுவதும் ஒரு சாதாரண நடைமுறையாகவே இருந்து வருகிறது.

பெற்ற பிள்ளைகளினால் ஏற்பட்ட மனவேதனைகளின் எல்லையில் பந்தபாசங்களைக் கழட்டி எறிந்து அவர்களின் தொடர்பே இனிவேண்டாம் என்று ஒதுக்கித்தள்ளி விட்டு தனியாக—முடிந்தவரை பயணம் செய்வது என்றுமுயன்று

கொண்டிருக்கும் தாமோதரம் சற்று முன் கேட்ட உரையாடல் மூலம் அறுபட்ட தொடர்பு மீண்டும் இணைக்கப்பட்டவராக இடிந்து அதிர்ந்து போனார்.

கண்ணீர் பொங்கி பீறிட்டெழ, அவர்களின் ஒவ்வொரு வார்த்தைகள் தந்த தாக்கத்தைத் தாங்க முடியாது தாமோதரம் உள்ளம் கசிந்து துடித்துக்கொண்டிருந்தார்.

புகையிரதம் வேகத்தைக் கூட்டிக் கொண்டு அள்ளிப் பறந்து கொண்டிருந்தது. அவருடைய சிந்தனை இளைய மகன் முருகனையும் அவனை இப்போது சூழ்ந்து பற்றியுள்ள இக்கட்டான நிலையையும் எண்ணி எண்ணி மிக வேகமாக தாவிக்கொண்டிருந்தது.

'பாவம் முருகன் தனிமையிலிருந்து என்ன பாடுபடுகிறானோ? கட்டின மனைவியும் கொழும்புக்கு போய் விட்டாளாமே! என்ன இருந்தாலும் அவள் இப்பிடியான நேரத்தில் கொழும்புக்குப் போயிருக்கக் கூடாது! அவன் முருகன் தனியாக இருந்து யோசிச்சி யோசிச்சி எக்கச்சக்கமாக எதையாவது செய்துவிட்டால்............

இல்லை அப்படி ஒண்டும் நடக்கக் கூடாது. நான் உயிரோடு இருக்கு மட்டும் அப்படி எதுவும் நடக்கவிடமாட்டேன்.'

புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது.

மனதுள் குமைந்து கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணங்களோடு போராடிக்கொண்டிருந்த தாமோதரம், புகையிரதம்கந்தளாய் ஸ்டேசனைத்தாண்டிய போது ஏதோ ஒருமுடிவுக்கு வந்தவராய் காலடியில் இருந்த கூடையை இழுத்து அதனுள் கையை விட்டுத் துழாவி அகப்பட்ட ஒரு துண்டுத் தாளை வெளியில் எடுத்து கவிந்து கொண்டிருந்த மங்கிய வெளிச்சத்தில் காலுக்கு மேல் வைத்து எழுதத் தொடங்கினார்.

சிவகாமீ!

நான் இங்கே இறங்காமல் அவசரமாக 'மலை'க்குப் போகிறேன். சிக்கலான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்தக் கடிதத் துண்டைக் கண்டதும் வீட்டுக்குள், என்னுடைய இரும்பு ரங்குப் பெட்டியில் இருக்கும் காசு மூவாயிரத்தையும் கவனமாக எடுத்துக் கொண்டு மலைக்கு வா. இளைய மகன் முருகனின் வீட்டுக்கு உடனே வெளிக்கிட்டு வா. சுணங்காதே. இந்தத் துண்டை தந்தி போல பாவிக்கவும்.

தாமோதரம்.

வாலாமணி பொக்கட்டுக்குள் இருந்த பழைய என்வலப் ஒன்றை வெளியில் எடுத்து அதனுள் கலகலத்துக் கொண்டிருந்த சில்லறைக் காசுகளையும், ரெயின் டிக்கட் மட்டையையும் வாலாமணிப் பொக்கட்டுக்குள் மீண்டும் போட்டு விட்டு எழுதிய கடிதத்துண்டை இரண்டாக மடித்து அதனுள் வைத்துக் கொண்டார்.

புகையிரதம் தம்பலகமம் ஸ்டேசனில் நின்ற போது சட்டென்று கீழே இறங்கி, கவுண்டருக்குப்போய்பைக்குள் போட்டிருந்த சில்லறைக் காசை எடுத்துக் கொடுத்து திருகோணமலைக்கு ஒரு டிக்கட்டை வாங்கிக் கொண்டு ஸ்டேசன் வாசலைப்பார்த்தார்.

விடிந்தும் விடியாத அந்த இருள் கப்பிய நேரத்தில் இரண்டு பேர் மட்டுமே கொழும்புப் பெட்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

தன்னைப்போலவே அரைக்கை வாலாமணி போட்டிருந்த அவர்களில் ஒருவரை அவசரமாக நெருங்கிப் போனார் தாமோதரம்.

கையிலிருந்தஎன்வலப்பை அவரிடம்கொடுத்து, வர்ண மேட்டுப் பகுதியில் உள்ள தனது மனைவி சிவகாமியிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

''மறக்காமல் கட்டாயம் குடுத்திருங்கோ'' என்று ஒன்றுக்கு இரண்டு முறை திருப்பிக் கூறிவிட்டு, திருப்தி நிறைந்தவராக முன்போல் தனது பெட்டியில் ஏறிக் கொண்டார்.

புகையிரதம் புறப்பட்டது.

## 13.

இருள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து நிலம் வெளுப்படைந்து கொண்டிருந்தது.

கடந்த மூன்று நாட்களாக சரியான நித்திரை இல்லாததால் ரத்தக் கட்டியாகச் சிவப்பேறியிருந்த கண்கள், வாரிவிடப் படாததால் கலைந்து ஒழுங்கற்றிருந்த தலைமயிர், கவலையின் எல்லையற்ற நிழல் படிந்த முகம், கசங்கி அழுக்கடைந்திருந்த உடை, களைத்துச் சோர்ந்த நடை, கலங்கிய உள்ளம்.

இவை அத்தனையின் மொத்த உருவமாக, குழம்பிய ஒரு நிலையில் முருகன், கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு விருந்தையின் இரு நுனிகளுக்கும் இடையில் நடந்து நடந்து அலுத்து விட்டான்.

தன்னை எதிர் நோக்கியிருக்கும் 'அந்த' ஆபத்திலிருந்து விடுபட, வழி ஒன்றும் கிடைக்காமல் திணறிக் கொண்டிருந்தான்.

கிழக்குப் பகுதி விடிவதன் மூலம் படிப்படியாக ஏறிக் கொண்டிருக்கும் வெளிச்சம், தன்னை மீட்க முடியாத கோர இருளை நோக்கி தள்ளப் போவதைஉணர்ந்து, அந்த உணர்வை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக- அப்படியான

ஒரு நிலையை தவிர்க்கவும் முடியாதவனாக பதறிக்கொண்டிருந்தான்.

தான் செய்யாத-மனதாலும் நினைத்துப் பார்க்கத் துணியாத ஒரு தவறுக்காகத் தான் தண்டிக்கப்படத்தான் வேண்டுமா? இன்று நேற்று மட்டுமா அவன் பணத்துடன் புழங்குகிறான்? கிளாக்காக வேலைக்குச் சேர்ந்த இந்த மூன்று வருடமும் பணத்தோடுதானே புழங்குகிறான். போன வாரம்வரை எந்த வித தவறுகளுக்கும்இடமளிக்கவில்லையே! அப்படியானால் போன வாரம் மட்டும் என்ன நடந்தது?

ஒன்று,இரண்டா சுளையாக மூவாயிரம் ரூபாய். இந்தப் பெரிய தொகையை வழக்கம் போல் பியோனுடைய கையில் கொடுக்கும் போது, கையெழுத்துப் போடுவதற்காக லெட்ஜரையும் எடுத்துக் கொடுத்திருந்தான்.

ஆனால்...'ஒடிட்டர்ஸ்' வந்து 'செக்' பண்ணியபோதுதான் பியோன் திட்டமிட்டு, தன்னை மாட்டிவைத்துப் போட்டான் என்று தெரிந்தது முருகனுக்கு.

சொல்லி வைத்தாற்போல் இந்தக் கிழமை பார்த்துத் தானா அவர்கள் 'ஒடிற்' பண்ணவர வேண்டும்? எல்லாம் அவனுடைய கஷ்டகாலம்தான்.

முருகனுடைய நடையில் சோர்வு காணப்பட்டது.

''நான் கூறிய சமாதானத்தை அவர்கள் ஒருவரும் ஏற்றுக் கொள்ள மறுத்துப் போட்டார்கள். அவர்களும் தான் என்ன செய்வார்கள்? நான் சொல்றதை நம்பி ஏற்றுக் கொண்டு, என்னைப் போல ஏமாந்து நிற்க அவர்களுக்கென்ன விதியா?

பிரின்சிபல் நல்லவர், என்ர நிலைமைக்காக இரக்கப்படுவது என்னமோ உண்மைதான். ஆனால்.........பணம்? அதைக் கட்டித்தானே ஆகவேண்டும். அதைத் திருப்பிக் கட்டுவதற்காகத் தரப்பட்ட ஒரு கிழமை 'நேரம்' எவ்வளவு கெதியாக முடிந்துவிட்டது!

இன்று கடைசி நாள்.

''இன்று பணத்தைத் திருப்பிக் கட்டாவிட்டால்...''

மாறி மாறி எப்படிச் சிந்தித்தாலும் முடிவு ஒன்றுமே அவனுக்குத் தெரியவில்லை. மேலும் சிந்திக்கச் சக்தி அற்ற வனாக, நடக்க முடியாமல்-நடக்க மனமில்லாமல் மூலைச் சுவரில் சோர்ந்து போய்ச் சாய்ந்து கொண்டான் முரு கன்.

''போன கிழமை வரை சிரிச்சு சிரிச்சுப் பழகினசினே கிதர் எல்லாம் என்னைக் கண்டதும் இப்போது ஓடி ஓடி ஒளிக்கிறார்களே ஏன்?

நான் என்ன இவர்களிடம் பிச்சையா கேட்கப் போனன்? கடனாகத்தானே பணம் கேட்டன். தெருவில் பார்க்கிறவங்க எல்லாரும், ஏதோ நான் தான் பணத்தை எடுத்திருக்கிறன் என்று நினைச்சுக் கொண்டு வெறும் வார்த்தைகளால் அனுதாபம் தெரிவிக்கிறாங்களே தவிர, பணம் தந்து உதவி செய்ய முன்வருகிறார்கள் இல்லையே? இவ்வளவுதானா உலகம்...?''

நேற்று, வட்டிக்கார வல்லிபுரத்தைச்சந்தித்ததோட, முருகனிடமிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் விட்டுப் போயிற்று.

பத்துச்சத வட்டிதான். என்றாலும் பரவாயில்லை என்ற முடிவோடு, முந்தி எப்போதோ தெருவில் இரண் டொரு நாள் கண்டு சிரித்த அறிமுகத்தை வைத்துக் கொண்டு வல்லிபுரத்தின் வீட்டிற்குப் போய் வட்டிக்குப் பணம் கேட்டுப் பார்த்தான்.

இதற்கு முன்னர் எப்போதுமே மற்றவர்களிடம் கடன் கேட்டுப் பழக்கமில்லாத அவன் விஷயத்தை எப்படி பூசி மறைத்து ஆரம்பிப்பது என்று தெரியாமல் குழம்பி-வாங் கிய கடனைக் கொடுக்க முடியாமல் தவிப்பவனைப் போல் கூனிக்குறுகி விஷயத்தைஒருவாறுசொல்லிமுடித்தபோது, அவனுடைய தலை வெடித்து விட்டது போல் இருந்தது.

அவனுடைய வேண்டுகோளைக் கேட்டதும், வட்டியின் மூலம் வரவிருக்கும் மூன்று நாலு மடங்கு தொகையை மனதில் கணக்கிட்டவாறு வல்லிபுரத்தார் அன்பொழுகப் பேசினார். ஆனால், பேச்சின் முடிவு...?

''ஈடாக ஏதும் தராமல் உதவி செய்ய முடியாது தம்பி.''

என்று கையை விரித்துவிட்டார்.

தவிச்ச முயல் அடிக்கப் பார்க்கும் அவருடைய நரித் தந்திர நோக்கத்தை முருகனுடைய மனம் எரிச்சலோடு வெறுத்தாலும், அதை விட வேறுவழி அப்போதைய நிலையில் தென்படாததால், எழுந்து வெளியே வர மன மில்லாமல், என்னத்தை ஈடாகக் கொடுக்கலாம் என்று யோசித்த போதுதான் 'அது' ஞாபகத்தில் தட்டுப்பட் டது.

''அப்பா நிச்சயம் இந்தச் சிக்கலிலிருந்துகாப்பாற்று வார்!'' என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனுள் துளிர்விட்டது.

''ஈடாகத் தருகிறதுக்கு இப்ப என்னட்ட நகை ஒண் டும் இல்லை. காணி எண்டா ஏற்றுக் கொள்வீங்களா?''

''ஓமோம்! அதுக்கென்ன காணிக்கு ஏற்ற பெறுமதி தரலாம்.''

''பாலையூற்றில எங்களுக்குச் சொந்தமான காணியும் வீடும் இருக்கு. அதை ஈடாக எழுதித் தரச் சொல்றன்.''

''எது? உங்கட அப்பாவின்ர காணியையா சொல் றீங்க?''

''ஓம்! அதைத்தான்.''

முருகனுக்கு ஆரம்பத்தில் துளிர்விட்ட நம்பிக்கை இப்போது இலைவிட்டு தழைப்பது போல், உச்சி குளிர்ந் தது. 'அப்பாவின் காணியா' என்று அவர் கேட்டதிலிருந்தே

வல்லிபுரத்தார் காசு தர மறுக்கமாட்டார் என்று உறுதியாக நினைத்தான்.

வல்லிபுரத்தார், வெற்றிலைக் காவி படிந்த முழுப்பற்களையும் காட்டி வாயைத் திறந்து சிரித்தார்.

எந்தக் காணியை யார் விற்கிறுங்க, எப்பிடி விற்கிறுங்க, எப்போது விற்கிறுங்க, யார் வாங்கிறுங்கஎன்ற சங்கதிகளையே உருப்போட்டு அதன் மூலமே வியாபாரம் நடாத்திக் கொண்டிருக்கிற வல்லிபுரத்தாருக்குச் சிரிப்பு வந்ததற்குக் காரணமும் இருந்தது.

''தம்பி! கதைக்கிறன் எண்டு கோவியாத. என்ன ஒண்டும் தெரியாதவன் மாதிரி பேசிறுய். ஒருக்கா வித்த காணிக்கு ஆரும் காசு குடுப்பினமே?''

முருகனுக்குத் திகைப்பாய் இருந்தது.

''நீங்கள் எந்தக் காணியச் சொல்றீங்க?''

சந்தேகத்தோடு கேட்டான்.

''வேற எந்தக் காணீ? உங்கட அப்பாட்ட என்ன பத்துப்பன்னண்டு காணியா இருந்திருச்சு. பாலயூற்றில இருக்கிற உங்கட காணியத்தான் சொல்றன்.

அந்தக் காணிய இப்ப கிட்டடில, ஒண்டு ஒண்டரை வரியத்துக்கு முந்தியே அங்க உள்ள ஆருக்கோ உங்கட அப்பா சுடுகுது மடியப்பிடி எண்டு அரு விலைக்கு வித்துப் போட்டாரே, உனக்குத் தெரியாதா? என்னட்டக் கூட ஒரு சொல்லுச் சொல்லல்ல. 'பெஸ்ட் கிளாஸ்' காணி. இப்ப அது இருந்தா இல்லயண்டாம சுண்டிச் சுண்டி ஐயாயிரத்துக்கு மேல விற்கலாம். ஆருக்கோ வித்துப் போட்ட காணிய நீங்க ஈடாக வைக்க ஏலுமா தம்பி.''

துளிர்த்து இலைவிட்டுத் தழைத்த நம்பிக்கையில் கொதிநீரை அள்ளிக் கொட்டியது போலிருந்தது வல்லிபுரத்தாரின் செய்தி.

நம்பிக்கை கருகிவிட, தளர்ந்து உடைந்து குமுறும் நெஞ்சைப் பிடித்தவாறு மௌனமாக மாற்றுவழி அகப் படாமல் வெளியே புறப்பட்டான் முருகன்.

அப்பா எதற்காகக் காணியை அவசரமாக விற்றிருப் பார்? என்ற கேள்வி அவனை வளைய வந்து கொண்டிருந் தது. ஏனோ தெரியாது அவனுடைய மனதில் முதலில் தோன்றியது அண்ணனின் முகம்தான்.

காணி பறிபோனதற்கு அண்ணன் தான் காரணமாக இருக்கும்என்றஎண்ணம் முருகனின் மனதில் வேரூன்றியது. அந்த ஓடிப்போன ஊதாரி அண்ணனுக்குக் கொடுக்கிற துக்குத்தான் அப்பா அப்படிஅவசரஅவசரமாகக்காணியை விற்றிருப்பார் என்ற எண்ணம் அவனுள் வலுத்தபோது, இரத்தம் வேகமாகக் கொதித்துப் பிரண்டது.

அளவுக்கு மீறிய ஆத்திரம் அவனுக்கு அப்பாமேல் உருவாகியது. தன்னோடு சண்டை பிடித்துக் கொண்டு கொழும்புக்கு ஓடிப்போன தன்னுடைய மனைவி, தகப்ப னரை விட எவ்வளவோ நல்லவளாகப் பட்டது!

சுழன்றுவரும் கலங்கரை விளக்காக அந்த விருந்தை யில் மீண்டும் நடைபயிலத் தொடங்கினான். ஒரு குறிக்கப் பட்ட இடத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் கலங்கரை ஒளிபோன்று அவனுடைய எண்ணச் சுழலில் குறிப்பிட்ட சில உருவங்கள் ஒவ்வொன்ருகப் பளிச்சிட்டன.

பணம் நிறைய இருந்தும் பொறுத்த நேரத்தில், மரு மகனுக்கு உதவிசெய்ய முன்வராது கைவிரித்த மாமனர்,

கட்டிய கணவனின் கழுத்துப்போனலும் பரவா யில்லை. தன்னுடைய கழுத்தில் இருக்கும் நகை ஒன்று தானும் போய்விடக் கூடாது என்ற லட்சியத்தில் தன் வீட்டுக்கு ஓடிப்போன மனைவி,

கைவசம் இருந்த எல்லாவற்றையும் மூத்தவனுக் காகத் தொலைத்துவிட்டு இளையவனை நடுத் தெருவில் கை விட்டிருக்கிற தந்தையார்,

வசதியுள்ள மருமகளுடன் ஒருவாறு ஒத்துப்போய் சமாளிச்சு வாழத் தெரியாமல் சண்டை பிடித்த அவனு டைய தாயார்,

அகோர வட்டி வாங்கினாலும் அதற்கீடாக பொருள் கேட்டு பெருந் தொகையை விழுங்க நினைக்கும் வட்டிக் கார வல்லிபுரம்,

தோளோடு தோள் சேர்த்து கைகோர்த்துத் திரிந்து விட்டு இன்று அவனின் நிழலைக் கண்டதும் ஓடி ஒளிந்து கொள்ளும் நண்பர்கள் கூட்டம்...

இப்படி ஒவ்வொரு முகமாகத் தோன்றித் தோன்றி மறைய, மறைய, முருகனின் உள்ளத்தில் வெறுப்புணர்ச் சியே நிறைந்து கசந்தது. தன்னைச் சுற்றி நிற்கும் எல்லோ ருமே தனக்கு முழு எதிரிகள் என்ற தவிர்க்க முடியாத முடிவுக்கு அவன் தள்ளப்பட்டான்.

முருகன் அவ்வாறான ஒரு முடிவுக்கு தள்ளப்படுவதற் கும், தாமோதரத்தின் உருவம் அவன் கண்ணில் படுவதற் கும் பொருத்தம் சரியாக அமைந்தது.

கரிப்புகை படிந்து, கசங்கிய உடையுடன், நித்திரை யற்ற கலங்கிய கண்களோடு தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்த தாமோதரத்தின் அப்போதைய தோற்றம் நாளாந்தம் வீட்டு வாசற்படியில் நிற்கும் பிச்சைக்காரனை ஒத்திருந்தது.

அந்த வயோதிப உருவம், கலங்கிப் போய் நிற்கும் தன் மகனுக்கு ஆறுதல் கூறி, அவனுக்கேற்பட்ட சிக்கலில் இருந்து விடுவிக்க வந்துகொண்டிருந்தது.

தன்னுடைய மானத்தையும், இழக்க விருந்த வேலை யையும் காப்பாற்றி தன்னை ஒரு மனிதனாக இந்தச்சமூகத் தில் மீண்டும் நடமாடச் செய்யக் கூடிய ஒரு வல்லமை யோடு தாமோதரம் வந்து கொண்டிருக்கிறார் என்ற அப் பட்டமான ஒரு உண்மையை உணரக்கூடிய மனோபாவம் இப்போது முருகனிடத்தில் அறவே காணப்படவில்லை.

''வாழ்வதா சாவதா'' என்ற இறுதிப் போராட்டத்தில், தனித்து ஒருவனாக, உதவிகள் எதுவுமற்று தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் தன்னிடம், ஏதாவது பணத் தேவையை பூர்த்தி செய்ய பணம் கேட்க வரும் ஒரு பிச்சைக்காரக் கிழவனாகவே முருகனுக்குத் தோன்றியது. ஒரு மகனுக்காக இன்னொரு மகனை நசுக்கிச் சாகடிக்கும் ஒரு பாதகன் வருகிறான் என்ற எண்ணந்தான் அவனுள் தலைவிரித்தாடியது. அவனுடைய நெற்றி நரம்புகள் புடைத்து கண்களில் வெறியாக வெளியேறியது.

''முருகா!''

பாசமும் பரிவும் நிறைந்த குரலில் மகனைக் கூப்பிட்டுக் கொண்டே, வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து வைத்த தாமோதரத்தின் கண்களுக்கு, தன் மகன் துரும்பாக மெலிந்து விட்டதாகப் பட்டது.

''ஆரது? முருகன் எண்டு இங்க ஆருமில்ல. அவன் எப்பவோ செத்துப் போயிட்டான்.''

தந்தையின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் விருப்பமில்லாமல், வெட்ட வெளியை வெறித்துப்பார்த்தவாறே கத்தினான் முருகன்.

முருகனின் குரலில் நிறைந்திருந்த கடூரம் தாமோதரத்தை உலுப்பிவிட்டது. அவருடைய தளர்ந்த உடலும் மனதும் வெகுவாகத் தாக்கப்பட்டன. கால்கள் நிலைகொள்ளாது தள்ளாடின. தலை சுற்றிக் கொண்டு வந்தது.

''முருகா! அப்பிடி எல்லாம் சொல்லாதே! நீ சாகவில்லை, என்ர மகன் சாகவில்லை. நான் உன்னைச் சாகவிடமாட்டேன். இங்க பார் உன்னைப்பெற்ற அப்பன் வந்திருக்கிறேன்.''

''பெத்தவனும் பெத்தவன். இப்பிடிச் சொல்றதுக்கு உங்களுக்கு வெக்கமாயில்லை.''

வெறி மீறியவனாக தொண்டை கிழியக் கத்தினான்.

"எனக்கு அப்பன் எண்டு ஆரும் கிடையாது. காசுக்காக பிச்சை கேட்டு வருகிறவங்க எல்லாம் என்ர அப்பனு? காசு ஏதும் தேவை எண்டா நீங்க பெத்திருக்கிற உங்கட மூத்த மகன்ட போய்க் கேளுங்க. இப்ப இங்க நிக்க வேண்டாம். கழுத்தப் பிடிச்சு வெளியே தள்ளுறதுக்கு இடம் வையாம வெளியே போ!"

ஏக வசனமாக ஒலித்த முருகனின் கடைசிச் சொல் பக்கத்து வீடுகளில் எதிரொலித்து வேடிக்கை பார்க்கக் கூட்டத்தைக் கூட்டியது.

அவமானத்தால் துவண்டு போனுர் தாமோதரம்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு மகனைக் காண வந்து நிற்கும் தன்னை ஒரு வார்த்தை தானும் பேசவிடாமல் இப்படி முருகன் எரிந்து விழுவதற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று விளங்காமல் திகைத்துப் போனுர். ஆனுல், அவனுடைய மனுேநிலை மிக வேகமாக கொதித்துக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

"முருகன் இப்போதிருக்கிற கொதிவேகத்தில், இன்னும் ஏதும் கதைத்தால், அவன் சொன்ன மாதிரி கழுத்தைப் பிடிச்சு தள்ளினுலும் தள்ளுவான். நாலு பேர் பார்த்துச் சிரிக்கிறதுக்கு இடமளிக்காமல் இப்போதைக்கு பேசாமல் வெளியேறுவதுதான் செய்யக்கூடிய வேலை" என்று முடிவுசெய்துகொண்டார்.

"முருகா! நீ விரும்பாதபோது நான் இங்கு நிற்கப் போவதில்லை. இதோ போகிறேன். உனக்குக் கிடைக்க இருந்த ஒரு நல்ல சந்தர்ப்பத்தையும் தட்டிக் கழித்துக் கொள்கிருய்?"

முணுமுணுத்துக் கொண்டே அவனுடைய வீட்டுப்படிகளில் வைத்த காலை பின்னுக்கெடுத்து நடக்கத் தொடங்கினுர் தாமோதரம்.

வாசல் கதவை படாரென்று அடித்துச்சாத்தியவாறு உள்ளே போய்விட்டான் முருகன்.

வேடிக்கை பார்க்க விருந்தை விளிம்புகளில் வந்து நின்ற அக்கம் பக்கத்தாருக்கு தெளிவாக ஒன்றும் புரிய வில்லை. இப்படியான சம்பவங்களையே நெடுக புதினம் பார்த்து அனுபவப்பட்ட இரண்டொருவர் மாத்திரம், மௌனமாக வெளியேறிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவர் முருகனுடைய தகப்பனாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டார்கள்.

ஏற்கனவே, பல சம்பவங்களாலும் மனமொடிந்து நைந்துபோன தாமோதரத்திற்கு, தொடர்ந்து செய்த பிரயாண அலுப்பு, நித்திரைக் களைப்பு, காலையிலிருந்து இதுவரை ஒன்றுமே சாப்பிடாத பசி மயக்கம், பெற்ற மகனின் வெறிச் செயல் எல்லாமே ஒன்று சேர்ந்து குழம்பி தலையைக் கிறுகிறுக்கச் செய்தன. அந்தத் தெரு, வீடுகள் யாவுமே சுற்றிச் சுற்றி வருவதுபோல் இருந்தது.

கொஞ்சத் தூரம் சமாளித்துக் கொண்டு நடந்தார். ரோட்டுத் திருத்துவதற்காக வழியோரத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்த கற்களில் ஒன்று அவருடைய காலைத் தடுக்கி விட, நிலை பெயர்ந்து மல்லாக்க அந்தக் குவியலுக்குமேலே விழுந்தார். தலையில் நேரடியாகத் தாக்கிய கற்கள் ஏற்படுத்திய காயத்திலிருந்து ரத்தம் கசியத் தொடங்கியது.

கற் குவியலிலிருந்து எழும்பக் கையை ஊன்றினார். சோர்வு அவரை எழும்பவிட வில்லை. தலை கனத்தது. அலங்கோலமாக அப்படியே மயங்கிப் போனார்.

தாமோதரத்தின் தள்ளாடும் நடையையே பார்த்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர்களில், மனித உணர்வு கொஞ்சமிருந்த ஒரு சிலர் ஓடிப்போய் அவரைத் தூக்கி நிமிர்த்தினார்கள். கிழிந்து தொங்கிய அவருடைய வேட்டித் தலைப்பில் ஒரு துண்டைப் பிய்த்து தலையில் ஒரு

தற்காலிகக் கட்டு ஒன்றைப்போட்டுவிட்டுதாமோதரத்தை கைத்தாங்கலாகத் தூக்கிக் கொண்டுவந்து முருகனின் விருந்தையில் கிடத்தினர்கள்.

வாசல் கதவை அடித்துப் பூட்டிய போதும், படபடக்கும் மனதைத் தேற்றமுடியாமல் ஜன்னல் கிராதிக்குள்ளால் வெளியே நடப்பதை நோட்டம் விட்டுக்கொண்டிருந்த முருகன், சட்டென்று கதவைத் திறந்து வெளியே வந்தான்.

தலையில் கட்டியிருந்த சீலைத் துண்டிற்கு மேலாக பீறிட்டு ஊறிக் கொண்டிருந்த இரத்தச் சிவப்பைக்கண்டதும் முருகனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

அதுவரை அவனுள் தலைவிரித்தாடிக்கொண்டிருந்த 'வெறி' பதுங்கிக் கொண்டது. உள்ளத்தில் பாச உணர்வு பீறிட்டுப் பாய என்ன செய்வது என்று தெரியாமல் மலாரடிச்சு திகைச்சுப் போனன்.

"காயம் கொஞ்சம் பெரிசு போல இருக்கு. இரத்தமும் ஓடுது. ஆள் நல்லா களைச்சுப் போயிருக்கிறார்."

"ஓம். எதுக்கும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது தான் நல்லது."

சுற்றி நின்றவர்களின் அனுபவ ஆலோசனைகளை முருகனின் மனம் முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்டது. ஆனல்... அதைச் செயலாக்க முடியாமல் திணறினன். அவசரத்திற்குச் செலவழிக்க இப்போது கையில் ஏதாவது இருந்தால் தானே!

முருகனின் முகத்தில் பரவியிருந்த வெறுமையைப் புரிந்து கொண்ட ஒருவர், ஏதோ நினைத்துக் கொண்டவராய் புறப்பட்டார். போற வேகத்தில் சொன்னர்: "நான் டக்ஸி புடிச்சுக் கொண்டு வாரன்."

தாமோதரத்திற்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை.

## 14.

கோணேசுவரர் கோயிலின் பெரிய காண்டா மணி எழுப்பிய ஒலி, அந்த விடிகாலையில் தம்பலகமத்தின் திசையெல்லாம் பரவி ஒலித்தது.

அந்த ஒலி கேட்கு முன்னரே உறக்கத்திலிருந்துவிழித்துக் கொண்டிருந்த சிவகாமி, மட்டக்களப்பிற்குச் சென்றிருக்கும் கணவர் சுகமாக ஒரு கரைச்சலும் இல்லாமல் வந்து சேரவேண்டுமே என்ற நினைவுக்குத் தன்னைப் பறி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மணிச் சத்தத்தைக் கேட்டதும் வாரிச் சுருட்டி எழுந்தாள். முற்றத்துக்கு நீர்தெளித்துவிட்டு, நிலத்தில்விழுந்து கிடந்த இலை குழைகளைக் கூட்டித் தள்ளி துப்புரவு செய்து கொண்டிருந்தாள்.

கணவனின் வருகையை எதிர்பார்த்திருந்த சிவகாமி அந்த விடிகாலைப் பொழுதில், கணவனுக்குப் பதிலாக, அவர் கொடுத்தனுப்பிய கடிதத்துண்டைப் பெற்றுப்படித்துப் பார்த்ததும் பதறிப் போனாள்.

மூன்று நாட்களுக்கு முன் சென்றிருந்த கணவனின் துண்டுக் கடிதமும், அது அடக்கியிருந்த அவசரச் செய்தியும் சிவகாமியிடம் பயங்கர எண்ணங்களைத் தூண்டின. 'ஏன் இப்படி மலைக்கு வரச் சொல்லி இருக்கிறார்' என்ற கேள்விக்கு இடம் கொடாமல் புறப்பட ஆயத்தமானாள்.

எல்லாவற்றையும் அப்படியே போட்டதுபோட்டபடி விட்டுட்டு, உடுத்திருந்த சேலையோடுவெளிக்கிட்டுவிட்டாள். பழஞ்சேலைத் துண்டொன்றில் கட்டி வைத்திருந்த மூவாயிரத்தையும், மறக்காமல் எடுத்து மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

இரவு நேரத்தில் கோவிலடியில் தங்கிநின்று திருமலைக்குப் போகும் முதல் பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டமும்

நடையுமாக போய், கூட்டாம்புளிச் சந்தியில் நின்று பஸ்ஸை மறித்து அவசர அவசரமாக ஏறிக் கொண்டாள்.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

பஸ்ஸுக்குள் தெரிந்த முகங்கள் சிவகாமியை இனம் கண்டு, என்னவெல்லாமோ கேள்விகள் கேட்டன. யாருக்கும் எதையும் சொல்ல முடியாமல், மனதில்முட்டிமோதிக் கொண்டு வரும் பயங்கர எண்ணங்களின் பலமான தாக்கத்தைத் தாங்கிக் கொள்ள வலு அற்றவளாக தவித்துக் கொண்டிருந்தாள்.

முத்துநகரில் பஸ் நின்று மீண்டும் புறப்பட்டது.

அடுத்து வரவிருப்பது பாலம்பட்டார். சிவகாமி வெளியே எட்டிப் பார்த்தாள். பஸ் அந்தப் பாலத்தைத் தாண்டும்போது, பாலத்திற்குக் கீழே வலது புறத்தில் இருந்தகோயில் பக்கம் திரும்பி கையெடுத்துக் கும்பிட்டாள். கணவனுக்கு ஆபத்து எதுவும் நடக்காமல் காப்பாற்று என்று மானசீகமாக வேண்டிக் கொண்டாள்.

சிவகாமியின் போராடும் மனத்தோடு போட்டிபோட்டுக் கொண்டு பஸ் வேகமாக ஓடியது. விலாங்குளம், ஆண்டாங்குளம், கஞ்சிமடம், அன்புவழிபுரம்,......இப்படி ஒவ்வொன்றையும் பின்னுக்குத் தள்ளிக் கொண்டே பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

திருமலை பஸ் ஸ்டாண்டில் இறங்கியபோது சிவகாமி மரக்கறிச் சந்தைகளுக்கு மேலால் உயர்ந்து நின்ற மணிக்கூண்டில் நேரத்தைப் பார்த்தாள். **10-25**ஐக் காட்டியது. என்ன இவ்வளவு நேரம் சென்றிட்டா என்ற சந்தேகத்தோடு, பக்கத்தில் நின்றிருந்த ஒருவரிடம் விசாரித்தாள். 7 மணி.

அது சரியாக இருக்கும் என்று மனதுள் நினைத்துக் கொண்டுஎதிர்ப்பக்கம் பார்த்தாள். முற்றவெளி விளிம்பை ஒட்டி வரிசையாக அடுக்கினாற் போல் நின்றிருக்கும் டக்ஸி

களில் ஒன்றைக்கூட காணவில்லை. வெயில் கடுமையாக ஏறியிருந்தது. நின்று யோசிக்கும் அளவிற்குப் பொறுமை யில்லாத அந்த வயோதிபத் தாய் நடையிலேயே புறப் பட்டாள்.

பெற்றவங்களோடு கோபித்துக் கொண்டு தனியாகப் போன முருகன் பெரிய கடைப் பகுதியில் வீடு எடுத்து இருக்கிறுன் என்று எப்போதோ கேள்விப்பட்டதை நினை வுக்குக் கொண்டு வந்து முற்றவெளிக்குள்ளால் நடையை எட்டிப் போட்டாள்.

அந்தப் பெரிய முற்றவெளியின் ஒரு தொங்கலில் கம் பீரமாக எழுந்து நின்ற நகராண்மைக் கழகக் கட்டிடத் தைக் கடந்து தெருவுக்கு ஏறியபோது சிவகாமி வேகத் தைக் குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

கடற்கரை யோரத்தை அண்டிப் பிரியும் ஐந்துதெருக் களில் எதில் செல்வது என்று திகைத்து நின்ற அந்தத் தாய், மூலையிலிருந்த சைக்கிள் கடைக்கு முன்னுல் நின்று கொண்டிருந்த பொடியன் ஒருவனிடம் விசாரித்தாள்.

அவன்- தாமோதரம் மாஸ்டரின் மகன் முருகனின் வீடு இருக்கும் அடையாளத்தைத் தெளிவாகக் கூறிய தோடு நில்லாமல்,

''ஆச்சி! அந்தப் பக்கத்திலிருந்துதான் நான் இப்ப வந்தனுன். அங்க, அந்த வீட்டில என்னவோ சண்டை போல இருக்கு. நான் நினைக்கிறன். அப்பாவுக்கு மகன் அடித்து...''

அதற்குமேல் நின்று கேட்கப் பொறுமையில்லாத சிவ காமி, பொடியன் குறிப்பிட்ட தெருவால் திரும்பி ஓடி ஞள். அந்த வயதிலும் இவ்வளவு வேகமாக ஓட அந்தத் தாய்க்கு எங்கிருந்துதான் சக்தி வந்ததோ!

நீண்டு சென்று கொண்டிருந்த அந்தத் தெருவின் இரண்டாவது சந்தியில், பொடியன் சொன்ன மோகன் ஸ்டோருக்கு முன்னல் கூடி நின்ற நாலைந்து பேரிடம் முருகனின் பெயரைச் சொல்லி அவனுடைய வீட்டை விசாரித்தாள்.

''இப்பதான் கொஞ்ச நேரத்திற்கு முன்னல் முருகன் ஆரையோ ஏத்திக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போருன்!''

நின்றவர்களில் ஒருவன் அவளுக்கு விடை கூறினுன். இன்னுமொருவன்,

''ஆர் நீங்க? எங்கேயிருந்து வாறீங்க? முருகனுக்குச் சொந்தக்காரரா?'' என்று கேட்ட கேள்வியை காதில் வாங்கிக் கொள்ளாது சிவகாமி வைத்தியசாலையை நோக்கி ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினுள்.

வைத்தியசாலை வாசலை நெருங்கிய பின்பே சிவகாமியின் கால்கள் வேகத்தைக் குறைத்துக் கொண்டன. வாசலில் முன்பு முத்திரை விற்றுக் கொண்டிருந்த இடத்தில் குந்திக் கொண்டிருந்த பொடியன் ஒருவன் கொடுத்த தகவலின்படி எட்டாம் வார்ட்டைத் தேடிப் பிடிப்பதில் முனைந்தாள்.

''எணே கிழவி, எங்க அவசரமா போரு? இதென்ன உங்கட அப்பாட வீடா? நினைச்ச நேரம் எல்லாம் உள்ள போக. அப்பிடி அந்த ஆக்களோட இரு. மத்தியானம் 12 மணிக்குத்தான் வாட்டுல இருக்கிற ஆக்களைப் பார்க்க விடுவாங்க. இப்ப ஒருவரையும் பார்க்க ஏலாது.''

இரண்டாவது கட்டிட வாசலில் ஸ்டூல் ஒன்றின்மேல் மார்புப் பட்டியோடு குந்தியிருந்தவன் கர்ண கடூரமான குரலுடன் இட்ட கட்டளையைக் கேட்டதும், சிவகாமிக்கு சப்த நாடியும் அடங்கிப் போய்விட்டது. மருந்து வாங்க வரும் வருத்தக்காரர் இருப்பதற்காக போடப்பட்டிருந்த பலகை வாங்கில் நிலை கொள்ளாது தவித்துக் கொண்டே குந்திவிட்டாள்,

# 15.

அந்த அரசினர் வைத்திய சாலையில் மேல் மாடியிலிருந்த எட்டாம் வார்டின் ஒரு தொங்கலில் மூலையிலிருந்த கட்டிலில் கடந்த மூன்று நாட்களாகப் படுத்திருக்கும் நோயாளியின் முகத்தில் பரவியிருந்த வேதனை, அவனுடைய காயங்களின் ஆழத்தை தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

விடிந்ததிலிருந்து, காயங்களின் எரிவு கூடியிருந்தது. தலையைச் சுற்றி கட்டியிருந்த மெல்லிய பண்டேஜ் துணி கூட கனமான இரும்பாகக் கனத்துக் கொண்டிருந்தது. மூன்று நாட்கள் தொடர்ந்து படுக்கையிலேயே இருந்ததினால் ஏற்பட்டிருந்த உடல் நமைச்சலைத் தாங்க முடியாது அவன் வலதுபுறம் ஒருக்களித்து திரும்பிப் படுத்தான். கால்களை மடக்கமுடியாதபடி காயங்களுக்கு கட்டியிருந்த கட்டுக்கள் இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தன.

டொக்டரின் ஆலோசனைப்படி இந்த மூன்று நாட்களும், உடம்பைச் சரிக்காமல், நிமிர்ந்து படுத்து, வைத்தியசாலைக் கட்டிடத்தின்முகட்டையே பார்த்துக்கொண்டு அதில் அடிக்கப்பட்டிருந்த சீலின் பலகையில் ஏற்பட்ட வெடிப்பைப் பயன்படுத்தி குடியிருக்கும் புறுக்களின் போக்கு வரவு, சல்லாபங்களையே பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன அவனுக்கு, இப்போது அந்த வார்டின் வலது பக்கத்தைப் பார்க்க முடிந்ததில் வேதனையின் மத்தியிலும் சிறிது ஆறுதல் ஏற்பட்டது.

அந்த வார்டின் மறுமுனையிலிருந்த கட்டிலின் மேல் விரிப்பு மாற்றப்படுகிறது.

'பாவம் யாரோ ஒரு புது நோயாளிக்கு, அந்தக் கட்டில் தஞ்சம் தரத் தயாராகிறது போல' என்று அவன்மனதுள் எண்ணிக்கொண்டிருந்த அதே வேளையில், அவனைக்

கடந்து ஸ்ரெட்சர் ஒன்றைத் தள்ளிக்கொண்டு நாலைந்து பேர் சென்றுகொண்டிருந்தனர்.

ஸ்ரெட்சரில் கிடந்தவனின் தலையிலும் இடுப்பிலும் காலிலுமாக அந்த நாலைந்து பேரும் சேர்ந்து தூக்கி மறு தொங்கல் கட்டிலில் வளர்த்தினர்.

''அடிபட்டதில் இரத்தம் வெளில கனக்க போயிற்றுது. அதோட ஆளுக்கு வயசும் போயிற்று. கொஞ்சம் கரைச்சல்தான்.''

நடந்து வந்த கங்காணி ஒருவன், யாரிடமோ கூறிக் கொண்டிருந்தது அந்த நோயாளிக்குத் தெளிவாகக் கேட்டது.

பக்கத்துக் கட்டிலின் மேல் கிடந்த வீரகேசரிப் பேப்பரை கைநீட்டி எடுத்தான். மடித்தாற்போலிருந்த இரண்டாம் பக்கத்தில் அவனுடைய கண்கள் மேய்ந்தன.

'தந்தை ஏசியதால் தனயன் தற்கொலை.'

தலையங்கத்தைப் படித்ததும் அவனது வாய் முணுமுணுத்தது.

''எவ்வளவு மடத்தனமான வேலை. இப்பத்த இளம் பொடியன்கள் எல்லாம் கெதியாக உணர்ச்சி வசப்பட்டுடுருங்க. அதனால் எதையும் கெதியா முடிச்சிடுருங்க.''

இப்படி எண்ணியவனுக்கு தன்னையறியாமலே சிரிப்பு வந்தது.

'மற்றவங்களைப் பற்றி என்னத்தைச் சொல்றது? நான் சரியாக இருந்திருந்தால் இன்றைக்கு இப்பிடியா இருப்பேன்? நான் பிறந்து, வளர்ந்து, படித்த இந்தடவுன்லேயே அனாதை போல ஆஸ்பத்திரில கிடக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறேன் என்றால் அது என்ர அவசர புத்தியாலதானே!

என்னையும் ஒரு மனிசனாக்க எத்தனை சந்தர்ப்பங்கள் காத்திருந்தன? அத்தனையையும் தூசாகத் தூக்கி எறிந்து, எனது சொந்தத் திறமையிலும் இளமையிலும் முழு நம்பிக்கை வைத்து நான் ஆடிய ஆட்டந்தான் எவ்வளவு?

நல்ல குடும்பத்தில் பிறந்து நல்லதொரு தகப்பனை பெற்று, பட்டப் படிப்பையும் முடித்துள்ள நான் இவ்வளவு காலமும் சாதித்தது என்ன?

ஒன்று இரண்டா?

திருக்கோணமலையில் தரமான நாடகங்களை மேடையேற்றுவதில் ஆற்றலும் அனுபவமும் கொண்ட கலைவாணி நாடக மன்றத்தினர், தங்களது கலை வாழ்வின் பத்தாண்டு நிறைவை சிறப்பான விழாவாக கொண்டாட தீர்மானம் எடுத்த வேளையில் நான் இணைச்செயலாளர்களில் ஒருவனுக இருந்தது மன்றத்தின் துரதிஷ்டமோ அல்லது என்னுடைய அதிஷ்டமோ தெரியாது.

நடிப்பாற்றலில் எனக்கிருந்த அலாதிப்பற்று, கண்டவர்களை உடனடியாகக் கவரும் தோற்றம், எதையும் கலையுணர்வோடு வெளியிடும் வல்லமை, கனிவாகக் கதைத்து மற்றவர்களை நம்பச்செய்யும் சக்தி, இவையாவும் சேர்ந்து என்னையொரு கதாநாயகனுகவே பரிமளிக்கச் செய்தது.

ஒத்த உணர்வுள்ள கலைஞர்களின் அயராத உழைப்பின் அறுவடையாக ஒரே நேரத்தில், இரண்டு நாடகங்களை மேடை ஏற்றுவதற்கான முயற்சியின் இறுதிக் கட்டம். பத்தாண்டு காலத்தில் நமது மன்றம் சாதித்தவை பற்றியும், அதற்குத் துணையாக நின்றவர்களின் தன்னலமற்ற தியாக உணர்வுகளையும், கலாரசிகம் எடுத்துக் காட்ட கைந்நூல் ஒன்றையும் அச்சிடுவதற்கான ஆலோசனை எடுக்கப்பட்ட போது, அச்சுச் செலவை விளம்பரம் சேகரிப்பதன் மூலம் சமாளிக்கலாம் என்ற கருத்தை நான் கூறியபோது மன்றமே என்னைப் பாராட்டியதுமன்றி, அந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றும் பணிய்யையும் என்னிடமே ஒப்படைத்த வேளை, என்மீது அவர்கள் வைத்த நம்பிக்கைக்கு எந்த விதத்திலும் ஊறு விளைவிக்கக் கூடாது என்ற சங்கல்பத்துடனேயே பணியைப் பொறுப்பேற்றன்?

ஆனால்... என்னுள் ஏற்கனவே குடியிருந்த ஊதாரித் தனம் நாளாந்தம் சேகரிக்கப்பட்ட விளம்பரப் பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கத் தொடங்கியது.

கடைசியில், அச்சடிக்கப்பட்ட கைநூல்களை எடுத்து வர மன்றத்தின் தலைவரும் பொருளாளரும் கொழும்புக் குப் புறப்பட்டபோது, பணத்தைத் தலைவரிடம் கொடுத் தனுப்புவதாக பொருளாளரிடமும், பொருளாளரிடம் கொடுத்தனுப்புவதாக தலைவரிடமும் சொல்லி எப்படியோ அவர்களை அனுப்பிவைத்தேன்.

பாவம் அவர்கள். என்பேச்சை நம்பி அச்சகத்திற்கு சென்ற பிறகே பணம் கொண்டுவரப்படாத விஷயத்தை அறிந்து, கொழும்பில் தெரிந்த நண்பர்களிடம் பணத் தைச் சேகரித்து அச்சகத்திற்குக் கொடுத்து கைநூல்களைக் கொண்டுவந்து சேர்த்து விட்டார்கள்.

அன்றைக்கே அவர்கள் என்னை அடித்து நொறுக்கி யிருந்தார்கள் என்றால், ஒருவேளை நான் இந்த இழிவான நிலைக்கு வருவது தடுக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், அவர்கள் 'நண்பர்கள்' என்ற பெருநோக் கோடு என்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். நானும் மெதுவாக மன்றத்தைவிட்டு ஒதுங்கிக் கொண் டேன்.

அதன் பிறகாவது என்நிலை மாறியதா?

கப்பல் கொம்பனி ஒன்றில் கிடைத்த வேலையில் கை நிறையச் சம்பளம் பெற்றபோது சும்மா இருந்தேனா? வருத்தம் என்று சொல்லி லீவில் நின்ற ஒருவனின் கையெழுத்தைப்போட்டு அவனுடைய சம்பளத்தை எடுக் கப்போய் அகப்பட்டு அந்த வேலைக்கே முழுக்குப் போட வேண்டியதாயிற்று.

கையில் காசில்லாத போதுதான் நிதான புத்தி வரும் என்று சொல்கிறார்கள். ஆனால், நடந்து முடிந்த என்

வாழ்க்கையைப் பொறுத்தவரை புத்தி வந்ததாகத் தெரிய வில்லை.

'டொக் டொக் டொக்'

பூட்ஸின் ஒலி வைத்தியசாலையில் நிலவிய அமை தியை விரட்டியடித்தது. ஒவ்வொரு கட்டிலையும் நெருங்கி, நோயாளிகளைப் பார்வையிட்டு மருந்து எழுதிக்கொடுத்து விட்டு, கீழே இறங்கிப் போய்விட்டார் டொக்டர்.

தடைப்பட்ட என் சிந்தனை மீண்டும் தறிகெட்டு ஓடி யது.

மாஸ்டராயிருந்த என்னுடைய அப்பா எவ்வளவு தூரம் என்னைக் கண்டிச்சார். இரத்தத் துடிப்பான அந்த நேரத்தில் அவருடைய கண்டிப்புகள் எல்லாம் விசர்க் கதைகளாகவே எனக்குப் பட்டன. இப்போது அவைகளை நினைத்துப் பார்க்கும்போது இதயம் அழுகின்றது.

பெற்ற தகப்பனையே அவமானப்படுத்தி விட்டு, ஊரை விட்டே ஓடிப்போன எனக்கு, கைநிறைய இருந்த பணப் புழக்கத்தினால் பலர் நண்பர்களாக மாறினார்கள். புதிய பழக்கங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டன. கொண்டு போன பெரிய தொகையையும் எண்ணி ஒரு மாதத்தில் தீர்த்துக்கட்டிவிட்டு திகைத்தபோது, நண்பர்கள் ஒருவரை யும் என்னால் காணமுடியவில்லை.

கடைசியில் இப்படி ஒரு அவல நிலைக்கு நான் ஆளா வேன் என்று கற்பனைசெய்து கூடப்பார்க்கவில்லை.

என்னுடைய கட்டான தேகமும் எடுப்பான தோற்ற மும் காணுகின்ற—கேட்கின்ற எதையும் அச்சொட்டாக அப்படியே திருப்பிச் செய்து— சொல்லிக் காட்டுகிற திறமையும் கொண்டு எல்லாவற்றையும் செய்து முடிக்க லாம் என்று எண்ணி எப்படியாவது சினிமாத் துறைக் குள் புகுந்துவிட நான் எடுத்த முயற்சிகள் கடைசியில் என்னுடைய மனைவியை இழப்பதற்குத்தான் உதவியது.

நான்தான் அசல் சோக்குப் பேர்வழி என்று பார்த் தால் என்னோடு வந்தவள் அதைவிட மோசமான சோக்

காளியாக அமைந்துவிட்டது எனது இன்றைய அவல நிலைக்கு இன்னொரு காரணமாகப் போயிற்று. யாருக்காக நான் என்னைப் பெற்றவர்களுடைய முகத்தில் கரியைப் பூசினேனோ அவளே என்னுடைய முகத்தில் கரியைப் பூசி என்னை ஏமாளியாக்கிவிட்டாள்.

அவள் சரியான முறையில் நடந்து என்னையும் முறையாக வழி நடத்தியிருந்தால் சிலவேளை, நான் இப்படி தனிமையில் விரக்தி மனப்பான்மையோடு சீவிக்க வேண்டிய துர்ப்பாக்கியமான ஒரு நிலைக்குத் தள்ளப்படாமல் இருந்திருக்கலாம்.

மணி அடித்துவிட்டது.

மத்தியான நேரத்தில் வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளைப் பார்ப்பதற்காக வெளியே காத்திருப்பவர்களை உள்ளே அனுமதிப்பதற்காக அடிக்கப்பட்ட அந்த மணிச் சத்தத்தைக் கேட்டதும் சிவகாமி துடித்துப் பதைத்து எழுந்தாள்.

'கணவனின் உடல்நிலை' எப்படியிருக்கிறதோ என்ற ஏக்கத்திலிருந்த அவள், முன்னால் முட்டிமோதிச் சென்று கொண்டிருந்த சனங்களை விலக்கிக்கொண்டு எட்டாம் வார்ட்டுக்குள் நுழைந்தாள்.

ஒவ்வொரு கட்டிலாக பரபரப்போடு பார்த்துக் கொண்டுவந்தவள், தொங்கல் கட்டிலில் குவிந்து நின்றவர்களை விலக்கிக்கொண்டு புகுந்தாள். மூச்சுப் பேச்சில்லாமல் தலையில் பெரிய கட்டுடன் கட்டிலில் கிடந்த கணவனின் முகத்தைக் கண்டதும் கதிகலங்கிப்போனாள். வாயிலும் வயிற்றிலும் கையால் அடித்துக் கொண்டு கதறினாள்.

வீடு தேடி வந்த தகப்பனை விரட்டி அடித்ததினால் இப்படிக் காயங்களோட ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவர வேண்டிவந்துவிட்டதே என்ற கவலையில் மூழ்கிப்போயிருந்த முருகனுக்கு அங்கே தாயைக் கண்டதும் தலைசுற்றியது.

அம்மா இந்த நேரத்தில் எப்படி இங்கு வந்து சேர்ந்தாள்? என்ற திகைப்பில் அவளை வாங்க என அழைக்க மறந்தவனாக இயக்கமற்று கல்லுப்போல் நின்றிருந்தான்.

கட்டிலைச் சுற்றி நின்றிருந்த நாலைந்து பேர்களில் முருகனின் உருவத்தைக் கண்டதும் சிவகாமியின் ஆவேசம் பல மடங்காகி கொழுந்துவிட்டெரிந்தது.

"அட பாவி! நீயும் ஒரு மனுஷனாடா? மிருகமடா மிருகம். உனக்காக சீவியம் முழுக்க உழைச்சுக் கஷ்டப் பட்டது போதாது எண்டு, கடைசிக் காலத்தில சேர்த்து வச்சிருந்த பணத்தை எல்லாம் உனக்காக அள்ளிக் கொண்டுவரச்சொன்ன இவரையா அடிச்சுப் போட்டிருக்கிறாய்...? பெற்றஅப்பனையே கைநீட்டி அடிக்கிற அளவிற்கு அப்பிடிஎன்னடா கொடுமை உனக்குச் செய்திருக்கிறார்?

என்னமோ உனக்குச் சரியான கஷ்டமென்று உன்னைக் காப்பாற்ற, வீட்டுல வச்சிருந்த பணத்தை எல்லாம் மடியில இறுகக் கட்டிக்கொண்டு வந்த என்னை மூளி ஆக்கிறதுக்காகவா இப்பிடிச் செய்திருக்கிறாய்?

பெத்து வளர்த்துவிட, இடையில வந்த எவளோ ஒருத்திட கதையைப் பெரிசா நினைச்சி நீங்கஎெல்லாம் ஓடிப்போக, எனக்கு எண்டிருந்த இந்த ஒரே ஒரு சீவனையும் அடிச்சி முறிச்சிருக்கிறீயேடா!

எண்ட வாழ்க்கையைக் குலைக்க முடிவு செய்த நீ ஒரு நாளும் நல்லா இருக்கமாட்டாய். பெத்தவங்கட வயிறு எரிய எரிய நீ உருப்படவே மாட்டாய்.

களைச்சு விழுந்த இந்த தள்ளாத வயசிலும் உனக்கு உதவுறதுக்காக சேர்த்து வச்சுக்கொண்டுவரச் சொன்ன பணம் இந்தா மடியில இருக்கு. இந்தப் பணத்தில ஒரு சதம்கூட உனக்குத் தரமாட்டன். இந்தப் புண்ணியவான்ர பணம் உன்னப்போல ஊதாரிக்கு உதவவிடமாட்டன்."

பெற்று வளர்த்த பிள்ளைகளினால் நிராதரவாகக் கைவிடப்பட்ட ஒரு நிலையில், அந்தத் தாய் அதுவரை அனுபவித்த துன்பங்களுக்கெல்லாம் காரணமாய் இருந்த வனை நேரில் காணக்காண சிவகாமிக்கு ஆத்திரம் குமுறிக் கொண்டு புறப்பட்டது.

உணர்ச்சி தொண்டையை அடைக்க, பொங்கிவந்த கண்ணீரை வழித்தெறிந்தவாறு பொரிந்துதள்ளிக் கதறி னாள் சிவகாமி.

அந்த வார்டிலுள்ள, எல்லா நோயாளிகளையும் பார்ப்பதற்காக —சுகம் விசாரிப்பதற்காக— உணவு கொடுப்பதற்காக—ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அடித்து மோதி வந்துகொண்டிருக்கும்போது தான்மட்டும் தனி மையில், அனாதையாக—விசாரிப்பதற்கு ஒருவரும் அற்ற வனாக — எல்லாராலும் கைவிடப்பட்டவனாக இருக்க நேர்ந்த துரதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி இதயத்தால் அழுதுகொண்டிருந்த தொங்கல் கட்டில் நோயாளிக்கு மறு தொங்கலிலிருந்து கிளம்பிய அந்தத் தாயின் கத றல் — அதனூடே தெறித்து விழுந்துகொண்டிருந்த சொற்களின் வேகம் —அவை அடக்கியிருந்த தாக்கமான சம்பவங்களெல்லாம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மெல்ல நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்துகொண்டு அவ சர அவசரமாக கதறல் வந்த திசையில் இருந்த கட்டிலை யும் அதனைச் சுற்றி இருந்தவர்களையும் ஊடுருவல் செய் தான்.

'கட்டிலின் தலைமாட்டில், கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கிறது... தம்பி முருகன் அல்லவா?

கட்டிலுக்குப் பக்கத்தில் கதறிக் கதறி கண்ணீர் விட் டுக் கொண்டிருப்பது... அம்மா சிவகாமிதான். அப்படியா னால்... அந்தக் கட்டிலில் தலையில் கட்டுடன் மயக்கமாகக் கிடப்பது...?''

சிவகாமியின் திடீர் வரவிலும் அவளுடைய கதறலி லும் கிறங்கிப் போய் நின்றவர்களுக்கு, அந்த வார்டில் மறு தொங்கலில் ஒரு உருவம் தங்களையே பாச உணர் வோடு உற்று நோக்கிக் கொண்டிருப்பதையோ, அன்றி மயங்கிய நிலையிலிருந்த தாமோதரம் நினைவு மீண்டு சற்று அசைந்து கொடுப்பதையோ அவதானிக்க முடியாது போயிற்று.

தாமோதரத்தின் உதடுகள் மெல்லப் பிரிந்தன.

''சிவகாமீ!''

கிணற்றுக்குள்ளிருந்து வரும் ஒலியாக குழைந்த அந் தக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள் சிவ காமி.

''இதென்ன கோலம் உங்கட? இப்பிடிச் செய்திட் டானே இந்த உலுத்தன். இந்தப் பாவிக்காகவா என் னைப் பணத்தோட வரச் சொல்லி அனுப்பினனீங்க. இந் தக் கோலத்தில உங்களப் பார்க்கிறதுக்காகவா வரச் சொன்னீங்க?''

கண் விழித்த கணவனின் அருகில் கதறிக் கொண்டே நெருங்கினாள் சிவகாமி.

'அப்படிப் பேசாதே!' என்று கையால் ஆட்டி சைகை செய்தார் தாமோதரம்.

''சிவகாமீ! கொண்டு வந்த பணத்தை எடுத்து முதல்ல முருகனிடம் குடு.''

தாமோதரத்தின் குரல் தளதளத்து, இறுக்கமில்லா திருந்தது.

மகனின் கொடூரச் செய்கையை தாங்கிக் கொள்ள முடியாது இதுவரை கதறியழுத அந்தத் தாய் கணவனின் வேண்டுகோளை ஒருபோதும் மறுத்துப் பழக்கப்பட்டி ராத சிவகாமி அழுகையை அடக்கிக் கொண்டு பெட்டிப் பாம்பானாள்.

129029.



மடியில் சொருகியிருந்த முந்தானையை வெளியில் எடுத்து நுனியை அவிட்டு, சீலைத் துண்டில் பத்திரமாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து முருகனிடம் நீட்டினுள்.

நடுங்கும் கரங்களால் முருகன் பணத்தைப் பெற்றுக் கொண்டு தந்தையைப் பார்த்தான். அவனுடைய கண்கள் குளமாகியிருந்தன.

உரிய இடத்தில் உரிய தொகை ஒப்படைக்கப்பட்ட நிகழ்ச்சியில் நிம்மதி கொண்டவராய் தாமோதரம் மூச்சை நன்ருக இழுத்து விட்டுக்கொண்டார். ஒவ்வொரு வார்த்தையாக அவருடைய வாயிலிருந்து வெளி வந்தது.

''சிவகாமீ! முருகன் ஆர்? உன்ர மகன். அவனுக்கா நீ சாபம் போடுகிருய்? கூடாது சிவகாமி. அவனை ஆசீர்வதிச்சு வாழ்த்து சிவகாமீ, வாழ்த்து. 'என்ர மகனே முருகா! உனக்குப் பிறக்கிற பிள்ளையாவது, வயது போன காலத்தில் உன்ர கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளி விடாம இருக்க வேணும்' எண்டு அவனைப் பார்த்து வாழ்த்து சிவகாமி.''

கெதியா வாழ்த்து சிவகாமி, என் காதில் அந்த வார்த்தைகள் விழட்டும்.''

தாமோதரத்தின் வார்த்தைகள் பலவீனமான மூச்சோடு கலந்து வேகம் குறைந்து காணப்பட்டன.

''அப்பா...''

நெஞ்சு வெடித்து முருகன் அவரின் காலடியில் விழுந்து கதறினுன்.

வார்டின் மறு தொங்கலில் இருந்த கட்டிலில் படுத்திருந்து இவையாவற்றையும் கண்ணீர் வடித்தவாறே கவனித்துக் கொண்டிருந்த அந்த நோயாளியிடமிருந்து கிளம்பி வெடித்த கதறல் வைத்தியசாலைக் கட்டிடத்தையே அதிர வைத்தது.

''ஐயோ அப்பா.''

தாமோதரம் கேட்ட கடைசி வார்த்தை அதுதான்.

புத் - வெ! - EE/74
[illegible]/12 [illegible] A002
[illegible]/1/86 [illegible] D005
12/2/86 [illegible] A022
16/3/86 [illegible] A008
16/7/86 புதுன் 17004
18/8/86 [illegible] A007
16/11/86 [illegible] A035
10/2/87 [illegible] 87/ A027
18/6/87 [illegible] 87/ A032
18/12/87 [illegible] A016
[illegible]/12/ [illegible] A081
3/[illegible] [illegible] A043
[illegible]/6 [illegible] 88/ A[illegible]
8.2.90 [illegible] 90/ B[illegible]
29.3.90 [illegible] B247
5.4.90 [illegible] B247
13.4.90 [illegible] B245
8.7.90 [illegible] B233
20.8. [illegible]. B209
6.9.90 [illegible] B247
12.7.[illegible]. B24
18.5.9 B785
~~23.5. [illegible] A[illegible]~~
23.5 [illegible] B2[illegible]

[illegible] LIBRARY

3333

# இதயங்கள் அழுகின்றன

"பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பார்கள். இந் நாவலில் வரும் பெற்றோரும், தம் முதுமைக் காலத்தில் பிள்ளைகள் மூலம் வாழ்க்கை வளமாகும் என எண்ணியிருந்தார்கள். அவர்களின் நம்பிக்கைகள் சிதைந்தபோதும், பிள்ளைகளின்மேல் கொண்ட பாசம் குறையவே இல்லை. ஒரு இலட்சியப் பெற்றோர்களின் உணர்ச்சி மிக்க கதையைப் படிக்கும் இதயங்கள் அழத்தான் செய்யும்.

வீரகேசரி பிரசுரம் - 61